
கல்கி

KALKI 18.8.85 ரூ. 1.50.




கர்நாடகா சிறப்பிதழ்



NEW!

POWER PACKED SURF



புதிய பவர் பேக்டு ஸர்ஃப்.

பூரிக்குது இதன் புத்தமைப்பு சக்தி, பொங்குது இதுவரை இல்லாத ஏற்றமான ஆற்றல்: ஆழ ஊடுருவித் துப்புரவாக்குகிறது—உங்கள் வெள்ளைத் துணிகள் எல்லாம் ஒப்பற்ற வெள்ளை-வெளேர், வர்ணத் துணிகளோ உன்னத ஒளிமயம்.

அதே சமயம், துணிகளின் புதுமை காத்து நெடுநாள் வாழ்விக்கிறது: வெளுக்கும் ஒவ்வொரு சட்டையும் ஒவ்வோர் ஆடையும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு ..புத்தாடைபோல் வெளுப்பு...

சலவைக்கு சலவை பொலியும் புதுமை!

புதுமை தவழும் புதுமணம்: கமழ்ந்த வண்ணம் இருக்கும் உங்கள் துணிகள்மீது—சுத்தம் தவழும் புத்தம் புதுமை, பக்கத்தில் இருப்பதே இனிமை.

ஜோரான புதிய பேக்: சக்திச் சுரங்கமான இத் தயாரிப்புக்கு உற்ற பொருத்தம்.

வாரீர் இன்றே வாங்கிக்கொள்வீர் பவர் பேக்டு ஸர்ஃப்.

ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

LINTAS-SU-325-2416 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

ஒரிஸ்ஸாவில் பட்டினி! கேரளாவில்..?

பாலைக் கொண்டுபோய் பள்ளத்தில் கொட்டுகிறார்கள்!

-பரபரப்பான தகவல்கள்

கேரள மாநிலத்திலுள்ள வயநாட்டில் பாலைக் கேன்களைக் கொண்டு போய்ச் சாலையோர வாய்க்காலில் கொட்டி வீணாக்குகிறார்கள். அதை நேரில் சென்று பார்த்து வந்த நமது நிருபர் எழுதுகிறார்.......

இரவு எட்டரை மணிக்கு, வயநாட்டிலுள்ள சுல்தான் பத்தேரி என்ற சிறிய டவுன்ஷிப்பில் பஸ்ஸிலிருந்து இறங்கியவுடனேயே, இளைஞர் ஜேம்ஸிடம்தான் முதலில் விசாரித்தோம். "உண்மையாயிருந்தால் அக்கிரமம்தான். ஏழை பாழைகளுக்காவது கொடுக்கக் கூடாதா?" என்றார் செயின்ட் மேரி கல்லூரியில் பி.காம். படிக்கும் அந்த மாணவர். "நீங்கள் கேட்டாலும் உண்மையைச் சொல்லுவார்களோ என்னவோ?" என்றார்.

பிரதான சாலையிலே உள்ள கல்பகா ஓட்டல் முதலாளி பாலன், "அப்படி எல்லாம் ஒன்றுமில்லை... தினசரி அப்படி கொட்டுவார்களா என்ன? கோழிக்கோட்டுக்குக் கூட இந்தப் பால் சொசைட்டிக்காரர்கள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இங்கே தேவைப்படுகிறது என்று சொன்ன பிறகு, அனுப்புவதை நிறுத்திவிட்டார்கள். ஜூன் மாதம் ஒருமுறை, இருமுறை இப்படி நிகழ்ந்ததுண்டு. அதிலும், பாலிலிருந்து வெண்ணெய் எடுத்தபிறகுதான் கொட்டினார்கள். இதை விசாரிக்கவா இத்தனை தூரம் வந்தீர்கள்?" என்று கேட்டார்! (இவரது தினசரித் தேவை 75 லிட்டர்; இந்த சொசைட்டிதான் தருகிறதாம்).

பத்திரிகைக்காரன் என்றதும் கொஞ்சம் இறங்கி வந்த மனிதர், "ஆமாம்.... இங்கே மலையாளத்தினசரியில் படத்துடன் ஒருமுறை போட்டிருந்தார்கள். ஆனால் அப்போது ரம்ஜான் மாத நோன்பு.. அதனால் மீந்து போயிருக்கும். இப்படி செய்தி வந்தால், 'ஏன் ஆதிவாசிகளுக்காவது கொடுக்கலாமே' என்று யாராவது பிரச்னையைக் கிளப்பட்டும் என்றே

* பாலைக் கொட்டுகிறார்கள்



வெளியிட்டிருக்கலாம். கொட்டிய 'கேன்'களிலும் பால் முழுதும் இருந்திருக்காது. இருபத்தைந்து லிட்டர் இருந்தால் அதிகம்."

இது முழு உண்மையா, பாதியா, இல்லை முழுப் பொய்யா? பொழுது விடியட்டும் என்று காத்திருந்தோம்.

காலை ஏழுமணிக்கு மெயின் ரோட்டிலேயே ஒரு 'கேனி'லிருந்து பாலை விநியோகம் செய்து கொண்டிருந்தார் ஓர் இளைஞர்.

"இது எங்கேயிருந்து வருகிற பால்?" அந்த இளைஞரிடம் கேட்டோம்.

"சீரால் என்கிற இடத்திலிருந்து. இங்கிருந்து பத்து கிலோ மீட்டர். இது பத்தேரி பால் சொசைட்டியைச் சேர்ந்தது...."

"நீங்கள் அதன் ஊழியரா? உங்கள் பெயர்?"

"ஆமாம். என் பெயர் நாராயணன்."

"மிஸ்டர் நாராயணன், இங்கே காலையில் பாலை விற்கிறீர்கள். மாலையில் வயல் ஓரத்தில் கொட்டி வீணாக்குகிறீர்களாமே. உண்மையா?"

"ஆமாம்..... உண்மைதான். இப்போதும் கொட்டிக் கொண்டிருக்கிறோம். நேற்று—முந்தா நாள்கூடக் கொட்டியிருக்கிறோம் அரி வயலில்." சிறிதும் தயக்கமில்லாமல் பதில் வந்தது அவரிடமிருந்து.

உண்மை கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. பாலன் மாதிரி அவரும் சொல்லி இருந்தால் 'வயிற்றில் பாலை வார்த்தீரே' என்று வாழ்த்திவிட்டு, மறு பஸ்ஸைப் பிடித்து ஊர் வந்து சேர்ந்திருப்போம். ஆனால்.....

"உங்கள் சொசைட்டி செயலாளரைப் பார்க்க முடியாதா?"

"ஒன்பது மணிக்கு சொசைட்டி ஆபீஸ் திறக்கும். ஒருவேளை, இப்போது பால் கலெக்ஷன் செண்டரில் அவர் இருக்கலாம். போய்ப் பாருங்கள்!" என்றார் நாராயணன்.

போனோம்.

மடித்துக் கட்டிய வேட்டியும் பனியனுமாக, அந்தக் காலை வேளையில், கேன்களில் பல ஊழியர்கள் சைக்கிளில் கொண்டு வந்து அளந்து கொட்டும் பால் வரவை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் செயலாளர் சுகுமாரன். அருகே செக்கிங் இன்ஸ்பெக்டர்.

சுகுமாரன் அவர்களிடம் இது பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, அவர் ரியாக்ஷனுக்குக் காத்திருந்தோம். துளி கூட அலட்டிக் கொள்ளவில்லை மனிதர்.

"இங்கே கல்தான் பத்தேரி, அம்பலவயல் ஆகிய இடங்களிலிருந்து, 3000 லிட்டர் வீதம் வருகிறது. முப்பைநாடு, குன்னம்பற்றி, மீனங்காடி, புல்பள்ளி, மானந்தவாடி ஆகியவை தலா 1000 லிட்டர் கொடுக்கின்றன. மீதி 20, 22 பிரைமரி சொசைட்டிகள் தலா 500 லிட்டருக்குக் குறைவாகவே பால் தருகின்றன. ஆக, கிட்டத்தட்ட 20,000 லிட்டர் பால் தினசரி கிடைக்கிறது.


"பத்தேரி, நென்மேனி, நூல்புழா ஆகிய மூன்று பஞ்சாயத்துக்களிலிருந்து சேகரிக்கும் பால்தான், இதோ இங்கே பத்தேரி பால் சொசைட்டிக்குக் கொண்டு வருகிறார்கள். மொத்தம் 20,000 லிட்டரில், கோழிக்கோடு, கண்ணனூருக்கு 10,000 லிட்டர் போகிறது. பாக்கி வயநாட்டில் செலவாகிறது.

"கூடுதலாகப் பசுக்கள் பிரசவிக்கற சீசன், ரம்ஸான் நோன்பு, மழைக்கால (ஜூன்—டு—செப்டம்பர்) மாதங்களில் பால் கிடைப்பது ஏராளம். ஆனால் செலவு குறைவு.



* செயலாளர் சுகுமாரன்.

* கலெக்ஷன் செண்டர் வாசலில் (பால் வேன் நிற்கிறது)



"வயநாடு ஜனத்தொகை ஐந்து லட்சம். ஆளுக்கு ஒரு பெரிய தம்ளர் பால் இரு வேளை குடித்தாலே போதும். ஐந்து லட்சம் லிட்டர் செலவாகும். சாராயம் விற்கிறது சார் இங்கே, ஒரு லட்சம் லிட்டர்!

"இதே சொசைட்டியை இருபது வருஷங்கள் முன்னால் தொடங்கியபோது 65 லிட்டர். பால்சேமிப்புக்கு 15 லிட்டர் அன்றே அதிகப்படி. இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சியும், இந்த சொசைட்டியின் வளர்ச்சியும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான். இன்று 1985ல் 20,000 லிட்டர் உற்பத்தியில், 500 லிட்டர் பால் அதிகப்படி என்றால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை!"

"முன்பு ஒருமுறை நால்புரா என்னுமிடத்தில் அதிகப்படி பாலைக் கொண்டு போய்க் கொட்டினோம். 'நால்புராவில் பால்புரா' என்று தலைப்புக் கொடுத்து, மாத்ருபூமி தினசரி, செய்தி வெளியிட்டிருந்தது உண்மைதான். இப்போதும் அதிகப்படி பாலை வீணாக்காமல் இருக்கவே கூடுமானவரை முயலுகிறோம். ஆனால் —

"எத்தனை நஷ்டம் வந்தாலும் உற்பத்தியாளரிடமிருந்து பாலை வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். 'வேண்டாம்! கொண்டு போங்கள்!' என்றுசொல்லித்திருப்பி அனுப்புவதே இல்லை. அவர்கள் இந்த சொசைட்டி மெம்பர்கள். அவர்களைதிருப்பி அனுப்பினால் வெயில் காலத்தில் பால் குறைவாக உற்பத்தி ஆகும்போது, தரமாட்டார்கள். சில்லிங் சென்டர் ப்ளான்ட் குன்னம்பற்றாவில் மட்டும்தான் இருக்கிறது. இன்னொன்றுநிறுவ முயன்று வருகிறோம்.

பாலிலிருந்து நெய் எடுத்து விற்றால், நஷ்டம் பாதிதான் என்று (நெய் கிலோ 50 ரூபாய் + பத்து சதவீதம் டாக்ஸ்). இரண்டு க்ரீம் செபரேடர்கள் வைத்திருக்கிறோம். இரண்டில் ஏதாவது ஒன்று எப்போதும் ரிப்பேர். ஒன்று ஓடினால் அதிசயம். அது இயங்குவதற்கும் மின் சப்ளை தட்டுப்பாடு. மின் சப்ளை இருந்தாலும் வோல்டேஜ் மிக மிகக் குறைவு. அதனால் பகல் அல்லது முன்னிரவு நேரங்களில் அதை இயக்கவும் முடியாது. நடு இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் சரியான வோல்டேஜுடன் மின்சாரம் கிடைத்தாலும் என்ன பிரயோசனம்? இன்று அதிசயமாக இரண்டு மெஷின்களும் இயங்குகின்றன.... ஆக, இப்படியும் அப்படியுமாக, இந்த மூன்று மாதங்களில் கொட்டிய பாலின் மதிப்பு ஒரு லட்ச ரூபாய் இருக்கும். (பாலின் விற்பனை விலை, லிட்டருக்கு ரூ 3.70). இங்கு தயிரும் விற்கிறோம். பாலின் விலையேதான் அதற்கும்.



* இரண்டில் ஒன்று என்றும் ரிப்பேர்! (வெண்ணெய் பிரிக்கும் யந்திரம்)

"இப்படியே கொட்டிக் கொண்டுதான் இருக்கப் போகிறீர்களா?"

"என்ன செய்வது? 'மில்மா' என்னும் மில்க் பெடரேஷன் லாரிகள் இப்போது இங்கே வருவதில்லை. அவர்கள் வாகன எண்ணிக்கையைக் குறைத்துவிட்டார்கள். அதனால் இங்கே வருவதும் நின்றுபோய்விட்டது. அவர்களுக்கு கலெக்ஷன் பிராப்ளம் இல்லை. மார்க்கெட்டில் மட்டுமே ஒரு ஏரியாவில் கூடுதலாகக் கிடைப்பதை, இன்னொரு ஏரியாவில் கொண்டு போய் விற்க அவர்களுக்கு வசதி இருக்கிறது. எங்களுக்கு இல்லையே!

"ஏற்கனவே மெயின் பஸ் ஸ்டாண்ட் அருகே இருக்கிற 'மில்க்பூத்' மாதிரி இன்றைக்குப் பஞ்சாயத்துத் தலைவர் பி. ஸி. அகமது தலைமையில், இங்கே 'சங்கம்' அருகே ஒரு மில்க் பூத் திறக்கிறோம். பஸ் ஸ்டாண்ட் மில்க்பூத்தில்தினசரி ஆயிரம் தம்ளர் சூடான பால் (விலை ஒரு ரூபாய்) அதாவது 200 லிட்டர், விற்பனையாகிறது. அதே போல், இந்தப் புதிய 'பூத்'திலும் விற்பனை ஆகும் என்று நம்புகிறோம். அப்படியானால் இருநூறு லிட்டருக்கு ஒரு வழி பிறக்கும்.

"இரண்டாவது இந்த ஜூன் மாதம் பத்தாம் தேதி வயநாடு மாவட்ட கலெக்டர் சுசில் குமார் பாட்டியாவுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம் — அதிகப்படி பாலைக் குறைந்த விலைக்கு விற்கச் சம்மதிப்பதாக."

"என்ன சொல்கிறார் கலெக்டர்?"

"முதலமைச்சருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அவர் பரிசீலனை முடிந்த பிறகு விவரம் தெரிய வரும்."

"ஏழை ஆதிவாசிகளுக்குக் கொடுக்கலாம் என்கிறார்களே?"

"முன்பும் மானிக்குனி காலனியில், ஆதிவாசிகளுக்குத் தொடர்ந்து இரண்டு மாதங்கள் இலவசமாகக் கொடுத்தோம். இப்போதும் அப்படி ஏதாவது செய்ய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்...

"இங்கே ஐம்பது ஊழியர்கள் இருக்கிறார்கள். இந்தக் கட்டடம் எங்கள் சொந்தக் கட்டடம். பால்விற்பனையிலேயே லிட்டருக்கு ஐந்து பைசா கூடுதலாக வசூலித்துக் கட்டிய கட்டடம். மேலே அபெக்ஸ் பாங்க்குக்கு வாடகைக்குக் கொடுத்திருக்கிறோம்.

"எங்கள் சொசைட்டி இதுவரை அடல்ட்டரேஷன் கேஸில்மாட்டிக்கொண்டதே இல்லை. செக்கிங் இன்ஸ்பெக்டர் சுற்றிக் கொண்டே இருப்பார்."

''இந்த சொசைட்டி லாபத்தில் நடக்கிறதா. நஷ்டத்திலா?''

இதற்குப்பதில்சொல்லவில்லைசுகுமாரன். அரசு மான்யம் பெறும் கூட்டுறவு சங்கத்துக்கு நஷ்டம் என்றால் வரி செலுத்தும் மக்களுக்குத்தானே நஷ்டம்.

அவருக்குநன்றிசெலுத்திவிட்டுவெளியே வந்தபோது. சற்றுத் தள்ளி, சொசைட்டியின் ஆட்டோ—வேன் டிரைவர் சதானந்தன் சிநேகிதமாய்ப் புன்னகை புரிந்தார். அருகே கூப்பிட்டார்.

''சாரே! இந்தக் கொட்டுகிற அதிகப்படி பாலின் விலையை மெம்பர்களிடமிருந்து பிடித்து விடுவோம். மூன்று ரூபாய் பாலுக்கு 2.80தான் கொடுப்போம் விட்டருக்கு'' என்றார்.

''இரண்டு மாதமாகத் தினசரி கொட்டுகிறோம். ஆனால் கொட்டுவதைப் பார்க்கிறவர்கள், 'இங்கே கொட்டாதே. கொட்டாதே' என்று கூச்சல் போடுவார்கள். ஏனென்றால் ஒருவகைக் குமட்டல் நாற்றம் எடுக்கும். ஆனால்நான்யாருக்கும்கொடுக்கவும்கூடாது. அதனால் யாரும் பார்க்காத இடத்தில் மளமளவென்று கொட்டிவிட்டு வந்துவிடுவேன்.''

''நேற்று எங்கே கொட்டினீர்கள் சதானந்தன்?''

''கோகைப்பாறை என்ற இடத்தில்.''

''எத்தனை லிட்டர்?''

''ஆறேழு 'கேன்'களைக் காலி செய்தேன். ஒரு கேன் நாற்பது லிட்டர்.''

அதிர்ச்சியோடு திரும்பினோம்!

— சர்ருகேசி,

புகைப்படங்கள்:

வி. டி. மோகன்தாஸ்

அட்டையில்:

கர்நாடகா காட்சிகள்:

சிரவணபெள்கொள கோமடேச்வரர் சிலையைப் பார்க்க வந்தவர்கள்.

வண்ணப்படம்: யோகா

பெங்களூர் லால்பாக்கில்.

பூச்செடி கடிகாரம்.



ஸ்பாட் ஜட்



சிவாஜி கணேசனைச் சிம்மக் குரலோன் என்பார்கள். அவர் சிம்மக் குரல் ஏனோ பாராளுமன்றத்தில் ஒலிக்கவேயில்லை. வைஜயந்திமாலா பற்றிச் சொல்லத் தேவையில்லை. பொதுவாகப் பார்த்தால் பேசத் தெரிந்தவர்களுக்குப் பாராளுமன்றத்தில் இடமில்லைஎன்பதற்குஎடுத்துக்காட்டுத்தான் சென்ற தேர்தல்.

— இரா. செழியன்.

கல்விக் கண் திறந்தவர் காமராஜர். கல்விக்கு லஞ்சக் கண் திறந்தது அ. தி. மு. க. அரசு. எம். பி. பி. எஸ் சீட்டுக்கு இரண்டு லட்ச ரூபாய். பாலிடெக்னிக்குக்கு ஐம்பதாயிரம் ரூபாய் என்று இந்த ஆட்சியில் பட்டியல் போட்டு வசூலிக்கிறார்கள்.

— டி. யசோதா எம். எல். ஏ. (இ.காங்).

எந்த மந்திரிக்கும் இல்லாத அளவு இங்குள்ள போஸ்டர்களில் உங்கள் (வீரப்பன்) பெயர் பெரிதாகப் போடப்பட்டுள்ளது. இது போன்ற தவறுகள் இனிமேல் நடக்கக் கூடாது. முதலமைச்சர் எண்ணிக்கையில் ஒன்று என்றால், அமைச்சர்கள் எல்லாம் பூஜ்ஜியம்தான். ஒன்று என்ற எண்ணை வைத்துத்தான் பூஜ்ஜியத்திற்கு மதிப்பு வருகிறது.

— அமைச்சர் திருநாவுக்கரசு.

ஒரு மந்திரி பூஜ்ஜியம் என்று பேசினார். பூஜ்ஜியமா மந்திரி சபையில் இருக்கிறது? பூஜ்ஜியங்களையா எம். ஜி. ஆர். மந்திரி சபையில் வைத்தார்?

— முசிறிப்புத்தன்.

மோரில் உப்பு அதிகம் போட்டுவிட்ட மனைவியிடம் அதட்டிப் பேசக்கூடாது. ''உன் குடும்பமே தாராளமான குடும்பம். அள்ளிக் கொடுக்கும் பரம்பரை நீங்கள். அதனால்தான் மோரில் உப்பையும் அள்ளிப் போட்டுவிட்டாய். அதை மாற்ற சிறிது தண்ணீரைச் சேர்த்துவிடு!'' என்று பக்குவமாய்ப் பேச வேண்டும்.

— கிருபானந்த வாரியார்.



வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Glaxo
Complan
COMPLETE PLANNED FOOD
23
மூலதார சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான் — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
884. GLC. 120 Tm

பெங்களூர் 1985



பெங்களூர்—

பூங்கா நகரம்.

சோம்பேறிகளின் ஊரென்றும் ஒரு கருத்துண்டு.

ஆனால் இன்று தொழிற்சாலைகளின் நகரம், வேலை வாய்ப்புக்களின் நகரம். வெளியூர்வாசிகள் பெருகி விட்ட, நிரந்தரமாகி விட்ட நகரம். இந்த நிரந்தரம் உறுத்தல்களையும் எரிச்சல்களையும்—பீதியையும்—எழுப்பத் தொடங்கிவிட்ட நகரம்.

இனியும் சோம்பேறிகளாக இருக்கமுடியாதென்பதிலும் ஒரு சோகம் இருக்கிறது. என்றும் குழந்தைகளாய், பரபரப்பில்லாமல் இருக்க முடியாத சோகம். திடீரென ஒரு நாள் 'இந்தியாவிலேயே விலைவாசி அதிகமுள்ள' நகரின் பிரஜைகளாகி விட்ட சோகம் —இந்த விலை உயர்வுக்குக் காரணமான முகம் தெரியாத சக்திகளின் மீது கோபம்!

இரண்டு வருடங்களுக்கு முன் அமிதாப் பச்சன், எம். ஜி. ஆர். கட் - அவுட்கள் பிடுங்கியெறியப்பட்ட போது வெளியானது இந்தச் சோகமும் மனத்தாங்கலும்தான். வெறும் மொழி வெறியல்ல என்று புரிந்து கொண்டால் பெங்களூர்வாசிகளைப் புரிந்து கொண்டு விடலாம்.

அடிப்படையாய் பெங்களூர்வாசிகள் அமைதி விரும்பிகள். பெங்களூர் ஒரு தூங்கும் நகரம். நிறையச் சாப்பிடவும் தூங்கவும் அனுமதிக்கிற சீதோஷ்ண நிலை. வருடம் முழுவதும் இதமான வெந்நீரில் குளிக்க வைக்கும் சீதோஷ்ணநிலை. உடம்பைச் சீராட்டிக் கொள்கிற சுகவாசிகளாக்கும் இணக்கமான ஒரு நைச்சியம் இந்த ஊரின் காற்றில் உண்டு.

பெங்களூர்ச் சுவர்களில் 'கம்ப்யூட்டர் ஒழிக!', 'தேர்தல்களைப் பகிஷ்கரியுங்கள்' என்ற கோஷங்களுடன் 'பார்த்தீனியத்தை அகற்று!' என்ற கோஷமும் அவ்வப்போது இடம் பெறும். ஒரு செடிக் கூட்டத்துக்கெதிராக மக்களின் கிளர்ச்சி! பார்த்தீனியம் பிற ஊர்களிலும் உண்டு. ஆனால் அங்கெல்லாம் அதன் மகரந்தத் தூள் வாயுவெளியில் "செரித்து" விடுவதால் ஆபத்தில்லையாம். பெங்களூர் சீதோஷ்ண நிலையில் இது நிகழாததால் பிரச்னை.

சுவர்களில் வரிசையாக சினிமா போஸ்டர்கள். கிட்டத்தட்ட தமிழ்நாடு பாணிதான். ஆனால் 'மாபெரும் பொதுக் கூட்ட போஸ்டர்'கள் அபூர்வம். இந்திப்பட போஸ்டர்களின் விகிதாச்சாரம் அதிகம். இதற்கும் இங்குள்ள கணிசமான முஸ்லிம் ஜனத்தொகைக்கும் தொடர்பு உண்டு. ராஜ்குமார் அல்லது

அமிதாப் பச்சனுக்காகக் கையை உயர்த்தச் சொன்னால் முஸ்லிம்களின் கை அநேகமாக அலகாபாத்காரருக்காகவே உயரும். சிவாஜி நகரையடுத்த ரஸ்ஸல் மார்க்கெட், சாந்தினி சௌக், பிராட்வே, ஜுமா மசூதித் தெரு போன்ற நெரிசலான பகுதிகளும் தொடர்ந்து ஸெப்பிங்ஸ் ரோடு, பாம்பூ பஜார், ஹெயின்ஸ் ரோட், டானரி ரோட் ஆகியவையும் முஸ்லீம் ஆதிக்கமுள்ள பகுதிகள். இங்கெல்லாம் எப்போதாவது இரவில் பவர் கட் நேரத்தில் மாட்டிக் கொண்டால் யாராவது புர்க்கா அணிந்த ஸ்திரீ மீது மோதிக் கொள்கிற அபாயமுண்டு. பவர் கட் இந்த ஸீஸனில் அத்தனை கடுமையாயில்லை. ஆனால் ஒரே ஒரு நீர் மின் நிலையத்தை (ஷராவதி) நம்பியுள்ள கர்நாடக மாநிலத்தின் பவர் நிலைமை எப்போதும் பலவீனமானது தான். அண்மையில் ஜ்யோதி லிமிட்டெட் என்ற பரோடா நிறுவனமும் ஃப்ளோ



விண்ட் கார்ப்பரேஷன் என்ற அமெரிக்க நிறுவனமும் காற்றில் சுழலுகிற டர்பைன்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்கிற முறையைக் கர்நாடகத்தில் அமுல்படுத்தலாமென்ற யோசனையைத் தெரிவித்திருக்கின்றனர்.

டானரி ரோடு, மாஸ்க் ரோடையடுத்து பெங்களூர் ஈஸ்ட் ஸ்டேஷனுக்கு இருபுறங்களிலும் ஆங்கிலோ இந்தியர் வாழும் பகுதிகள். நிறைய கோல்ட் ஸ்டோரேஜ்கள், பேக்கரிகள். ஆங்கிலோ இந்தியர் ஒன்று ஏதாவது அலுவலகத்தில் வேலையாயிருப்பார்கள், மெக்கானிக்காக, இஞ்சின் டிரைவராக, ஸேல்ஸ்மேனாக, எக்ஸிக்யூடிவ்வாக இருப்பார்கள். அல்லது சொந்தத்தில் பேக்கரியோ கோல்ட் ஸ்டோரேஜோ வைன் ஷாப்போ டிபார்ட்மெண்டல் ஸ்டோரோ — திறந்து விடுவார்கள். இந்துக்களையும் முஸ்லிம்களையும் இந்திய கிறிஸ்தவர்களையும் போல இவர்கள் கண்ட கண்ட சில்லறை வியாபாரங்களில் ஈடுபட மாட்டார்கள், மரத்தடி வியாபாரங்கள் உட்பட. இந்தப் பிரதேசத்திலும் சரி, கோல்ஸ் பார்க்கையடுத்த — கான்வெண்ட் ஸ்கூல்கள் நிறைந்த — பகுதியிலும் சரி, பாதிரிமார்களையும் ஸிஸ்டர்களையும் நிறையப் பார்க்கலாம்.

மைனாரிட்டிகளால் நடத்தப்படும் பள்ளிகளை "ஒழுங்குபடுத்த" வேண்டுமென்ற கோஷம் தமிழகம் போலவே கர்நாடகத்திலும் எழுப்பப்பட்டு வரும் ஒன்று. ஆனால் இந்தி அல்லது ஆங்கிலம் தரும் பாதுகாப்பையும் அகில இந்திய வாய்ப்புக்களையும் தம் குழந்தைகளுக்கென யாசிப்பவர்கள் இந்தப் பள்ளிகளின் வாசலில்தான் க்யூவில் நிற்க வேண்டிய நிலைமை. பழைய பிரிட்டிஷ் பாணி ஸ்கூல் கட்டிடங்கள், வீடுகள் காரணமாய் இங்கெல்லாம் ஒரு பிரிட்டிஷ் வாடை.

கன்டோன்மெண்ட் பிரதேசம் முழுவதுமே ஒரு விதத்தில் மைனாரிட்டிகளின் பிரதேசம்



தான். ஆங்கிலோ இந்தியர்கள், இந்திய கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள். சிவாஜி நகரையடுத்த தர்மராஜா கோயில் தெரு முழுவதும் தமிழர் கடைகள், 'டவுனு'க்கோ திருவல்லிக்கேணிக்கோ வந்து விட்டோமோ என்ற மயக்கத்தை ஏற்படுத்தும். அல்சூர் ஏரியருகே மாலை வேளைகளில் நிறைய கொக்குகளையும் தமிழர்களையும் பார்க்கலாம். இருவருமே இந்நகரத்துடன் கலந்து விட்டனர். காமராஜர் சாலை, ஹெயின்ஸ் ரோட், லிங்கராஜபுரம், கமனஹள்ளி பகுதிகளில் தமிழர் கூட்டமும் தமிழ்ப் படங்கள் ரெகுலர் காட்சிகளில் ஓடும் தியேட்டர்களும் உண்டு. ரேணுகா தியேட்டரில் ஆண்டு முழுவதும் எம். ஜி. ஆர். படங்கள்.

எம். ஜி. ரோட், பிரிகேட் ரோட், கமர்ஷியல் ஸ்ட்ரீட், இங்கெல்லாம் மதக்குறியீடு களைக் களைந்த — உடுத்தும், பாணி, நடையுடை பாவனைகளில் கூச்சத்தைக் களைந்த— உயர் மட்டத்து நாகரீக மங்கையரைக் காணலாம். டில்லி கனாட் பிளேஸிலும் பம்பாய் நாரிமன் பாயிண்டிலும், கல்கத்தா பார்க் ஸ்டிரீட்டிலும் இதே மங்கையரின் நகல்களை நாம் பார்த்திருக்கக் கூடும். இதுதான் தேசிய நீரோடை. மல்டிநேஷனல் கம்பெனிகள், சிகரெட் கம்பெனிகளின் விளம்பரப் பலகைகள். க்வாலிடி ஐஸ்கிரீம், லிம்கா, காட்பரீஸ். ஆங்கிலம், இந்தி அல்லது நாலு தென்னிந்திய மொழிகளில் எது வேண்டுமானாலும் பேசி இந்த வீதிகளில் சமாளித்து விடலாம், கன்டோன்மெண்ட் முழுவதிலும்.

ஆனால் மல்லேஸ்வரம், சாம்ராஜ்பேட், பசவங்குடி, ஜய நகர் போன்ற ஸிடி ஏரியாக்களில் கன்னடம் தெரியாவிட்டால் கொஞ்சம் கஷ்டம். இந்தி, ஆங்கிலம் ஓரளவு துணை செய்யும். இந்திக்கு இங்கே எதிர்ப்பு இல்லை. ஆட்டோ டிரைவர்கள் பலர் இந்தி பேசும் முஸ்லிம்கள். பஸ் கண்டக்டர்களும் இந்தி புரிந்து கொள்வார்கள். தமிழும் தெரியும். ஆனால், இது இங்கே நேசத்தை ஊக்குவிக்கும் மொழியல்ல.

இதோ இந்த இளநீர் விற்பவனுக்கு நிறைய மொழிகள் தெரியும். எல்லா மொழியினருக்கும் வெயில் உறைக்கிறது, தாகமெடுக்கிறது. வெயிலின் ஒருமைப்பாட்டுச் சக்தி. ஆமாம், பெங்களூரிலும் கூட கோடையில் வெயில் உறைக்கத் தொடங்கிவிட்டது. குளிர்பானங்களுக்கு மார்க்கெட் உண்டாகி விட்டது. கரும்புச்சாறு, பழரசங்கள், லஸ்ஸி. அல்லது பேல் பூரி.

பேல் பூரிக்காரனையும் பல மொழிக்காரர்கள் மொய்த்திருக்கிறார்கள். பிஸிபேளா பாத், சௌசௌ பாத் சாப்பிட்டு அலுத்த கன்னடக்காரர்கள் உட்பட. இது இவர்களது துவேஷமில்லாத தன்மைக்கோர் உதாரணம். (இன்னொரு உதாரணம் நகரெங்கிலுமுள்ள 'ஐயங்கார் பேக்கரி' கள்) பொங்கல் தமிழகத்திலிருந்து இறக்குமதியானதைப் போல பேல் பூரி பம்பாயிலிருந்து. பெங்களூரின் லொகேஷன் அப்படி. மகாராஷ்டிரம் வழியே வடக்கத்திய பாணிகள், கலாசார அலைகள். தமிழகம், ஆந்திரா வழியே விரிவான தென்னிந்தியக் கலாசாரம், இரண்டும் இங்கே சந்திக்கின்றன.

• கப்பன் பார்க்.





பேல் பூரிக்காரன் நின்றிருப்பது எம். ஜி. ரோட், பிரிகேட் ரோட் சந்திப்பில். இங்கிருந்து பார்த்தால் தெரிவது பப்பர்ப்க் கலாசாரம்தான். அடுக்கு மாடிக் கலாசாரம். ஆனால் இன்னும் ஒரு **Fly over** கூட இல்லாத நகரம். பஸ்கள் 'ஒன் வே'யாக்கப் பட்ட குறுகிய தெருக்களில் ஊர்ந்து செல்கிற நகரம். அதோ, அந்த இருபத்தி நாலு மாடிக் கட்டிடத்தின் உச்சியில்தான் டாகோப்பி ரெஸ்டாரன்ட் இருக்கிறது: அம்ஜத்கானுக்குச் சொந்தமானது. இதே எம். ஜி. ரோடில் சற்றுத் தள்ளி ரஹேஜா அபார்ட்மெண்ட்ஸ். மிக கேந்திரமான இடத்தில் அமைந்துள்ள இந்த ஃபிளாட்டுகள் அடிக்கடி கைமாறுவதாகவும் ஒவ்வொரு முறையும் விலை மேலே மேலே, எகிறுவதாகவும் எதிரே ரென்ட் கண்ட்ரோல் ஆபீசில் வேலை பார்க்கும் வெங்கட்ராவ் சொல்கிறார். பெங்களூரின் பொருளாதாரத்தைக் குலைத்து வரும் பம்பாய்க்காரர்களைச் சாடும் இன்னொரு கோப இளைஞர். "ரென்ட் கண்ட்ரோல் மூலம் வீடு கிடைக்குமா?" என்று இவரைக் கேட்டால், "மாநில அரசு ஊழியரல்லாதவருக்குச் சிரமந்தான்" என்ற பதில் வருகிறது. மந்திரியின் சிபாரிசுக் கடிதமில்லாத கேஸ்கள் கவனிக்கப்படுவதில்லையாம்.

பத்து மாத அட்வான்ஸ் வாடகை கொடுத்தால்தான் வீடு. அதிலும் எப்போதும் குழாயில் தண்ணீர் வருமென்ற உத்தரவாதமில்லை.

"அட ராமா, மெட்ராஸ் மாதிரிதானா?"

"சில ஏரியாக்களில் வரும். கனகபுரா — ஹெக்டேயின் தொகுதி — ஜே. பி. நகர், புன சங்கரி, ஜயநகரின் சில பிளாக்குகள், இங்கெல்லாம் காவேரி நீர் வந்து விட்டது. எனவே திப்பகொண்டனஹள்ளி ஏரி வற்றி விட்டாலும் இங்கே வரும்."

"சே! சலிப்பூட்டும் நிகழ்காலம்..."

"ஏதாவது பழைய கட்டிடங்களைப் பார்த்தால் இதெல்லாம் கொஞ்சம் மறக்கும்."

திப்பு கோட்டை, திப்பு அரண்மனை. பதினெட்டாம் நூற்றாண்டு. அதோ, ஒன்றோடொன்று உரசிக் கொள்கிற புறா ஜோடிகள். மனித ஜோடிகளும் கூட. பெங்களூர்க் காற்றும் சரித்திரச் சூழலும் ஏற்படுத்தும் பரவசம். கோட்டைக்கு வெளியேயிருந்து ஸிடி மார்க்கெட் வரை நடைபாதையெங்கிலும் மலிவான குழந்தை உடைகள், காலணிகள், காஸெட்டுகள், வேறு பல விற்கிற முஸ்லிம்கள்.

கிருஷ்ண ராஜேந்திர மார்க்கெட் நுழைவாயிலில் ரவுடிகள், பிக்பாக்கெட்டுகளின் புகைப்படங்கள். உள்ளே கீழ் மத்திய தர, ஏழை பட்ஜெட்டுகளுக்கேற்ற, ஆங்கிலத் தினசரியில் விளம்பரம் பெறாத, மலிவு பிராண்ட் பொருள்கள், ஸெகண்ட் ஹாண்ட் உடைகள். சில இரும்பு தட்டுமுட்டுச் சாமான்களுக்காகவும் புதிய காற்கறிகள், பழங்கள், மலர்களுக்காகவும் (இவற்றின் மொத்த வியாபாரக் கிடங்குகள் இங்குதான்) பணக்காரர்களும் இங்கு வருவதுண்டு. ஜயா நகர், மல்லேஸ்வரம் மாமிகள் சிலர் இங்கே வந்து புளி வாங்கிக் கொண்டு அப்படியே அருகிலுள்ள வெங்கட்ரமண ஸ்வாமியை சேவித்து விட்டுப் போவார்கள். இன்னும் வெங்காயம், தக்காளி, உருளைக் கிழங்கு, குப்பை, பிச்சைக்காரர்கள், கூவி அழைக்கும் கடைக்காரர்கள், கடைகளில் கசமுசாவென்ற பொருள்களின் குவியல்.

வெளியே, ஸப்வே அருகில் (பெங்களூரின் இரண்டாவது ஸப்வே, முதலாவது ஸிடி ஸ்டேஷனில்) ஒரு நெஞ்சுருக வைக்கும் காட்சி; ஏழைகள் வரிசையாய் அமர்ந்து விற்கும் கறிகாய், பழ மார்க்கெட் 'கழிவு'களை - பிற ஏழைகள் பணம் கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்.

இங்கிருந்து அவின்யூ ரோட் கடைகளை வேடிக்கை பார்த்தவாறு நடந்தால், நேரே கெம்பெகௌடா ரோடில் போய்ச் சேரலாம். கெம்பெகௌடாவின் பசவங்குடி நந்தியைப் பின்தங்க வைக்கும் பஞ்சவர்ண

சினிமா ஹோர்டிங்குகள், ராஜ்குமார் மற்றும் இந்தி நட்சத்திரங்களின் ராட்சஸ 'கட்–அவுட்'கள்; நடைபாதைகளில் ஸ்வெட்டர்கள் விற்கும் நேப்பாளிப் பெண்மணிகள், கைரேகை பார்ப்பவர்கள், மலிவு நாவல்கள், பழங்கள், துணிகள், தள்ளுபடி விற்பனை அறிவிக்கும் தோரணங்கள். எம். ஜி. ரோடிலிருந்து மாறுபட்ட 'இன்ஃபார்மல்' சூழ்நிலை.

எம். ஜி. ரோடில் காப்பி ஹவுஸ், இங்கே உட்லாண்ட்ஸ். எப்போதும் கூட்டம். பகலில் இங்கு நிறைய வக்கீல்களையும் கட்சிக்காரர்களையும் பார்க்கலாம். ஆட்டோவில் இரண்டு ரூபாய் கட்டண தூரத்தில் ஹைகோர்ட். பாவம், விரைவில் இடிபடப் போகிற கட்டிடம். மீண்டும் பழைய பிரிட்டிஷ் பாணி தூண்கள், நீண்ட வராந்தாக்கள். எதிரே இதே பாணியில் ஆனால் செஸில் பி டி மில் செட் போல பிரும்மாண்டமான விதான ஸௌதா. அங்கே ஒரு அம்பேத்கார் சிலை.

''இவர் இங்கே......''

''பி. டி. எஸ். பஸ்ஸுக்காக நிற்பதாகச் சொல்கிறார்கள். பஸ் இன்னும் வரவில்லையாம்'' என்று ஜோக் அடிப்பார்கள்.


பி. டி. எஸ். மோசமாயிருப்பதால்தான் மோபெட்களின் புழக்கம் அதிகம். இன்னொரு ஒருமைப்படுத்துகிற சக்தி. சுடிதார், புடவை, வேட்டி, பைஜாமா, பாண்ட், கிராப், குடுமி, முகமதியத் தொப்பி, அம்பேத்காரின் சீடர்கள், எல்லோரும் மோபெட்களில். மோபெட் இருந்தால் திறந்த புல்வெளிகள் நிறைந்த இந்த ஏரியாவுக்கு அடிக்கடி வரலாம். அருகிலுள்ள கப்பன் பார்க்குக்கும் வரலாம். பெங்களூரெங்கிலும் காலையில் எழுந்து 'வாக்கிங் போகிற – பெங்களூரில் பசுமை குறைந்து விட்டது. கட்டிடங்களும் கூட்டமும் அதிகமாகி விட்டது. சீதோஷ்ண நிலை குறைந்து விட்டது. என்றெல்லாம் குறைபட்டுக் கொள்கிற – தாத்தாக்களுக்கு இந்த ஏரியா பிடிக்கும். ஜாகிங் போகிற அவர்களுடைய பேரன்களுக்கும் பகலில் ஏகாந்தத்தை நாடும் ஜோடிகளுக்கும் பிடிக்கும்.

மீண்டும் எம். ஜி. ரோட். இரவு ஒன்பதரை மணி. டாப் காப்பி ரெஸ்டாரன்ட் மாடியிலிருந்து பெங்களூர் விளக்குகளை ஒரு கெம்பெ கௌடாவின் பெருமிதத்துடன், திப்புவின் ஆணவத்துடன் ரசிக்கிறோம்.

நான்தான் திப்பு. நான்தான் அம்ஜத் கான். நான் ரஹேஜா. இந்நகரம் முழுவதும் இப்போது எனக்குச் சொந்தம்.

ஆனால் கீழே கார்களில் வந்திருக்கும் பலருடைய மாலை இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. கமகமவென்ற உயர் ரக ஸெண்ட், உல்லாசச் சிரிப்பொலி, பளபளவென்ற சருமங்கள். ஏதோ ரெஸ்டாரெண்டில் இவர்களுக்கெனக் காத்திருக்கும் மேஜைகள். இந்த இரவும் இந்த நகரமும் உலகின் எல்லா நகரங்களும் இப்போதைக்கு இவர்களுக்கே சொந்தம்.

— ஆதவன்.


மக்கள்
அஸ்ஸாம் பிரச்சினை
பஞ்சாப் தேர்தல்
உள்ளொன்று வைத்து...
...புறமொன்று.. பேசிட 'திம்பு II'
பூசிக்குங்க சந்தனத் தைலம்! உங்க வாழ்வே மணம் வீசப் போகுது!
சந்தனத் தைலத் தொழிற்சாலை
தமிழக அரசு





1985 ஆகஸ்டு 18
மலர் 44 இதழ் 3
குரோதன ஆவணி 2

கல்கி

தாமதத்தின் மறுபெயர் : தமிழக அரசு!

"இன்றைக்குச் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை நாளைக்கென்று ஒத்திப் போடாதே; நாளை மறுதினத்துக்கென்று ஒத்திப் போடு!'' — பிரபல ஹாலிவுட் நகைச்சுவை நடிகர் பாப்ஹோப் உருவாக்கிய வாசகம் இது.

இந்த நகைச்சுவை நமது தமிழக அரசு விஷயத்தில் மெய்யாகி வருவதுதான் சோகம். அதன் மெத்தனப் போக்கு பலரும் அறிந்த ஒன்றுதான் எனினும், சமீபத்தில் தெரிய வந்துள்ள விஷயம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. நாடாளுமன்றத்தில் பேசிய சட்டத்துறைத் துணை அமைச்சர் எச். பாரத்வாஜ், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏழு நீதிபதிகளின் இடங்கள் காலியாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். 1982—ஆம் ஆண்டிலிருந்தே இப்பதவிகளில் சில காலியாக இருந்து வருகின்றன எனவும், இந்நிலவரத்துக்குத் தமிழக அரசுதான் காரணம் எனவும் சொல்லியிருக்கிறார். காலியாக உள்ள இடங்களை நிரப்ப மத்திய அரசு அவ்வப்போது சிபாரிசு செய்யும் பெயர்கள் சம்பந்தமாக, மாநில அரசு தன் கருத்துக்களைத் தெரிவிக்காமல் மௌனம் சாதிப்பதே இந்நிலைக்குக் காரணம் என்றும் பாரத்வாஜ் பட்டவர்த்தனமாகப் பேசியிருக்கிறார்.

ஏற்கெனவே நீதிமன்றங்களில் வழக்குகள் முடிவு காணப்படாமல் குவிகின்றன என்ற குறை உண்டு. இதில் நீதிபதிகள் நியமனத்தில் வேறு மெத்தனம் எனில், மக்களுக்கு நீதி வழங்கப்படுவதில் எவ்வளவு காலதாமதமாகும்!

இந்தப் பரிதாப நிலைக்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் மந்திரிகள் முடிவெடுக்கத் தயங்குவதுதான் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. அமைச்சர்கள் முடிவெடுக்க அஞ்சி, முதல்வரே முடிவெடுக்கட்டும் என்று காத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. முதல்வரோ உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருப்பதால் துரிதமாக இயங்க இயலாதவராய் இருக்கிறார். உடல் பரிசோதனைகளுக்காக அவர் ஜப்பானுக்கும் மறுபடி அமெரிக்காவுக்கும் போக நேர்ந்திருக்கிறது.

நம்பகமான; திறமையான அமைச்சர்களைத் தேர்வு செய்து, பொறுப்பை விட்டு, ''முடிவெடுங்கள்'' என்று முதல்வர் ஊக்கினாலொழிய அவர்கள் முடிவெடுக்க மாட்டார்கள். அவர்கள் முடிவெடுத்தபின் முதல்வர் அம்முடிவுக்குப் பக்கபலமாக நிற்க வேண்டும். மாறாக, அவர் ஊரில் இல்லாதபோது எடுக்கப்படும் முடிவுகள் அவர் திரும்பி வந்ததும் மாற்றி அமைக்கப்படுகின்றன. அமைச்சர்கள் தாங்கள் கைவிடப்பட்டது போல் உணர்வார்கள். 'நமக்கேன் வம்பு? அவரே முடிவெடுக்கட்டும்' என்றுதான் தோன்றும்.

முதல்வர் தாமும் செயல்படாமல், பிறரையும் செயல்பட விடாமல் இருக்கும் போக்கு மாற வேண்டும். அல்லது உடல் ஆரோக்கியம் இடம் தரவில்லை என்றால் கட்சித் தலைமையை மட்டும் ஏற்று, ஆட்சிப் பொறுப்பைத் தகுதியான வேறு ஒருவரிடம் விட வேண்டும். இரண்டும்கெட்டான் நிலையை நீடிக்க விடுவது அவரையும் அவர் கட்சியினரையும் அமோக ஆதரவு காட்டித் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நியாயம் செய்ததாகாது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

Beyond fertilizers. MCF's commitment to farm prosperity.

Mangalore Chemicals & Fertilizers Limited is the largest chemical complex in Karnataka.


This fertilizer complex is designed to produce 1030 tonnes of Urea and 500 tonnes of DAP per day, using the most advanced technology and processes available. The Urea plant is running at almost 100% capacity and has produced over 17 lakh tonnes of Urea in just 8 years. The DAP plant, using fluidized bed granulation technology, the first of its kind in the world, will commence production of superior quality DAP in January 1985.

But just manufacturing fertilizers and chemicals is not the sole objective of MCF.

"Farm Prosperity" is MCF's ultimate goal. Thus the company is constantly creating opportunities to promote scientific and profitable farming techniques, uplift knowledge and skills in rural societies, help farmers attain social progress — and thus, in turn bring prosperity to rural India.

Mangalore Chemicals & Fertilizers Limited

Regd. Office: Khivraj Mansion, 10/2 Kasturba Road, Bangalore 560 001.



Contract-MCF-211 R

பாக்யராஜ் பதில்கள்



ஆர். கௌதமன் கடலூர்—2.

* தங்களை எம். எல். சி. ஆக்கி, திரைப்படத்துறை அமைச்சர் பதவி கொடுத்தால், அதை ஏற்றுக் கொள்வீர்களா?

இப்பவே ஏன் லேட்டுன்னு ஜனங்க எல்லாம் திட்டிக்கிட்டு இருக்காங்க.... ரெடி... டேக்!

வி. கே. ரமேஷ். சென்னை—94.

* ஆரம்பத்தில் இயக்குநர் பாரதிராஜாவுடன் இணைந்து பணியாற்றினீர்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'கைதியின் டைரி' படத்திலும் பணியாற்றி இருக்கிறீர்கள். அப்போதைய சூழ்நிலைக்கும், இப்போதைய சூழ்நிலைக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுவீர்களா?

மொந்தைதான் புதுசு. கள்ளு பழசு. பழைய பழக்க வழக்கங்களிலே ஒண்ணும் பெரிசா மாற்றமில்லே.

இசைமுத்து. மதுரை—9.

* உங்களுக்குச் சற்று முன்கோபம் அதிகம் என்று ஓர் அபிப்ராயம் நிலவுகிறதே! அதைப் பற்றி....?

மன்னிக்கணும், மதுரைக்காரரே! அனுமானத்திற்கு வைத்தியமே இல்லே!

எம். பழனிச்சாமி மாதம்பட்டி.

* நீங்கள் திரைப்படத்துறைக்கு வருவதற்கு முன் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்று துடித்திருப்பீர்கள்; அந்தக் கருத்தை எந்தப் படத்தில் அரங்கேற்றி மன நிம்மதி அடைந்தீர்?


பொறக்கிற குழந்தைக்கு நிகழ்காலமும், எதிர்காலமும்தான் இருக்கு. இறந்தகாலம் இல்லே. அதே மாதிரி பொண்டாட்டியா வர்றவளுக்கும் நிகழ்காலம், எதிர்காலம் மட்டுந்தான் இருக்கு. இறந்தகாலம் இருந்தாலும் புருஷன் அதைப் பற்றி அலசக் கூடாது. அந்தஏழுநாட்களிலேராஜேஷ்அம்பிகாவை ஏத்துக்கறது இந்த அடிப்படையில்தான்!

ஜெயந்தி முத்துராமன். தென்னாற்காடு மாவட்டம்.

* பாரதிராஜாவிடம்பிடித்த, பிடிக்காத அம்சங்கள்

---

* சொல்லத் துடித்த கருத்து அரங்கேறிய படம்



என்ன? தைரியமாகக் கூறவும்.

பெரும்பாலும் கரெக்டான ரூட்லதான் போகணும்னு ஆசைப்படுவாரு. ஆனா சில நேரங்கள்லே — தான் போறதெல்லாமே கரெக்டான ரூட்டுன்னு நெனைச்சுக்குவாரு!

பி.கு: இதை அவரும் படிப்பாருன்னு தெரிஞ்சுதான் சொல்றேன்.

நாகை ஜி. அகமது **சென்னை—1.**

* *நடிகர், டைரக்டர், கதை வசனகர்த்தா எனப் பல கோணங்களில் இருக்கும் நீங்கள் பாடல் புனைபவராகவும், பாடகராகவும் இருக்க ஏன் விரும்பவில்லை? அல்லது அந்தத் தகுதி உங்களுக்கு இல்லையா?*

சக்கரத்தில மண்ணு சுத்திக்கிட்டு இருக்கும். கை வைக்கிறவன் வச்சாத்தான் சட்டி, பானை ஆகும். கண்டவங்க வச்சா விடிஞ்சாலும் தேறுது.

காழி கா. அருள்மொழி **நிம்மேலி—6.**

* *நீங்கள் யாரைக் கண்டு பொறாமைப் பட்டீர்கள்? யாரைக் கண்டு பெருமைப்பட்டீர்கள்? யாரைக் கண்டு வருத்தப்பட்டீர்கள்?*

என்னைவிடத் திறமையானவங்களைப் பாத்துப் பொறாமைப் படுறேன். என்னோட வளர்ச்சியில சந்தோஷப்படறவங்களைப் பார்த்துப் பெருமைப்படறேன். என்னோட வெற்றிக்கு நொண்டிச் சாக்கு சொல்றவங்களைப் பார்த்து வருத்தப்படறேன்.

வி. அன்பழகன், **பூவாளூர்—2.**

* *தந்தை பெரியாரைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?*

பூனைக்கு மணி கட்டிட்டா தப்பிச்சுக்கலாம்னு எல்லா எலிகளும் ஆமோதிச்சது. ஆனா யாரு மணி கட்டறதுன்னு கேட்டப்போ, எல்லா எலிகளும் திசை தெரியாம ஓடிப் போச்சு! தனிச்சு நின்னு மணி கட்டி எலிகளைப் புலிகளாக்கின ஈரோட்டுக்காரருக்கு, எல்லா ஜில்லாக்காரர்களும் மரியாதை கொடுத்தே ஆகணும்!

ஆசிரியர்: "இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் இருக்குன்னு கேட்டால் கரெக்டா பதில் சொல்றியே, உங்க அப்பா என்ன பண்றார்?"

மாணவன்: "லாட்டரி சீட்டு விற்கிறார் சார்!"

— செந்தூர் ஈ. சோமசுந்தரம்.



ஆர். லீலாவதி, **உடுமலைப்பேட்டை.**

* *நாட்டின் நிலை என்ன?*

சின்ன வீட்டைப் பத்திப் பரவலா பேசிக்கிட்டு இருக்காங்க.

வி. தேவராஜன், **சென்னை—49.**

* *தெனாலிராமன், பீர்பால், துக்ளக் போன்ற பாத்திரங்களிலே நடிப்பது, உங்களுக்குக் கை வந்த கலை என்று சொல்கிறேன். அந்தப் பாத்திரங்களில் நடிப்பீர்களா?*

தெனாலிராமன், பீர்பால் ஆக நான் நடிக்கணும்னு அவசியமில்லே. ஏன்னா, ஒரிஜினலாக நான் அப்படித்தான். துக்ளக்கா ஏற்கனவே ஒருத்தர் நடிச்சிட்டாரு! அவர் அளவுக்கு நமக்குத் தகுதி இல்லே!

ஏ. சித்ரா, **ஈரோடு—4.**

* *பெண் புத்தி பின் புத்தி என்பார்கள். ஆனால் பி.எச்டி. அக்கா ஜெயலலிதா விஷயத்தில் எம்.கே.ஜி. மாணவனான நீங்கள் ஆண் புத்தி பின் புத்தி ஆகிவிட்டது ஏன்?*

சித்ரா தங்கச்சி! உங்க அக்காவை நான் தப்பு சொல்லல்லே. உங்க அக்காவோட பேச்சு வார்த்தைகள் தப்பா இருக்குன்னு தான் சொன்னேன். கல்யாணம் முடிஞ்சு, குழந்தை குட்டிகளைப் பெத்து, காது குத்துக்குக் கூட வந்தாச்சு. ஆனா நீங்க இன்னும் கல்யாணப் பந்தியில 'எனக்கு ஏன் அப்பளம் மிஸ் ஆச்சு'ங்கற கோபத்திலேயே இருந்தா எப்படி? சரி விடுங்க. பழமொழியை மாத்த முடியாது.

கே. ஆறுமுகம், **திருவண்ணாமலை.**

* *கலைஞரைச் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வீர்கள்?*

பெரிய மனிதரிடம் முதலில் வாய் கொடுப்பதைவிட, காது கொடுப்பதுதான் நாகரீகம்.

சின்னப்பெருமாள், **நாமக்கல்.**

* *இசைக் கலைஞர்கள் பற்றித் தங்கள் அபிப்ராயம்?*

சின்ன வயசுல ஒரு சம்பவம். மோடி வித்தைக்காரன் கீரிக்கும் பாம்புக்கும் சண்டை சண்டைன்னு கூச்சல் போட்டான். கூட்டமும் சேர்ந்தது வசூலும் ஆனது ஆனா சண்டை நடக்கலே. 'ஏய்யா பொய் சொல்றே'ன்னு கேட்டேன். சண்டை போட்டு ஏதாவது ஒண்ணு செத்துப்போயிடுச்சுன்னா, நாளைக்கு என் பொழைப்பு நடக்க வேண்டாமா?

'அதுக்காகப் பொய் சொல்றதா?'

என்று நான் மீண்டும் நியாயம் கேட்க, பிடரியில் படாரென அடி விழுந்தது. திரும்பிப் பார்க்க என் தாத்தா நின்னுக்கிட்டிருந்தாரு.

'ஏண்டா! அவன் வயித்துப் பொழைப்புக்காக எதையாவது ஒண்ணு சொல்லிக்கிட்டு இருப்பான்; நீ ஸ்கூலுக்குப் போறதை விட்டுட்டு அதை நம்பி உன்னை யார்டா இங்கே வேடிக்கை பார்க்கச் சொன்னாங்க?'

வாழ்க! மோடி மஸ்தானின் வாரிசுகள்!



உலகின் உயர்ந்த சிகரம் முதல் தாழ்ந்த பனிப்பிரதேசம் வரை...
...கடினமான சோதனைகளை வென்று வெற்றிக் கொடி நாட்டுவது
எச்எம்டி கைகடிகாரங்கள்



எச்எம்டி கைகடிகாரங்கள்
சோதனை வென்று சாதனை படைத்தல்– அதுதான் உத்தரவாதம்.

கடுமையான அந்த சீதோஷ்ண நிலையை எண்ணிப் பாருங்கள். பூஜ்யத்திற்கும் கீழான சீதோஷ்ண நிலை—பனி, மூடுபனி, கண்ணை மறைக்கும் உறைபனி. எனினும் மனத் துணிவோடு தங்கள் முயற்சியில் இறங்கி எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தார்கள். அண்டார்க்டிகாவில் கொடியை நட்டார்கள்.

அப்படி வெற்றி கண்டவர்களின் வீரக் கரங்களை அலங்கரித்தவை எச்எம்டி. உறுதியான, நீண்ட காலம் உழைக்கும், சரியான நேரம் காட்டும் எச்எம்டி கைகடிகாரங்கள் அவர்களை ஒருபொழுதும் ஏமாற்றியதில்லை. எனவே அவர்கள் இன்று சிபாரிசு செய்வது இக்கடிகாரங்களையே.

கடுமையான சோதனைகளை வென்று சாதனை புரிந்திருப்பவை எச்எம்டி கைகடிகாரங்கள். தரத்திற்கு பெயர்பெற்ற எச்எம்டி கைகடிகாரங்கள் நீண்டு உழைப்பதிலும் நற்சான்று பெற்று நன்மதிப்போடு திகழ்கின்றன.



CLARION/HMT/8527

hmt கைகடிகாரங்கள்

வாட்ச் டிவிஷன்
hmt
நாட்டுக்கு நல்ல
நேரம் காட்டுவோர்
தொழிற் கூடங்கள்:
பெங்களூர் (I&II)
ஸ்ரீநகர், துமகூர்,
ரானிபாக்.

சித்தரஞ்சனி

3. அவன் அதிர்ஷ்டம்!

இரவு முற்ற முற்ற, சுக்ல பட்ச நான்காம் பிறைச் சந்திரனின் அற்ப ஒளியையும், கடல் மீது ஊர்ந்து வந்த மேகங்கள் மறைத்து விட்டன.


அது காரணமாக, இலேசாகப் பளிச்சிட்ட கடல் அலைகள் கறுப்பு மையமாகி ஒரு பயங்கரத்தை நிறுவிவிட்டதாலும், அப்படி அடுக்கு அடுக்காக வந்த மேகங்கள் கடலிலிருந்து விண்ணை நோக்கிக் கிளம்பித் திரண்டு, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு தூணை சிருஷ்டித்துவிட்டதாலும், ஏதோ உற்பாதம் நிகழப் போவதற்கு அத்தாட்சியைச் சுட்டிக்காட்டியதாலும், தாபிலேசுவரர் மண்டபத் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கௌதமி புத்ரன் சிறிதும் கலங்கினானில்லை. பிசாசைப் பற்றிய கதைக்கும் மேகங்கள் விளைவித்த தூணுக்கும் மேலைக் கடலைப் பற்றி விஷயமறியாதவர்கள் ஏதாவது முடிச்சுப் போட்டு அதுவும் பிசாசின் வேலையாயிருக்குமென்று பயந்தாலும் மேலைக்கடலில் பலமுறை பயணம் செய்தவனான அந்த வாலிபன், "இப்படி மேகம் திரளுவதும் திடீர் மழை பெய்வதும், இடிகள் மலையைத்தாக்கித் திக்பிரமையடையச்செய்வதும் மலைக் கடலோரப் பகுதிகளின் இயற்கை. இதைப் பற்றி அச்சப்பட ஏதுமில்லை" என்று மனத்தில் சொல்லிக் கொண்டான். "பிசாசென்பது மனப்பிரமை. மனிதனைவிடப் பெரிய பிசாசு எங்கிருக்க முடியும்?" என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டு நள்ளிரவை எதிர்பார்த்திருந்தான்.

நள்ளிரவு நெருங்குவதற்கு நான்கைந்து நாழிகைகளுக்குமுன்பாகவே கடலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு, அலைகள் பனை மர உயரத்துக்குக் கிளம்பி, மலைச்சரிவுப் பாறைகளில் வேகமாக மோதத் தொடங்கியதன் விளைவாக, பேரிரைச்சல் கொண்ட பயங்கரச் சூழ்நிலை அந்தப் பகுதியில் உருவாகிக் கொண்டிருந்ததால், கௌதமி புத்ரன் தனது புரவியை ஆலயத்தின் உட்புறத்தூணொன்றில் பிணைத்தாலும், அந்தப் புரவியும் வெளியே எட்டிப் பார்த்துப் பெரிதாகக் கர்ஜனை செய்தது. திடீரெனப் பெருங்காற்று ஒன்று கிளம்பி மரங்களைப் பேயாட்டம் ஆட்டினாலும் அந்த உறுதியான மரக்கிளைகளில் ஒன்று கூட விழவில்லையென்றாலும், மரத்தின் இலைகளும் புஷ்பங்களும் ஏராளமாக உதிர்ந்து, மலைத் தரையை புஷ்ப வேலை செய்யப்பட்ட கம்பளமாக அடித்திருந்தது. மரங்களின் அந்தப் பேயாட்டத்தைக் கவனித்த கௌதமி புத்ரன் அதைப் பற்றி எந்த அக்கறையும் காட்டாமல், கோயிலுக்கு வெளியிலேயே நின்று ஆகாயத்தை நோக்கினாலும், ஆகாயத்தில் நக்ஷத்திரமேதுமில்லாததாலும் கருமேகம் மூடியிருந்ததாலும் நாழிகைகளைக் கணக்கிட முடியாததால் 'நள்ளிரவு வந்திருக்குமா?' என்று சிந்தித்தான். எப்படியும் நள்ளிரவு நிகழ்ச்சியைக் கவனித்து மோகினியின் மாயக்கதையை உடைக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் தாபிலேசுவரர் முகப்பு மண்டபத்திலேயே உட்கார்ந்திருந்தான், காலை கீழே தொங்கவிட்டு ஆட்டிய வண்ணம்.

நாழிகைகள் ஓடினவேயொழிய, இருளையும், காற்றையும் கடலலைகளின் இரைச்சலையும் தவிர வேறு எந்த மாற்றமும் இல்லாததால், "ஒரு வேளை நான் வருகிறேனென்று தெரிந்த பிசாசு வரவில்லையோ? என்னிடம் பிசாசே பயப்படுகிறதென்றால் சாதர்கள் பயப்படாதிருக்க முடியுமா?" என்று தனது நிலையைப் பற்றியும் நினைத்துப் புன்முறுவல் கொண்டான். அப்படி அவன் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே ஊழிக்காற்று ஒன்று 'ஊ' என்று ஊதிக்கொண்டு வாசிஷ்டி நதிப்பகுதியிலிருந்து எழுந்தது. பெரிதாக வானில் இடித்த பேரிடியொன்றை அடுத்து, கண்ணைப் பறிக்கும் மின்னலொன்றும் அந்த வனப் பகுதியின் இருளைக் கிழித்தது.

மின்னலை மட்டும் அவன் கண்டிருந்தால் அத்தனை அதிர்ச்சியடைந்திருக்க மாட்டான். அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து முப்பது அடி தள்ளியிருந்த ஒரு சிறு பாறை மீது வெள்ளை வெளேரென ஒரு பெண்ணுருவம் நின்றுகொண்டிருந்தது அவன் கண்களுக்குப் புலனாயிற்று. திடீரெனப் பளிச்சிட்ட மின்னல் கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கி விட்டதால் அந்தப் பெண்ணுருவமும் மறைந்து விட்டது. அடுத்து ஒரு பெரிய இடி வானத்தே இடித்தது. அதை அடுத்து இன்னொரு இடியும் பெரிதாக இடித்து மலைச்சாரலில் எதிரொலி செய்யுமுன்பாக மற்றுமொரு முறை ஏற்பட்ட மின்னலில் அந்தப் பாறையைக் கூர்ந்துநோக்கினான் கௌதமிபுத்ரன். அந்தப் பாறையில் பாதி தூரம் பூமிக்குள் இறங்கியிருந்த அந்தப் பெண்ணுருவம் இடுப்பு வரையிலுமே தெரிந்தது. அந்த வாலிபன் அடுத்து மற்றொரு மின்னலுக்காகக் காத்திராமல் அந்தப் பாறையை நோக்கி ஓடினான். அந்த இடத்தை அவன் அடைந்தபோது அங்கு அந்த மலைப்பாறையே இருந்தது. பாறையைக் காலால் உதைத்துப் பார்த்த கௌதமி புத்ரன் அங்கு எந்த மாறுதலுமில்லாததையும் மின்னலில் தோன்றிய மின்னல்

சாண்டில்யன்



கொடி சுவடு தெரியாமல் மறைந்துவிட்டதையும் உணர்ந்து, பெரும் குழப்பத்துடன் மண்டபத்தை நோக்கித் திரும்புகையில் வானத்திலிருந்து பெரும் தூறல்கள் மலைச்சரிவின் மீது சடசடவென விழவே மண்டபத்தை நோக்கி விரைந்தவன் என்றுமில்லாத குழப்பத்துடன் பழையபடி ஆலயத்தூணில்சாய்ந்து உட்கார்ந்தும் கொண்டான்.

அவன் சிந்தனை பலவிதமாக ஓடிக்கொண்டிருந்ததால் தாபிலேசுவரர் ஆலயத் தூணிலேயே தனது தலையைப் புரட்டிய வண்ணம் உறக்கம் பிடிக்காமல் மோகினி மறைந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பிசாசுகளைப் பற்றி அவனுக்கு அடியோடு நம்பிக்கையில்லையென்றாலும் தனது கண்ணால் கண்டதைப் புறக்கணிக்க முடியாமல் திண்டாடினான். ''அப்படியொன்றும் நான் மனப்பிரமை பிடித்தவனல்லவே? பெண்ணைப் பார்க்கத்தானே செய்தேன்'' என்று தன்னைத்தானே கேட்டும் கொண்டான். எப்படியும் அந்த மாயத்துக்கு விடை கண்டுபிடிக்காமல்ஊருக்குத்திரும்புவதில்லையென்று சங்கல்பமும் செய்து கொண்டு கண்களை லேசாகமூடினான். மூடிய கண்களைத் திடீரெனத் திறக்க வைத்தது மெல்லிய ஒலியொன்று. அது என்னவாயிருக்கும் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே சுண்டிவிடப்பட்ட வீணையின் நாதத்தைப் போன்ற ஒரு மெல்லிய நாதம் தாபிலேசுவரர் கோயிலை நாடி வந்தது. அதிக உச்சத்துக்கும் போகாமல் அதிகமாகக் கீழேயும் போகாமல் ஸப்தஸ்வரங்களுக்கிடையே மாறி மாறி இழைந்த அந்தக் கீதம் அவன் சித்தத்தைப் பெரிதும் பாதித்தது. எந்தவிதமான கரகரப்போ பிசிறோ இல்லாமல் இழைந்து, காற்றிலே மிதந்து வந்த அந்த இசையின் மென்மை, சித்தத்தை மட்டுமின்றி அவன் ஆத்மாவிலும் பாய்ந்ததால் அதில் லயித்துக் கிடந்தான் கௌதமிபுத்ர சதகர்ணி. இப்படி சுமார் மூன்று நாழிகைகளுக்குமேல் அந்த மலைக்காட்டையே மயக்கிவிட்ட அந்த இசையினால் மெய்மறந்த அந்த வாலிபனும் அதன் இனிமையில் உணர்ச்சிகள் சுழலக் கண்களை மூடி நித்திரை வசப்பட்டான்.

அவன் கண்விழித்த போது அருணனின் கிரணங்களால் கடல் செவ்விய ஆடையை அணிந்திருந்தது. அலைகள் முந்திய இரவின் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அதிக சலனமில்லாமல் மெல்லிய அலைகளை மலையடிவாரத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. கடலில் கலந்த வாசிஷ்டி நதியும் இரவு சங்கமத்தால் களைத்த பெண்ணைப் போல மந்தகதியுடன் கடலில் பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு பெரிய சுழல் காற்று, இடி மின்னல் மழை, பிறகு களைப்பு அமைதி, இயற்கையின் இந்த நியதி சிருஷ்டியில் யாரை எதை விட்டது என்று நினைத்த கௌதமிபுத்ரன் முதல் நாள் இரவின் நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தூரத்தே யாரோ வருவது தெரியவே உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நின்றான்.

கையில் ஒரு சிறு மூட்டையுடன் வேகமாக வந்து கொண்டிருந்த தாபிலேசுவரர் கோயில் பூஜாரி கோயிலை அணுகுமுன்பாகச் சற்று எட்டவே நின்று சந்நிதிக்கு முன்பாக நின்று கொண்டிருந்த கௌதமிபுத்ரனைப் பார்த்துப் பெரும் பிரமிப்படைந்தார். அவர் பிரமிப்புக்குக் காரணத்தைப் புரிந்து கொண்ட கௌதமிபுத்ரன் லேசாக நகைத்து ''வாருங்கள் அஞ்ச வேண்டாம். நான் சாகவில்லை'' என்று அழைப்பு விடுத்தான்.

அவன் அழைப்பை ஏற்று அருகில் வந்த பூஜாரி ''அதிசயம், அதிசயம்'' என்று சொற்களை உதிர்த்தார் கௌதமிபுத்ரனை நோக்கி.

''என்ன அதிசயம்?'' கௌதமிபுத்ரன் கேட்டான் அவர் வியப்புக்குக் காரணத்தை அறிந்து.

''நீ உயிருடனிருக்கிறாய்'' என்றார் பூஜாரி.

''தங்களை ஏமாற்றியதற்கு வருந்துகிறேன்'' என்றான் கௌதமிபுத்ரன் லேசாக நகைத்து.

''இது நகைப்புக்குள்ள விஷயமில்லை'' என்று பூஜாரி கடிந்து கொண்டார்.

''ஏன் நான் உயிருடனிருப்பது உங்களுக்கு இஷ்டமில்லையா?''

''என் இஷ்டம் இருக்கட்டும் ஒரு பக்கம். நீ உயிருடனிருப்பது தெரிந்திருந்தால் நான் இத்தனை சீக்கிரம் வந்திருக்க மாட்டேன். நடுப்பகலில் வந்திருப்பேன்!''

''ஏன்?''

''இந்தா இதைப் பார்'' என்று பூஜாரி தமது மூட்டையிலிருந்த சாமக்கிரியைகளை எடுத்து மண்டபத் தரையில் வைத்தார். அதில் தர்ப்பம், எள்ளு, அரிசி, சிறு சட்டி இத்தனையும் இருப்பதைப் பார்த்துத் தனது ஈமக்கிரியைக்குச் சாமான்களை அவர் கொண்டு வந்துவிட்டதைப் பார்த்துச் சற்று பெரிதாகவே சிரித்தான் கௌதமிபுத்ரன்.

''வாலிபனே! சிரிக்காதே. ஏதோ உன் நல்ல காலம் நேற்று மோகினி வரவில்லை..'' என்று இழுத்தார்.

''யார் சொன்னது?''

''நான் சொல்கிறேன். வராததற்கு ருசு நீதான்.''

''நானா?''

''ஆம். வந்திருந்தால் நீ எப்படி உயிருடனிருப்பாய்?''

''பூஜ்யரே! நேற்று அந்த மோகினி வந்தது'' என்று சிறிது உறுதியாகச் சொன்னான் அந்த வாலிபன்.

''வந்ததா!'' பூஜாரி சந்தேகத்துடன் பார்த்தார் வாலிபனை.

''வந்தது. நான் பார்த்தேன்.'' அழுத்தந்திருத்தமாகச் சொன்னான் கௌதமிபுத்ரன்.

''நீயே பார்த்தாய்?''

''ஆம்.''

''எப்பொழுது?''

''நள்ளிரவில் வானம் மின்னிய போது.''

''எங்கே?''

''அதோ அந்தப் பாறைமீது'' என்று எட்ட இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

அருள்வாக்கு



இந்த லோகம் சாச்வதமல்ல. சாச்வதமான இன்னொரு லோகத்தில் நாம் இடம் பிடித்தாக வேண்டும். அதற்கு நாம் போகவொட்டாமல் உட்பகை என்று சொல்கிற ஆறு துஷ்டர்கள், பலிஷ்டர்கள் நம்மைத் தடுக்கிறார்கள். * இவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொண்டு, பக்தி த்யானம், ஞானங்களில் நாம் முன்னேறினால்தான் அந்த சாச்வத லோகத்துக்குப் போய்ச் சேரலாம். இப்போதும் எப்போதும் நமக்குள்ளேயே இருப்பதுதான் அந்த சாச்வத லோகம் என்றால் கூட அதற்குப் போய்ச் சேருவதுதான் பிரும்மப் பிரயத்தனமாக இருக்கிறது. அங்கே போவதற்கு நமக்கு ராஜாவாக, ராஜாங்கமாக சஹாயம் செய்கிறவரைத்தான் ஆசாரியர் என்பது. இந்த லோகத்தில் ஸுகமாக இருப்பதற்காக ராஜா (அல்லது மந்திரி ஸபை) வேண்டியிருக்கிறது போலப் பரலோகம் (என்கிற உள்ளுலகமான ஆத்ம லோகம்) போகும்படியான காரியத்துக்கு ஆசாரியர் வேண்டும். இந்த லோகத்தில் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. இந்த லோகத்தில் நன்றாக இல்லாமலே போனால்கூடப் பரவாயில்லை. ஆனால் இங்கேயிருந்து போன பிறகு மறுபடி திரும்பி வராமல் அந்த சாச்வத லோகத்தில் சேர வேண்டியது ரொம்பவும் அவசியம்.

அந்த நச்வரமான (அழியும் தன்மை வாய்ந்த) லோக வாழ்க்கையின் போதேதான் நாம் அந்த சாச்வத வாழ்க்கைக்கும் வழி பண்ணிக் கொள்ள வேண்டும்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

* காமம்; குரோதம், லோபத்தனம், மோஹம், மதம் (செருக்கு) மாத்ஸர்யம் (பொறாமை)

"அடுத்து என்ன நடந்தது?"

"மறுபடியும் மின்னியது."

"அப்பொழுது?"

"மோகினியின் உடல் பாதி தெரிந்தது. மீதிப் பாதி மறைந்து விட்டது பூமிக்குள்."

"அதையும் பார்த்தாய்?"

"ஆம்."

பூஜாரி சந்தேகப் பார்வையாக அவனைப் பார்த்தார். "அந்தப் பிசாசைப் பிடிப்பது தானே?" என்று கேட்டார்.

"பிடிக்கத்தான் போனேன். அதற்குள் மறைந்து விட்டது."

"பிறகு என்ன நடந்தது?" என்று பூஜாரி கேட்டார்.

"பிறகு திடீரென ஒரு சித்தத்தை மயக்கும் சங்கீதம் கேட்டது. அப்படியே தூங்கிவிட்டேன்" என்றான் கௌதமிபுத்ரன்.

"தூங்கும்போது யாரும் உன் கழுத்தைப் பிடிக்கவில்லை?" என்று விசாரித்தார் பூஜாரி.

"இல்லை" என்றான் கௌதமிபுத்ரன்.

பூஜாரி ஏதும் புரியாமல் திகைத்து உட்கார்ந்து விட்டார். பிறகு கௌதமிபுத்ரனுக்காகக் கொண்டு வந்திருந்த சடங்குச் சாமான்களை மறுபடியும் எடுத்துக் கட்டி வைத்துவிட்டு நடுப்பகல் வருவதாகச் சொல்லிப் போனார். நடுப்பகலில் வழக்கம்போல் வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து நைவேத்யம் முடித்து, பிரசாதத்தைத் தானும் உண்டு வாலிபனுக்கும் கொடுத்தார்.

இருவரும் உணவருந்தி முடிந்ததும் பூஜாரி சொன்னார். "அப்பனே! நேற்று தாபிலேசுவரர் கோவிலில் படுத்துத் தாயின் பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டாய். இனி நீ கிளம்பு. தாய்க்குப் பிள்ளையாக ஊருக்குப் போய்ச் சேர்" என்று கெஞ்சினார்.

கௌதமிபுத்ரன் அதற்கு இணங்கவில்லை.

"இன்னொரு பிரார்த்தனை இருக்கிறதே" என்றான்.

"அது என்ன?"

"சண்டிகாதேவியைத் தரிசிக்க வேண்டும்."

"அது இன்னும் ஆறு மாதங்களுக்கு முடியாது - அந்தப் பாதாளக் கோவிலை இப்பொழுதுதான் மூடினார்கள். அடுத்து திறக்க ஆறு மாதம் ஆகும்" என்றார் பூஜாரி.

"இடத்தைக் காட்டுங்கள். நான் போய்த் தரிசித்து வருகிறேன்" என்று சாதவாகன நம்பி பிடிவாதம் பிடித்தான்.

பூஜாரி அவனைக் கடுமையுடனும் கருணையுடனும் நோக்கினார். "நேற்று அதிர்ஷ்டம் என்றும் நீடிக்குமென்று நினைக்காதே. பேசாமல் ஊருக்குப் புறப்படு" என்றும் சொன்னார்.

"இன்றிரவு மோகினி வருகிறாளா பார்க்கிறேன்" என்றான் கௌதமிபுத்ரன்.

"விஷப் பரீட்சை செய்யாதே" என்றார் பூஜாரி.

அவர் சொன்னதைக் கேட்கவில்லை கௌதமிபுத்ரன். அன்றும் தாபிலேசுவரர் கோவிலில் தங்கினான். இரவு நீண்ட நேரம் கழித்து உறங்கினான் மண்டபத்தில். நள்ளிரவில் சங்கீதம் ஒலித்தது! முதல் நாள் போல். எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை. அவன் கழுத்தை வலிய மெல்லிய கையொன்று இறுக்கிக் கொண்டிருந்தது. கால்களில் ஏதோ தளைகள் மாட்டப்பட்டிருந்தது போன்ற ஒரு பிரமை! மூச்சுவிடுவது கூடச் சிறிது கஷ்டமாயிருந்தது அவனுக்கு. அதிர்ஷ்டம் நீடிக்காது என்று பூஜாரி சொன்ன சொற்கள் அவன் காதில் ஒலித்தன.

(தொடரும்)

குதுரேமுக் என்று ஓர் இடம்!

சுஜாதா

இது டூரிஸ்ட்டு கட்டுரை இல்லை. குதுரேமுக்குக்கு வழி சொல்ல மாட்டேன். பெங்களூர் மங்களூர் பாதையில் சிக்மகளூரில் சைடு வாங்க வேண்டும்! வழியில் 'களஸா' என்றெல்லாம் ஊர்கள் வரும்! பஸ்ஸில் போனால் பெரும் அவஸ்தை! காரில் போனாலும் அப்படி ஒன்றும் அவஸ்தைக்குக் குறைவில்லை. சுழற்றிச் சுழற்றி அடிக்கும் பாதை. கைவசம் ஸ்டெமாட்டில் வைத்திருக்கவும். களைப்பான பிரயாணத்தின் இறுதியில் கிடைப்பது மரகதம். போய்ச் சேர்ந்த மாலை நேரம் மழை ஓய்ந்து ஒரு சில ஹெக்டேர்களுக்கு ஈரம், பசுமை. 'மலைமகளின் மார்பகத்தில் பச்சைப் பட்டாடை' என்றெல்லாம் கவிதை உளறல்கள் தோன்றியது! பசி வேளையாதலால் தமிழன்னையின் கழுத்தில் மற்றொரு கவிதை மாலை விழாமல் இருந்தது!

குதுரேமுக் மத்திய சர்க்காரின் ப்ராஜெக்ட். மலையெல்லாம் இரும்புக் கனிமம் — ஹேமடைட், மாக்னடைட் என்று படுகைட்டாகத் திரும்பும் இடம் எல்லாம் இரும்பு. அதை மலையின் முகத்தைச் சுரண்டி, உதிர்த்து, பொடி பண்ணி, பைப் மூலம் மங்களூர் துறைமுகத்துக்கு அனுப்புகிறார்கள். அவ்வளவுதான் மொத்த விஷயமே. சுமார் மூவாயிரம் பேர் இந்த வேலையில்தான் கவனமாக இருக்கிறார்கள். ஆதலால் எல்லாமே மகா! மகா சுரண்டல், மகா பொடி பண்ணல், மகா அனுப்பல்! ராட்சஸ இயந்திரங்கள் மலைமண்ணைச் சுரண்டுவதற்கு. ஒரு கோபுர உயரத்துக்கு மஞ்சள் கழுத்துடன் இரும்பு ஒட்டகங்கள் (இந்தத் தலைப்பில் நாவல் எழுத உத்தேசமில்லை). அருகே 'ஹால்பேக்' என்று 120 டன் மண்ணை முதுகில் தூக்கிக் கொட்ட, வல்ல லாரிகள் உள்ளன. டயர் சக்கரங்களே பத்தடி உயரம் இருக்கும். மலை உச்சியில் சுயாட்சி பெற்றுவிட்ட ப்ரிஹிஸ்டாரிக் மிருகங்கள் போல இவ்வியந்திரங்கள் உலவி சுரண்டித் தள்ளுகின்றன. அங்கிருந்து விழும் மண், கல் கலவையை உடனே பொடி செய்து சைஸ் குறைத்துச் சுமாரான அரவையில் சுமாரான பதத்தில் கீழே மலையடிவாரத்துக்கு அனுப்புகிறார்கள். அடிவாரத்தில் சுமார் ஐந்து மாடிக் கட்டிட உயரத்துக்கு மீண்டும் அரைக்கும் இயந்திரங்கள், சல்லடைகள். முகப்பவுடரைவிட ஸன்னத்துக்கு அரைத்து கான்ஸண்ட்ரேட்டர் என்று கனிமத்தின் காட்டத்தை அதிகரிக்கிறார்கள். பின்பு ஜாதி பிரிக்கிறார்கள், நீருடன் கலக்கிறார்கள். ஒருமாதிரி கொழ கொழவென்று பண்ணி பைப் மூலம் மலையேற்றி மங்களூர் துறைமுகத்துக்கு

* குதுரேமுக் நகரத்தின் தோற்றம்.





* சுரங்கத்தின் முக்கிய பகுதியான 'கான்சன்ட்ரேட்டர் பிளாண்ட்.'

* இரும்புத் தாதுவை சுமந்து செல்லும் 'கன்வேயர் பெல்ட்.'



அனுப்புகிறார்கள். சுமார் 40 கிலோ மீட்டர் பைப் மூலம் இரும்புக் கனி அனுப்பப்படுவது இந்தியாவில் முதல் முறை. துறைமுகத்துக்குச் செல்லும் இரும்புமண் கப்பல் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. **(அவர்கள் அதை இரும்பாக்கி மறுபடி நமக்கு விற்க!)**

குதுரேமுக் மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் உள்ளது. அதன் இரும்பின் தரம் கொஞ்சம் குறைந்தது. இந்த ப்ராஜெக்ட் கல்பாக்கம் போல் ஒரு பிடிவாத ப்ராஜெக்டு! என்னதான் செலவானாலும் முடித்தே தீருவது என்ற வைராக்கியத் திட்டம்! மத்திய சர்க்கார் இவ்விதம் பற்பல வெள்ளை யானைகளைக் கைக்கொள்ளுவது வழக்கம்தானே! குதுரேமுக்குக்கு ஆரம்பத்திலிருந்து நல்லதங்காள் கதை மாதிரி பல அல்லல்கள்!

ஈரான் ஷா 'பணம் தருகிறேன்' என்று வாக்குறுதி கொடுத்த கையோடு ஷாவே காலி! வாக்குறுதி காற்றில் பறக்க ஷாவே கைமாற்றாக ஒரு பத்து ரூபாய் கொடேன்' என்று கேட்கத் துவங்கினார். அடுத்து வந்த கோமேனி ஈராக்குடன் சண்டை போடுவதிலும் பெண்களைக் கண்ணடித்த குற்றத்துக்குச் சாட்டையடி கொடுக்கவும் கவனமாக இருக்கிறார். 'குதுரேமுக்கா? அது எங்கிருக்கிறது?' என்ற கேள்வி! அப்புறம் இங்கே அங்கே என்று பணம் சேர்த்து ஒருவழியாக ப்ராஜெக்டை முடித்து இரும்பு மண்ணை வாங்க ஆள் தேடி மங்களூரிலும் பதினாயிரத்திலும் எவ்வளவுதான் சேர்த்து வைப்பது? இப்போதுதான் விடிவு காலம் வந்துள்ளது. யூகோஸ்லாவியா, ஜப்பான் போன்றவர்கள் வாங்கலாமா என்று தீர்மானித்து யோசித்துப் பைக்குள் கைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். மங்களூரில் ஒரு 'பெல்லட்டைஸேஷன்' பிளாண்ட் ஏற்படுத்திப் பில்லைகளாக்கி அதன் விற்பனைச் சாத்தியத்தை அதிகரிக்கிறார்கள். மேலும் ஸ்பான்ஜ் அயர்ன் தொழிற்சாலை ஒன்று மங்களூரிலேயே ஏற்படுத்தலாமா என்று யோசித்து வருகிறார்கள். இது வரை சுமார் 600 கோடி ரூபாய் செலவு ஆகியுள்ளது! வாங்குவதற்கு மட்டும் சரியான ஆட்கள் கிடைத்துவிட்டால் இந்த ப்ராஜெக்டை 'பீட்' அடிக்க முடியாது! கொடுத்த காசு திரும்ப வருவதற்கு கி. பி. 2001 ஆகும்! அதனாலென்ன, பரவாயில்லை. அதுவரை இந்த அரிய பெரிய சாதனையை, மலைமுகட்டில் காட்டில் அமைத்திருக்கும் இன்ஜினியர்களின்' சாதனையைப் பாராட்டுவோம். பப்ளிக் செக்டர் என்பது பணம் சம்பாதித்து லாபம் ஈட்ட வேண்டும் என்று இப்போதுதான் ராஜீவ் புதிதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்! முன்பெல்லாம் அதன் சமூகப் பொறுப்புக்களில்தான் அழுத்தம் அதிகம்!

அருகே போனால் குதுரேமுக் ரொம்ப அழகாக இருக்கிறது. மலைமடியில் சோப்புப் பெட்டிகளைச் செருகியது போல் வீடுகள் உள்ளன. அவைகளைச் சில வேளைகளில் சல்லாத் துணியில் மூடியது போல, கொஞ்சம் முனைந்து கைநீட்டினால் பறிக்க முடியும் போல, மேகங்கள்! சினிமா செட்டில் போல் இந்துக் கோயில், முஸ்லிம் மசூதி, கிறிஸ்தவ சர்ச் மூன்றும் ஆளுக்கொரு குன்றில் வீற்றிருந்து ஒன்றை ஒன்று ஒற்றுமையாய்ப் பார்த்துக் கொண்டிருக்கின்றன! தெற்கு கானரா பிரதேசத்துக் கன்னடம் பிரதானமாகப்

பேசப்படுகிறது. செக்யூரிட்டியில் தமிழர்கள் இருக்கிறார்கள். மஞ்சள் ஹெல்மெட் தொப்பியில் இன்ஜினியர்கள், ஜீப்புகள். நாகரீகத்திலிருந்து விலகி வந்து நான்கு நாட்கள் நிம்மதியாக இருக்கச் சிறப்பான இடம். ஐந்தாவது நாள் பைத்தியம் பிடித்துவிடும்.

இங்கே நிரந்தரமாக இருப்பவர்களுக்கென்று ஒரு தனி மனோபாவம் வேண்டும். தினம் தினம் மலையையும் மழையையும் பார்த்துக் கொண்டிருக்கும் பொறுமை வேண்டும். (சிரபுஞ்சிக்கு அடுத்தது இங்கேதான் அதிக மழை) செய்தித்தாள் வர பேப்பர் டாக்ஸிக்காகக் காத்திருக்க வேண்டும். பார்த்த முகத்தையே பார்த்துத் தினந்தவறாமல் "ஹலோ" சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வப்போது சினிமாக்காரர்கள் படையெடுப்பார்கள். அதைக் கண்டுக்காமல் தம் வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டும். முரளி இங்கே ஆரம்ப காலங்களிலிருந்து ப்ளாண்ட்டில் இருக்கும் இன்ஜினியர். கனடா தேசத்து கம்ப்யூட்டரிலிருந்து ஜப்பானிய இயந்திரங்கள் வரை பார்ட் பார்ட்டாகப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார். "ப்ளாண்ட் இன்ஜினியரை வைத்து ஒரு நாவல் எழுதி விடுங்கள்" என்றார்! (முரளியும் நானும்தான் அதைப் படிக்க வேண்டும்.)

பப்ளிக் ரிலேஷன்ஸ் பொதுத் தொடர்பு அதிகாரியாக மோகன் பணியாற்றுகிறார். சமீப காலத்தில் இங்கே பிலிம் கோஷ்டிகள் அதிகமாகி விட்டதால் இவர் ரொம்ப பிஸியாக இருக்கிறார். இதுவரை எட்டு பத்து இந்தி, தெலுங்கு படங்கள் கன்னடப்படங்கள் இங்கே ஷூட்டிங் நடந்து விட்டதால் ஊரில் இருக்கும் ஜிம்மி நாய் உட்படச் சகலரும் 'எங்கே ரோட், எங்கே சேஸ்' என்று புள்ளி விவரம் தருகிறார்கள்! பூனம் தில்லனை 'ஷிவாகா இன்ஸாஃபில்' க்ரேனில் தொங்க விட்டதிலிருந்து பிலிம் ஷூட்டிங் அனுமதிப்பதைக் குறைத்து விட்டார்கள். (மத்திய சர்க்காரிலிருந்து கோபித்துக் கொண்டு ஆர்டர் வந்ததால்) இருந்தாலும் சினிமாக்காரர்கள் கூட்டம் அதிகமாய் காணப்படுகிறது. நாங்கள் போயிருந்த போது ராஜ்குமார் நீபா எல்லோரும் டேரா போட்டிருந்தார்கள்.

நாங்கள் போயிருந்தபோது மழையும் பெய்தது. சிரபுஞ்சிக்கு அடுத்தபடி இங்கேதான் அதிகப்படி மழை என்று நனைந்த குரலில் மோகன் சொன்னதை நம்ப முடிந்தது. சட்சட்டென்றுமழை பெய்கிறது. உடனே ஓடிப் போய்விடுகிறது! ஒரு அவசர மேகம் விலகிப் போய், வானம் நீலம் காட்ட அவரவர் உசிதப்படி வெளியே கிளம்பிவிடுகிறார்கள். 'வெளியே' என்றால் என்ன?

சினிமா சினிமாவெல்லாம் இல்லை. அடுத்த மலையில் இருக்கும் பக்கத்து வீட்டுக் காரரை ஸ்கூட்டரில் போய்ப் பார்க்கலாம். ஆபீசர்ஸ் கிளப்பில் ரம்மி பிரிட்ஜ் ஆடலாம். பொது வீடியோவில் 'பேதாப்' போன்ற படங்கள் பார்க்கலாம். இயற்கைக் காட்சி, இயற்கைக் காட்சி என்று அலுக்கும் வரை பார்க்கலாம்!

நாங்கள் இரண்டு தினங்கள் இருந்தோம். விடை பெறும்போது ப்ராஜெக்டில் இருப்பவர்களிடம் 'என்ன ஒரு நிம்மதி! என்ன ஒரு அமைதியான சூழல்! இதில் வந்து வாழக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அடுத்த முறை வந்து இங்கே ஒரு மாதம் அக்கடா என்று இருக்கணும்' என்றெல்லாம் சொல்லி டாட்டா காட்டிவிட்டுப் புறப்பட்டோம். நிஜமாகவே 'வருவீர்களா?' என்று மனச்சாட்சியை மூலையில் மடக்கிக் கேட்டால், 'ம்ஹூம் கஷ்டம்' என்றுதான் பதில் கிடைக்கும். என்றாலும் இந்தக் காடுமலைப் பிரதேசத்தில் இருந்து கனிமம் எடுக்கும் நண்பர்களுக்கு ஒரு சபாஷ் போடத் தோன்றுகிறது.

மூக்கைத் தேய்த்து மூளியாக்காதீர்!

சரியான வார்த்தைகளைச் சரியான ஒலியுடன் உச்சரிப்பதில் பேர் போனவன் தமிழன். ஆங்கிலம் உட்பட செப்பு மொழி பதினெட்டையும் சரியாக உச்சரிக்கும் நாக்கு தமிழ்நாட்டுக்கு இருக்கிறது. பெங்களூரை மட்டும் 'பங்களூராக்கி' ரசிக்கும் தாத்பர்யம் விளங்கவில்லை. பெங்களூர் என்று பேர் வந்ததற்குக் காரணம் இருக்கிறது. கர்ண பரம்பரைக் கதை இருக்கிறது. கெம்பே கௌடன் ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடப் போன போது... என்று ஆரம்பித்துச் சொன்னால் கொட்டாவி வரும். வேண்டாம். கேட்டுக் கேட்டுச் சலித்த 'வெந்த பயிறு' கதைதான். ஆகவே பெந்தகாளூர்தான் பெந்தகளூர் ஆகி, 'பெநகளூர்' ஆகி பெங்களூராய் மருவி நிற்கிறது. இதை மறுபடி மூக்கைத் தேய்த்து மூளியாக்கிவிட்டு 'பங்களூர்' எனும் போது செம்புள்ளி குத்தியது போல் இருக்கிறது. இனியாவது கவனிப்பார்களா?

—அன்னம் விடு தூது இதழில் அமுதவன்

(அ. குமார்.)

குழந்தை பிறந்த 6 மணி நேரத்திற்கு பின்பு, அது முதல் தடுப்பு ஆகாரம் பெறுகிறது. அதை ஊட்டுவது நீங்கள்தான்.



இயற்கையின் ஒரு வரப்பிரசாதம் தாய்ப்பால்.

தாய்ப்பாலில் இயல்பாகவே நோய் எதிர்ப்புப் பொருள் அடங்கியுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, வயிற்றில் வாயுக்கோளாறு மற்றும் இதர நோய்களுக்கு எதிரே பாதுகாப்பு அளிப்பதில் முககிய பங்காற்றுகிறது தாய்ப்பால்.

இயல்பான ஊட்டச்சத்து

இயற்கையும் அறிந்துள்ளது: குழந்தைக்கான தாய்ப்பாலே உன்னத உணவாகு பவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும் (உதாரணமாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் வைட்டமின் 'சி' குறைவினால் ஏற்படும் ஸ்கர்வி நோயால் பொதுவாக பாதிக்கப்படமாட்டார்கள்) முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் பெறுகிறது. காரணம், பசியைத் தணித்திட குழந்தை முலைப்பாலை உறிஞ்சும்போது, நீங்கள் குழந்தையை அரவணைத்துப் பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்

உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றாக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—
இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் ; தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM5/83

3

"கடை விரித்தார்கள்; கொள்வாரில்லை!"

சந்திரசூடன் ஒரு வளவில் குடியிருந்தார். அதற்கு மூளிப் பிள்ளையார் காம்பௌண்டு என்று பெயர். அந்தக் காம்பௌண்டை அடுத்து ஒரு பிள்ளையார், துதிக்கை உடைந்து மூளியாக இருந்தார். அந்தக் காம்பௌண்டிற்குள் சந்திரசூடனையும் சேர்த்து நான்கு குடித்தனங்கள். அந்த வளவின் மாடிப் பகுதியில் சந்திரசூடன் குடியிருந்தார்.

கீழே எதிர்வீட்டின் வராந்தாவில் பரணி ஒருமேஜைவிளக்கினடியில்படித்துக்கொண்டிருந்தான். பக்கத்து வீட்டு வாசல் நடையில் ராதா, கன்னத்தில் கையூன்றியபடி அமர்ந்திருந்தாள். அவளுடைய கணவர் கோபால் இன்னும் வீடு திரும்பவில்லை. எப்போது வந்துசேர்கிறாரோ?கிளப்பில்குடித்துவிட்டுச் சூதாடிக் கொண்டிருப்பார்.

படித்துக் கொண்டிருந்த பரணி நிமிர்ந்து பார்த்தான். நடையில் அமர்ந்திருந்த ராதாவைக் கண்டதும், "அக்கா! இன்றைக்குச் சீக்கிரம் வந்துவிடுவாரா? எனக்குப் பாடத்தில் ஒரு சந்தேகம் கேட்க வேண்டும்." என்றான்.

"அவரை நம்பி நீ பாடம் படிக்கவா? அவர் எப்போது வந்து சேர்கிறாரோ?" என்றாள், ராதா.

பரணி மேற்கொண்டு பேசாமல் படிக்க முனைந்தான். ராதா நீண்ட பெருமூச்சு விட்டாள்.

வாழ்க்கையை எப்படியெல்லாந்தான் வாழ்ந்து தொலைக்கிறார்கள். ஆனந்தமாக வாழ வேண்டியதை விட்டுவிட்டு, இப்படி நரக வேதனைப்படுகிறார்களே. கோபால் ஆனந்தமாகத்தானிருக்கிறாரோ ...? என்ன ஆனந்தம்? முக்கால்வாசி நாட்களில் நிலை மறந்து மயங்கிப் போய்த்தானே இருக்கிறார். ஆனந்தம் என்பது ஓர் அனுபவம். அந்த அனுபவத்தை உணர முடியாமல் மயங்கிக் கிடந்தால்...? அவ்விதம் மயக்கத்தில் இருப்பதே ஆனந்தந்தானோ? மயக்கத்தில் எதை உணர முடியும்...?

சந்திரசூடனின் பார்வை, மீண்டும் கீழே சென்றது. ராதா, சிலை போல் அமர்ந்திருந்தாள். இப்படி ஓர் அழகான அறிவுள்ள பெண்ணோடு கூடியிருப்பதை விடவா சூதும், மதுவும் ஆனந்தத்தைக் கொடுத்துவிடும்?

இவளுக்கு வாய்த்திருக்கும் கணவன் மொடாக் குடியன் — பேராசிரியர்! அறிவு உலகத்தின் பிரதிநிதி... அடிமுட்டாள்...

சந்திரசூடன் திட்டியபடியே சன்னலை விட்டு விலகிச் சென்று விளக்கைப் போட்டார். கட்டிலில் அமர்ந்தார். என்ன செய்வதென்றே தோன்றவில்லை. மீண்டும் ஒரு முறை வெற்றிலை போட்டுக் கொண்டார். அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். துப்புரவாகத்தானிருந்தது. கீழே குடியிருக்கும் பார்வதிதான் பெருக்கியிருப்பாள்.

அவருடைய அறையைப் பெருக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் அவளுக்குத்தான் எவ்வளவு அக்கறை! ஒருமுறை அந்த அறைக்கு வந்தவள் அறையின் அலங்கோலத்தைப் பார்த்துவிட்டு, "எழுத்துலகப் பிரும்மாவின் உலகம் இப்படியா இருப்பது?" என்று முகத்தைச் சுளித்தாள்.

"நீதானே இந்த அறையை இலக்கிய ஒர்க்ஷாப் என்றாய். ஒர்க்ஷாப்பில் சாமான்கள் கண்ட கண்ட இடங்களில் இறைந்து கிடக்கத்தானே செய்யும்." என்றார் சந்திரசூடன்.

அன்றிலிருந்து அவர் அலுவலகத்திற்குச் சென்ற பிறகு தினமும் அவள் அங்கு வந்து பெருக்கிச் சுத்தப்படுத்துவாள்.

பார்வதியின் நினைவுவந்ததும் அவருடைய சிந்தனை அவளைப் பற்றித் தொடர்ந்தது — அந்த வளவில், மலர்ந்தும் மணம் வீசாமல் இரண்டு மலர்கள். ஒன்று ராதா: மற்றொன்று பார்வதி.

பார்வதிக்கு இருபத்தைந்துவயது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கணவன் கார் விபத்தில் இறந்து விட்டான். இப்போது இவளுக்கு வாழ்க்கையில் பிடிமானமாக இருப்பவள், இரண்டு வயதுக் குழந்தை சாரதா மட்டுந்தான். அந்தப் பெரிய வளவு இவளுடையதுதான். வீட்டு வாடகை நிறையக் கிடைக்கிறது. இதுபோக, இவளுடைய கணவன் வியாபாரத்தில் ஈட்டிய பெருந்தொகை, பாங்கில் கிடக்கிறது. துணைக்கு இவளுடைய தூரத்து உறவில் ஒரு பாட்டி மட்டுந்தான்.

சந்திரசூடனின் கவனம் மேஜை மீதிருந்த நோட்டுப் புத்தகத்தின் மீது திரும்பியது. கடந்த மாதம் எழுதத் தொடங்கிய நாவல், பாஸஞ்சர் ரயில் வண்டி மாதிரி இடையில் நிற்கிறது. இன்னும் சிந்தனைத் தடத்தில்

உணர்வுகள் உறங்குவதில்லை

ர. சு. நல்லபெருமாள்

கைகாட்டி ஏறவில்லை. ரயில் வண்டி எப்போது மீண்டும் கிளம்புமோ?

இதற்கிடையில் சம்பத் அவரை இந்திராணியின் வரலாற்றை எழுதத் தூண்டுகிறார். அவர் வேலை பார்க்கும் பத்திரிகையின் முதலாளியும் எழுதும்படி தூண்டுகிறார்.

அவளைப் பற்றி என்ன எழுதுவது?— ஒரு சினிமாக்காரியைப் பற்றி உலகம் தெரிந்து ஆகப் போவதென்ன?

ராதா விட்டுக் க டி கா ர ம் பாடத் தொடங்கி. ஆரோகணத்தைமட்டும்வாசித்து விட்டு நிறுத்திக் கொண்டது. சந்திரசூடனுக்குப் பசி எடுத்தது. எழுந்திருக்க மனமில்லை. யாராவது அருகிலிருந்து ஊட்டினால் நன்றாயிருக்கும். படுத்துக் கொண்டே சாப்பிட்டு விடலாம். அம்மா அப்படித்தான் ஊட்டி விடுவாள். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது பல நாட்கள் அவள் தானே ஊட்டியிருக்கிறாள், மகனுடைய படிப்பு கெட்டு விடக் கூடாதென்று. அவர் படித்துக் கொண்டிருக்கும்போதே ஊட்டி விடுவாள். ஓ...! அந்த அருமை, பாசம்...

சந்திரசூடனின் மனம் பழைய நினைவில் புகுந்தது— "ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டால் இப்படி ஊட்டி விடுவாள். நான் எத்தனை நாள் இப்படி ஊட்ட முடியும்?" என்பாள், தாயார்.

"நீ இருக்கிறவரை ஊட்டி விடு."

"பெண்டாட்டி ஊட்டுவது மாதிரி இருக்குமாடா?"



''மனைவி ஒரு கால்கட்டு. என்னால் விலங்கை மாட்டிக்கொண்டு சாப்பிட முடியாது.''

''கல்யாணம் செய்தவனெல்லாம் சிறைப்பட்டா கிடக்கிறான்?''

இதற்கு ஏதாவது தத்துவத்தைக் கூறுவார், சந்திரசூடன். பாவம். அந்தத் தாயாருக்குத் தத்துவம் புரியாது. கல்லூரிப் படிப்பு முடிந்ததும் பல இடங்களில் வேலை பார்த்துவிட்டுக் கடைசியில் தமக்குப் பொருத்தமான பத்திரிகை ஆசிரியர் வேலையை அவர் ஒப்புக்கொண்ட பிறகு ஒரு நாள் தாயார் தீர்மானமாகக் கேட்டாள்:

''உனக்குப் பிடித்த வேலை கிடைத்துவிட்டது. இனிமேல் கலியாணம் செய்துகொள்ளலாமே.''

அதற்கு சந்திரசூடன். பதில் சொன்னார்: ''அம்மா, எனக்கு முன்னே பின்னே கலியாணம் செய்து அனுபவமில்லை. உனக்குத்தான் அந்த அனுபவம் இருக்கிறது. நீ சொல்லு. கலியாணம் செய்துகொண்டு மூன்று பிள்ளைகளைப் பெற்றாய். வளர்த்தாய். பெண் பிள்ளைகள் இரண்டிற்குக் கலியாணம் செய்து வைத்தாய். என்னைப் படிக்க வைத்தாய் மாடாக உழைத்தாய். இதோ பார். இன்னும் எனக்குச் சோறு ஊட்டிக்கொண்டிருக்கிறாய். இத்தனை வருஷ தாம்பத்ய வாழ்க்கையில் நீ என்னம்மா சுகத்தைக் கண்டாய்? நானும் உன்னைப் போல் கலியாணம் செய்து கொண்டு. பிள்ளைகளைப் பெற்று உழன்று கொண்டு காலத்தைக் கடத்திவிட வேண்டும் என்று நினைக்கிறாய்? உன்னுடைய மகனாவது இந்த உலகத்தில் நிம்மதியாக. சுதந்திரத்துடன் வாழட்டுமே. யோசித்துச் சொல்.

இதைக் கேட்ட பிறகு அவருடைய தாயார் கல்யாணத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. அவளுடைய வாழ்க்கை அனுபவம். அவளைச் சிந்திக்க வைத்தது.

இப்படியும் ஒரு விளம்பரம்!

விளம்பரத்திறமை என்பதா, கிண்டல் என்பதா என்று புரியவில்லை. சேலம் திருவள்ளுவர் சாலையின் அருகே கல்ரொன்றில் 'எதிரிக்கு எச்சரிக்கை' என்ற தெலுங்கு டப்பிங் படத்தின் விளம்பரத்தில், ''விடியோ புகழ் கமல்'' என்று போடப்பட்டு உள்ளது.

— அ. கிறிஸ்டபர்.



இப்போது பசிக்கிறது. எழுந்து கீழே போய் மூக்காண்டி ஐயர் கடைக்குப் போனால் தான் தோசை சாப்பிட முடியும். கொஞ்ச நேரம் பசியை அடக்கியபடியே படுத்துக் கிடந்தார். ஆனால் வயிறு குறுகுறுத்தது. எழுந்து விளக்கை அணைத்துவிட்டு மாடிப்படியில் இறங்கினார்.

திண்ணையில் பரணி படித்துக் கொண்டிருந்தான். ராதா வாசல் நடையில் இன்னும் அமர்ந்திருந்தாள். அவளைக் கடந்து கீழ்ப்புறமிருந்த வீட்டை நெருங்கிய போது சன்னல் வழியே உள்ளே கவனித்தார். வீட்டினுள் பார்வதி எழுதிக் கொண்டிருந்தாள். அவருடைய நாவலை நகல் எடுத்துக் கொண்டிருப்பாள். அவருடைய எழுத்துக்களுக்கு நகல் எடுத்துக் கொடுப்பதில் அவளுக்கு மிகுந்த ஆர்வம். அவளைப் போலவே அவளுடைய கையெழுத்தும் மிக அழகாக இருக்கும்.

ஓ...! இவ்வளவு நேரத்திற்குப் பிறகும் வேலை செய்கிறாளே! தனிமையில் இருப்பவர்களுக்கு வேலைதான் துணை. துன்பங்களையும். வேதனைகளையும் வேலையில் ஈடுபட்டுத்தான் மறக்க வேண்டும்...

பார்வதியைப் பற்றிய நினைவிலேயே தெருவில் இறங்கினார். சந்திரசூடன். காம்பௌண்டு வாசலை அடுத்திருந்த மூளிப் பிள்ளையார் இருளில் அமர்ந்திருந்தார்.

''நீர் மூளியாக இருப்பதால் இந்தக் காம்பௌண்டில் உள்ளவர்களின் வாழ்வையும் மூளியாக்கி விட்டீரோ?'' என்று முனகியபடியே மூக்காண்டி ஐயர் கடையை நோக்கி நடந்தார்.

கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ரேடியோ. செய்தி சொல்லத் தொடங்கியது. முதலில் இந்திராணியின் மரணம் பற்றியும். இறுதி ஊர்வலம் பற்றியும் கூறியது. கடைசியில் இந்திராணியின் மரணச் செய்தி கேட்டு மூவர் தற்கொலை செய்த செய்தியையும் கூறிற்று.

சந்திரசூடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நினைவு இந்திராணியைச் சுற்றி வந்தது —எங்கோ ஒரு சிறு கிராமத்தில் பிறந்த பாமரப் பெண். பிரபலமாகி விட்டதை எண்ணிப் பார்த்தார். புதிராகவே இருந்தது.

அதைப் பற்றி ஒரு முறை இந்திராணியே அவரிடம் மனம் விட்டுக் கூறி அழுதிருக்கிறாள். அவள் சொன்னாள்: ''இந்த உடலைத்தான் எல்லோரும் பார்த்துப் பார்த்து மாய்ந்து போகிறார்கள். ஒருநாள் இந்த உடல் மறைந்து விட்டால் இந்த ரசிகர்கள் என்ன பண்ணுவார்கள்? இவர்களைப் பழி வாங்க நானே என் உடலை அழித்துவிடப் போகிறேன். அப்போது என்ன பண்ணுவார்கள்?''

ஏதோ விளையாட்டுப் போக்கில் இதைச் சொன்னாள் என்றுதான் சந்திரசூடன் அப்போது எண்ணியிருந்தார். அவள் சொல்லி இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. இப்போதுதான் சொன்னதை நிஜமாக்கி விட்டாள்.



மந்திரி: இரவில் திருடர் பயம் அதிகமாகிவிட்டதுன்னு சொன்னதற்கு அரசர் என்ன செய்தார் தெரியுமா?

தளபதி: என்ன செய்தார்?

மந்திரி: இரவில் நகர்வலம் போவதை நிறுத்திவிட்டார்.....!

— கே. மலர்விழி.

சந்திரசூடன் சாப்பிட்டுவிட்டு வீட்டை அடைந்த போது பார்வதி இன்னும் எழுதிக் கொண்டிருந்தாள். திண்ணையில் ராதாவும், பரணியும் பேசிக் கொண்டிருந்தார்கள். சந்திரசூடனைப் பார்த்துவிட்டு, "இதோ சார் வந்தாச்சு. அவரிடமே கேட்கலாம்." என்றான் பரணி.

சந்திரசூடன், அவர்களுக்கருகே திண்ணையில் அமர்ந்தார். "என்ன கேட்கப் போகிறீர்கள்?" என்றார். அவருடைய பார்வை பக்கத்து வீட்டுச் சன்னல் மீது திரும்பியது. பார்வதி சன்னல் அருகில் வந்து அமர்ந்தது தெரிந்தது.

ராதா கேட்டாள்: "விவேகானந்தர், ராமகிருஷ்ணர், ராமலிங்க அடிகள் போன்றோர் பிறந்து இந்த நாட்டிற்கு என்ன சாதித்தார்கள்?"

"அந்த மகான்கள் நம்மிடையே ஓர் உணர்வை உண்டு பண்ணினார்கள். இந்நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்தார்கள்." என்றார்.

"ஹூம். பெருமை. பழம் பெருமை தான் இவர்கள் பிறந்திருக்காவிட்டாலும் இந்த நாடு இப்போது இருப்பது போல்தானிருக்கும். அவர்கள் தோன்றியதால் எந்த மாறுதலையும் அடைந்து விடவில்லை. மக்கள் வரவரத் தரம் குறைந்துவிட்டார்கள். விவேகானந்தரின் பாதிப்பு என்னவாயிற்று? ராமகிருஷ்ணரின் போதனைகள் என்னவாயிற்று? இந்த மகான்களின் பெருமைகளையெல்லாம் யாரிடம் போய்ப் பீற்றிக் கொள்ள?" என்றாள்.

இதைக் கேட்டுப் பரணிக்கு எரிச்சல் வந்தது. "அப்படியானால், அந்த மகான்கள் பிறந்ததே வீண் என்கிறீர்களா? அவர்கள் மகான்கள் இல்லை என்கிறீர்களா?" என்று கோபத்துடன் கேட்டான்.

"அவர்கள் மகான்கள்தாம். ஆனால் அவர்கள் மகான்களாக இருந்ததால் யாருக்கு நன்மை? அவர்களுடைய பெயரில் பல சங்கங்கள் இருக்கின்றன. தர்மங்கள் செய்கின்றன. அவ்வளவுதான். அவர்கள் தோன்றியது வீணே. வீணில்லையோ: அவர்களால் இந்நாட்டு மக்களை இம்மியளவு கூட மாற்ற முடியவில்லை. ராமலிங்க அடிகளே மனம் வெதும்பி, 'கடை விரித்தேன். கொள்வாரில்லை' என்றுதானே சொன்னார்!" என்றாள் ராதா.

பரணி பதில் கூற முடியாமல் திணறினான். கோபந்தான் எழுந்தது: "சார், நீங்கள் சொல்லுங்கள். அந்த மகான்களால் எந்த நன்மையுமே இல்லையா?" என்றான்.

"நன்மை தீமைகளை லாப நஷ்டக் கணக்கு மாதிரி போட்டுப் பார்க்க முடியாது. ஒரு காலக் கட்டத்தில் மக்களின் அவல நிலையை உணர்ந்து பொங்கி எழுந்து, மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டினார்கள். ஆனால் மக்கள் குருடர்களாகவே இருக்கிறார்கள். என்ன செய்வது? நம்முடைய கலாச்சாரங்களைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டிருந்த மேலை நாட்டாரின் அறிவீனத்தைப் போக்க விவேகானந்தர் முயன்றார். நாட்டின் பெருமையை உயர்த்தினார்." என்றார், சந்திரசூடன்.

"அப்படிச் சொல்லுங்கள், சார்." என்று உற்சாகத்தில் இரைந்தான், பரணி.

திடீரென்று தெரு வாசலில் சலசலப்புக் கேட்டது. சைக்கிள் ரிக்ஷாவிலிருந்து கோபால் இறங்கிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டதும், "எத்தனை விவேகானந்தர்கள் பிறக்கட்டுமே: இவரைப் பாதிக்காது." என்றவாறே ராதா எழுந்தாள்.

உள்ளே முற்றத்தினுள் வந்த கோபால், சற்றுத் தள்ளாடியபடியே நின்றார். சந்திரசூடனைக் கண்டதும், "என்ன சார், உங்களை இன்று கிளப்பில் காணவில்லையே. வெளியிலே எங்காவது வேலையா?" என்று குளறியபடியே கேட்டார்.

"காலையில் அதைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். இப்போது வீட்டிற்குப் போங்கள். ராதா உங்களுக்காக வெகுநேரமாகக் காத்திருக்கிறாள்." என்றார், சந்திரசூடன்.

"இதுதான் எனக்குப் பிடிக்காது. இதெல்லாம் பத்தாம்பசலித்தனம். புருஷனுக்காக மனைவி காத்துக் கிடப்பது. ஏன் காத்திருக்க வேண்டும்?" என்று குளறியபடியே வீட்டு வாசலை நோக்கி நடந்தார், கோபால்.

வாசற்படி ஏறியதும் திரும்பி, "சந்திரன் சார், உங்கள் நடிகை இந்திராணி போய் விட்டாளாமே?" என்று இரைந்து கூறினார். பிறகு, வீட்டிற்குள் போய்விட்டார்.

சந்திரசூடன் மௌனமாயிருந்தார். கோபாலின் பேச்சிலிருந்த அலட்சியத்தை உணர்ந்தார். அதேசமயம், அவனுக்காக இறுதி ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தையும் நினைவுபடுத்திப் பார்த்தார்.

'உங்கள் நடிகை இந்திராணி போய்விட்டாளாமே...?'

அந்த 'உங்கள் நடிகை'யின் அர்த்தமென்ன?

எத்தனையோ அர்த்தங்கள். வெளிப்படையான அர்த்தங்களும் உண்டு: அந்தரங்கமான அர்த்தங்களும் உண்டு.

எழுதினால் பெரிய புத்தகமாகவே விரியும்!

(தொடரும்)



வேலைவாய்ப்பு அலுவலகங்களில் எனக்கு
வேலை வாய்ப்பு தர மறுத்ததால்தான் நான்
அமைச்சராகும் வாய்ப்பு கிடைத்தது—
அமைச்சர் அருணாசலம்.
மந்திரி ஆவது எப்படி?
நான் வேலை தராததினால் தான் நீங்
மந்திரி ஆனதாகச் சொல்றீங்க..
சந்தோசமுங்க.. என் பையனுக்
ஒரு வேலை..
ஒரு வேலையும் வேண்டாம்!..
அவனும் என்னைப் போல மந்தி
ஆகட்டும்!
வேலை இல்லாப் பட்டதாரிகளுக்
தான் அமைச்சராகும் முன்னுரி
சரி தான் போ சார்!... இந்த வேலை போனா எனக்கு மந்திரி வேலை கிடைக்குது!
எனக்குப் பாட சான்ஸ் தர மறுத்த சபாக்களுக்கு நன்றி! இப்பொழுது நான் இசைக் கஸ்தூரி முதல்வர்!
'மந்திரி ஆனது எப்படின்னு பேசி இருக்கீங்க.. 'மந்திரி ஆவது எப்படின்னு ஒரு புஸ்தகம் எழுதித் தாங்க. விழா நடத்தி வெளியிட றேன்!



• வேலை இல்லாத பையனுக்கு இப்படி வட்டம் வட்சமா வரதட்சணை கேக்காறீங்களே?
• இன்னிக்கு வேலை இல்லாதவன்.. நாளைக்கு மந்திரி!
வருக! வருக! எங்கள் கல்லூரியில் நன்கு செய்து சேருங்க! இலவச உணவு, உடை, உறை விடம்!
வேலை வாய்ப்புக்குத் தானே படிப்பு? வேலை இல்லாமலே மந்திரி பதவி கிடைக்குது! அப்புறம் படிப்பு எதுக்கு? ஆளை விடு!
மந்திரி பதவி
எல்லோரும் இந்நாட்டு மன்னர்! வேலை இல்லாத எல்லோரும் இந்நாட்டு மந்திரிகள்!!
புரட்சித் தலைவரின் வேலை வாய்ப்புப் புரட்சி!

அம்மா சொன்னதை நம்பாமல் இருக்க முடியவில்லே. நடக்காதா என்று எதிர்பார்க்கும் ஒன்று. அதற்கு அனுசரணேயானதைப் போல எட்டிப் பார்க்கும் சிறு சலனம் ஏற்பட்டால்கூட நம்பிக்கையைக் கொடுப்பது இயற்கைதானே. சோர்வு அப்பிய முகத்தோடு படியேறி வந்து கதவு ஓரத்தில் சியாமளா செருப்புக்களே உதறித் தன்னே விடுவித்துக் கொண்டிருந்தபோது. அவளது தம்பி மணி அடுக்களேயிலிருந்து ஓடி வந்தான்.

''அக்கா, அக்கா காலேயில் ரிஜிஸ்டர் தபால் வந்தது. பிரவுன் கவர்!'' அக்காவிடம் அறிவித்த முதல் ஆள் என்ற பூரிப்பில் மிதந்தான் மணி.

''என்ன கவர்லேய்?'' பேக்கை ஆணியில் மாட்டிவிட்டு உள்ளே சென்ருள் சியாமளா.

''நாலாம் மாசம் பாளேயங்கோட்டைக்கு இண்டர்வியூ'க்குப் போய்ட்டு வந்தயில்லாட்டி, ஸ்டேட் பாங்கு. அதாத்தான் இருக்கணும்; வேலேக்கு ஆர்டராத்தான் இருக்கும்; இல்லாமல் ரிஜிஸ்டரில் அனுப்புவாளு?'' அம்மா தயாராக வைத்திருந்த காப்பியைக் கொடுத்தாள்.

''பிரவுன் கவருக்கா, நான் பார்த்தேன். கையெழுத்துப் போடாமத் தரமாட்டாராம் தபால்காரர். மெட்ராஸிலிருந்துதான் வந்திருக்குன்னுரு!''

விடிவு காலம் வந்தது என்று சியாமளாவின் மனம் ''ஹோ'' வென இரைச்சலிட்டு அருவியாகக் குதித்தது; ஆயிரம் ஆயிரம் மலர்களே அள்ளிச் சுமந்து ஊர்ந்தது. உள்ளுக்குள் ஒரு துள்ளல்; குதூகலிப்பு. ஒரு நொடிக்குள் உலகம் எவ்வளவு ரம்மியமானதாகத் தெரிகிறது இந்தப் 'பச்சோந்தி' மனத்துக்கு. படித்துவிட்டு ரோட்டை அளந்து கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் வேலே

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ 250/- மூன்றும் பரிசுக் கதை-I

இரா. செல்வசுப்பிரமணியன்

(அறிமுக எழுத்தாளர்)



கிடைப்பது லேசுப்பட்ட காரியமா என்ன? அதுவும் ஸ்டேட் பாங்கில் உத்தியோகம். அம்மா சொன்ன மாதிரி 'காலணா உத்தியோகமானாலும் சர்க்கார் உத்தியோகம் கிடைக்கணும்'.

கிளி ஜோஸ்யக்காரன் சொன்னது பொய்யில்லை. மனிதன் பொய் சொல்வான். கிளிக்குப் பொய் சொல்ல என்ன அவசியம்? 'பங்குனி பதினாறுக்கு மேல் ராஜாங்க யோகமிருக்கிறது. சனி பகவானுக்கு எள்ளுத்திரிபோட்டு விளக்குக் கொளுத்தி வை. பனி போலப் படர்ந்த கஷ்டம் விலகிப் போகும்', என்று சொன்னானே, கிளி எடுத்துக் கொடுத் து!

அம்மா சுற்று முறுக்குப் போடுவாள்; அப்பா அதைக் கடைகளில் கொண்டு போட்டுவிட்டு வருவார். முறுக்கு மாவுக்கு, அம்மா 'திருவை'யின் முன்னாலிருந்து இரவெல்லாம் திரிப்பாள்; மாவு திரிக்கும்போது குளிப்பதற்குக் கட்டியிருப்பதைப் போன்று அம்மா பாவாடையை மார்பில் கட்டியிருப்பாள்; அல்லது 'பழந்துணி' ஒன்றை அப்படிக் கட்டியிருப்பாள்; திருவை அரைபடும் ஓசை இரவெல்லாம் கேட்கும்; லைட்டைப் போடாமல் இருட்டுக்குள் இருந்துதான் அம்மா திரிப்பாள்; காலையில் ஒன்பது மணி வரை 'கிடந்து' தூங்குவாள். திருவையோடு திருவையாக அம்மாவின் வாழ்க்கை ஊர்ந்து கொண்டிருக்கிறது.

அப்பா பம்பாய், கல்கத்தாவெல்லாம் சுற்றியவர்; ஹிந்தியில் 'ஹை, ஹை' என்பார்; பம்பாயில் ரயிலில் ஏறும்போது கீழே விழுந்து காலை முறித்துக் கொண்டாராம் பிராயத்தில். நடக்கும்போது ஒருக்களித்துக் கெந்திக் கெந்தி நடப்பார். கேரியரில் முறுக்கு டப்பாவோடு அப்பா சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போவது ஒரு சைஸாக இருக்கும். முறுக்குப் போடுவார்; கையில் காசு புரண்டால் 'தண்ணி' போடுவார்; தண்ணி போட்டு விட்டால் அப்பாவுக்குத் தமிழ் மறந்து போகும். ஹிந்தியில் விளாசித் தள்ளுவார். ஷோலே அம்ஜத்கான் ஸ்ட்ரெப்ஸில் விளம்பரத்தில் 'பகூத் மஜாயா', என்பாரே அது மாதிரி அபிநயித்துப் பேசுவார். பம்பாயில் தான் குடியேறப்போய், மதுப் பழக்கம் தன்னோடு குடியேறிவிட்டதாகச் சொல்வார். நாட்டு நடப்புகளையெல்லாம் பின்னணியோடு விளக்கமாகச் சொல்வார். சியாமளா சின்னப் பெண்ணாய் இருக்கும்போது, 'மிளகாய் வத்தல்' கமிஷன் கடை வைத்து நொடிந்து போனவர். பிறகு எழுந்திருக்கவேயில்லை. 'எண்ணும் எழுத்தும்' தெரியும், அவ்வளவுதான். கலியாணத்திற்கு முன் ஊர் சுற்றுவதில் தணியாத தாகம். ஊரில் இருப்பதைப் போலிருக்கும். திடீரென்று ஆளைக் காணாது. பம்பாயில் இருப்பதாகக் கடிதம் வரும் — தாத்தாவுக்கு. இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் கால்படாத இடமில்லை. கலியாணத்திற்குப் பிறகு ஊர் சுற்றுவது நின்றது. கமிஷன் கடையில் விழுந்த அடிக்குப் பிறகு 'டாம்பீகம்' சுருண்டு கொண்டது. வாழ்ந்து கெட்ட குடும்பம்.

சியாமளாவின் பெரியப்பா பி. டபிள்யூ. டி. யில் நிர்வாக எஞ்ஜினியர். இவர்களையெல்லாம் பூச்சியைப் பார்ப்பதைப் போலத் தான் பார்ப்பார். ஸர்டிபிகேட், 'ட்ரூ காப்பி' யில் அட்டஸ்டேஷன் பண்ணுவதற்குக்கூட சாக்குப் போக்குச் சொல்கிற அப்படி ஒரு பரோபகார புத்தி. வாங்குவதற்கு மட்டும் நீளும் தாராளமான கை!

பெரியப்பா வீட்டில் பாத்திரம் தேய்த்துக் கொடுக்கும் வேலம்மாள் சொன்னதாக அம்மா ஒரு நாள் சொன்னாள், யாரெல்லாமோ வந்து என்னவெல்லாமோ கொடுத்து விட்டுப் போவார்கள். பலாப்பழம், மாம்பழங்களென்றால் கூடை நிறைய, வறுத்த முந்திரி பருப்பு. இப்படி முந்திரிப் பருப்பு பெரியப்பா வீட்டில் எப்போதும் ஸ்டாக் இருக்கும். உதடு அசையாமல் தின்பதில் பெரியப்பா வீட்டில் சிறிசிலிருந்து பெரிசு வரை எல்லாரும் கில்லாடிகள்; பெரியம்மா முந்திரிப் பருப்பை உதடு அசையாமல் கொரித்துக் கொண்டு 'நோட்டை' வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். பணத்தை பீரோவில் அடுக்கி வைத்து அழகு பார்ப்பவர்கள், இவர்களை மதிப்பார்களா என்ன? இவர்களாகவே ஒதுங்கிக் கொண்டார்கள்.

எட்டாவது முடித்து, ஒன்பதுக்குச் செல்லும்போதே சியாமளாவுக்குக் கஷ்டம்தான். கான்வெண்டுக்குச் செல்ல வேண்டும். அலைந்ததுதான் மிச்சம். 'அப்ளிகேஷன் பார்ம்' கூடக் கிடைக்கவில்லை.

பெரியப்பா செல்வாக்கைப் பயன்படுத்தி இரண்டு 'பார்ம்ஸ்' வாங்கி வந்தார். தன் மகனுக்கு ஒன்று. பக்கத்து வீட்டு பார்வதம் பெண்ணுக்கு ஒன்று. தம்பிக்கும் ஒரு மகள்



உண்டு என்று நினைத்துப் பார்க்கவில்லை. 'கான்வென்ட் சீட் என்ன வாழுது. பிச்சைக்காரக் கழுதைகளுக்குப் படிப்பு. பாத்திரம் தேய்க்க வேண்டியதுதானே' என்று யாரிடமோ இடக்கலாகப் பேசினாராம். பணம் இருந்தால் பத்தும் பேசச் சொல்லும்.

சியாமளாவுக்குப் படிப்பில் மட்டும் ஆண்டவன் எந்தக் குறையும் வைக்கவில்லை. வகுப்பில்'முதல்ரேங்'.'லோன் ஸ்காலர்ஷிப்' வாங்கித்தான் டிகிரி முடித்தான். டிஸ்டிங்ஷன். டிகிரி ஸர்டிபிகேட்டோடு வேலைக்கு ஆர்டரையுமா சேர்த்துத் தந்து விடுகிறார்கள். நேற்றுத்தான் டிகிரி வாங்கின மாதிரி இருக்கிறது. இரண்டு வருடங்கள் எங்கே உருண்டோடி ஒளிந்தது என்று தெரியவில்லை. கல்லூரியில் படிக்கும்போதே பழகி வைத்த டைப்ரைட்டிங் இப்போது கைகொடுக்கிறது. சியாமளா டைப்ரைட்டிங்கில் ஹையர். கோர்ட் ரோட்டில் ஜாப் டைப்பிங் சென்டர் ஒன்றில் டைப் பண்ணிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். வரும் வேலைக்குத் தகுந்த கமிஷன். தினசரி ஏழும் கிடைக்கும். மூன்றும் கிடைக்கும். கிடைக்காமலும் போகும். வீட்டுக்கு அருகிலுள்ள பஸ் ஸ்டாப்பிலிருந்து நாற்பது பைசாக் கொடுத்தால் டைப்பிங் சென்டருக்கு அருகிலேயே இறங்கிக்கொள்ளலாம். நாற்பது பைசா இருந்தால் அம்மா ஏன் மாவு திரிக்க திருவையோடு கிடந்து மாரடிக்க வேண்டும். பொடி நடையாகத் தினசரி வந்துவிடுவாள்.

ஒருநாள் இப்படித்தான் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

''குட்டி இந்த வாயல் சேலையிலும் மினு மினுக்கா பாரு. மக்கா, எளிமையிலும் அழகு இருக்கத்தாண்டா செய்யுது. அடடா!''

பார்க்கில் 'பார்' விளையாடிவிட்டு வியர்வையில் குளித்த உடற்கட்டோடு நின்று கொண்டிருந்தது ஒரு கும்பல்.

''நடையா, இது நடையா, ஒரு நாடக மன்றோ நடக்குது....''

கும்பலுக்கு சினிமாப் பாட்டு ஞாபகம் வந்துவிட்டது.

''ரொட்டியத்தான் தின்பளு. குட்டியத்தான் பாப்பளு!''

''கொட்டாம்பட்டி ரோட்டிலே, ஹேஹே..''

''லேய், மத்தவா ஹிண்டு காலேஜில்லா. சிவதாணுக்க குரூப் போட்டோவில இவதானே நிக்கா. பிஸிக்ஸ் மேஜர் குரூப் போட்டோ'' என்றான் ஒருவன்.

ஒருவன் புறங்கையைத் திருப்பி அதில் 'இச்'சென்று ஒலியெழும்ப முத்தம் பதித்தான். கும்பல் 'கலகல'வென்று சிரித்தது.

''பிஸிக்ஸ்னு நியூட்டன் மூன்றாவது விதி தெரியுமா? ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ச்செயல் உண்டல்லவா? முத்தத்துக்குப் பதில் முத்தம் தர வேண்டாமா?'' என்று கீச்சுக் குரலில் கத்தினான் ஒருவன்.

சியாமளா ஒன்றையும் கண்டு கொள்ளாதவளாய் நடந்தாள்.

* * * * *

பணத்தின் வலுவைச் சியாமளாவுக்கு

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்



போட்டி: 16

உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ நபர்களைச் சந்திக்கிறீர்கள். அவர்களில் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத மனிதராக யாரைக் கருதுகிறீர்கள். ஏன்? கீழுள்ள வெற்றிடத்தில் எழுதி. இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு: தவிர. குலுக்கல் முறையில் ஒருவருக்கு விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின்மேல் 'மறக்க முடியாத மனிதர்' என்று தவறாமல் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி: 2.9.85

இன்னும் 37 விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் உங்களுக்காகக்காத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று ஏன் உங்களுடையதாக இருக்கக் கூடாது! வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெற்றுப் பரிசு பெற முயலுங்கள்!

என் பெயர்: ....

விலாசம்: ....

....

அனுபவங்கள் உணர்த்தியிருந்தன. பெரியப்பா வின் மகன், இவளுக்கு இரண்டு வயது மூத்தவன், 'தத்திப் பித்தி' எப்படியோ பி.ஏ.பாஸ் செய்துவிட்டான். ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு பெண்கள் கல்லூரி, பெண்கள் பள்ளி வாசலில் தவம் கிடந்து 'அம்மன் தரிசனம்' செய்துவிட்டு வருவான். பி. ஏ. முடித்த கையோடு பாங்கில் கேஷிய ராகப் போய்விட்டான். பெரியப்பாதான் 'வாங்கி'க் கொடுத்தார். அவன் கேட்டதை யெல்லாம் அவர் 'வாங்கி'க் கொடுப்பார். வேலையையும் 'வாங்கி'யே கொடுத்துவிட்டார். 'வாங்கு'வதற்கு சியாமளாவின் அப்பா எங்கே போவார்.

பி. எஸ்ஸி. கடைசி வருஷம் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மா, அவள் காதில் கிடந்த எண்ணெய் ஏறிய கம்மலை விற்றுத்தான் தந்தாள். தாலியில் கிடக்கும் தங்கப் பின்னை யாரும் சிறுதுகளுப்தான் பாக்கி. திருமணம் முடிந்து வரும்போது நகைகளென்ன, பண்ட பாத்திரங்களென்ன 'சுசீந்திரம்' தேர் மாதிரி அலங்காரமாக வந்தவள் அம்மா.

'நாளைக் காலையில் எட்டு மணிக்கே போய், தபால்காரரை ஆபீஸில் பார்த்து, தபாலைக் கையோடு வாங்கி வந்து விடு' என்று அம்மா சொல்லியிருந்தாள்.


தலை நிறைய தினசரி பூ வாங்கி வைக்க வேண்டும், நல்ல பெருமாள் ஜவுளிக் கடையில் வெளியே நிற்கும் பொம்மைக்குத் தினசரி விதவிதமான புடவைகள் கட்டுவார்களே அது மாதிரி நிறைய வகை வகையாய், நிறுசு நிறுசாய்ச் சேலைகள் எடுக்க வேண்டும். பெரியப்பா முன்னால் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று ஆயிரம் ஆயிரம் ஆசைகளை மனத்தில் சுமந்து கொண்டு, 'அலாவுதீன் அற்புத விளக்'காக கிடைக்கப் போகும்வேலையைநினைத்துப்பூரித்து திருவை யில் மாவு அரைபடும் ஒலி தாலாட்டாகத் தவழ்ந்து வர, அம்மாவுக்கு திருவையிட மிருந்து விடுதலை கொடுக்க வேண்டும் என்று என்னவெல்லாமோ நினைத்துக் கொண்டே தூங்கிப் போனாள் சியாமளா.

* * * * *

ஆனந்த வாழ்வின் தலைவாசல் தனக்காகத் திறந்து அடியெடுத்து வா என்று அழைக்கிறது. அதற்கான அனுமதிச் சீட்டை வாங்கி வருவோம் என்றுதான் காலையில் எட்டு மணி சுமாருக்கு தபால் ஆபீஸுக்குச் சென்றாள் சியாமளா.

'தபால் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தவள் பிடுங்கி எறியப்பட்ட கொடியாகக் கட்டிலில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

படிப்பை முடித்து இரண்டு வருடங்கள் கழிந்து விட்டதால் படிப்பிற்காக வாங்கிய 'தேசிய கடன் படிப்பு உதவித் தொகை'யை **(National Loan Scholarship)** தவணை முறையில் திரும்பக் கட்ட வேண்டும் என்ற சோகச் செய்தியைத்தான் அந்த ரெஜிஸ்டர் தபால் கல்லூரிக் கல்வி இயக்குனர் அலுவலகத்திலிருந்து சுமந்து வந்திருந்தது. சியாமளா கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள். அழுவதைத் தவிர அவளுக்கு வேறென்ன செய்வதென்று தெரியவில்லை.



KARNATAKA INFORMATION/TREE PLANTING

When you plant a tree.......
You plant hope.

PLANT ONE TODAY

Free saplings await you.

When you plant a tree, you are planting a whole lot of benefits. For you, your family, and the people around you.

Our forefathers, realised the importance of trees, that's why in those days every village had a grove of trees. And in the towns almost every house benefitted from the trees around.

Today, unfortunately indiscriminate felling of trees for fuel and timber, cattle grazing, illicit removals and forest fires are fast depleting our previous green heritage. The disappearance of our valuable forests will cause droughts, floods, and environmental degeneration.

But there is hope. Hope arising from confidence in our people. People like you. Yes, you can help by planting a tree. If possible even today, May be in your garden, your back yard, your farm, your school compound..... wherever.

Remember its so easy, and costs you nothing! The Government of Karnataka's Forest Department has launched an action-oriented plan to help you plant trees. They will supply you with saplings and seeds — free of cost. So hurry! Do your bit. There's no time to lose. Get in touch with the nearest office of the Forest Department or write.

The Additional Chief Conservator of Forests,
Social Forestry,
54, Aranya Bhavan,
Malleswaram,
Bangalore-560 003.

ಕರ್ನಾಟಕ ವಾರ್ತೆ

TREES — Your insurance for a beautiful future.

Karnataka Information

மௌனப் புயல்

19

"இந்தப் பையிலே காய்கறி வெச்சிருக்கேன். ஒரு லோஃப் ப்ரெட்டும் இருக்கு. ருமா வீட்டிலே கொண்டு போய்க் கொடு ரஞ்சனி!"

தூக்க முடியாமல் இரண்டு கைகளிலும் கறிகாய்ப் பைகளை கொண்டு வந்து வைத்த அப்பாவை ரஞ்சனி மெல்லிய வியப்புடன் பார்த்தாள். பைகளை நோட்டம் விட்டபோது ருமா வீட்டிற்குக் கொடுப்பதற்காகவே அவர் அதிகப்படியாகக் காய்கறி வாங்கி வந்திருப்பது தெரிந்தது.

கடந்த மூன்று நாட்களின் அசம்பாவித நிகழ்ச்சிகளில் அம்மாவும் அப்பாவும் கலங்கிப் போனது வெளிப்படையாகவே தெரிந்தது. அவர்களது பாத்திரத்தன்மையின் ஒரு கோணம் முதல் முறையாக அவளுக்கு வெளிச்சம் ஆனாற்போல் அவளுள் ஒரு சமாதானம் ஏற்பட்டது.

கடந்த மூன்று தினங்களாய்த் தில்லி நகரம் சீக்கியர்களிடம் பரவலாய்க் காட்டிக் கொண்டிருந்த கோபத்தைக் கண்டு இருவரும் சுபாவமாக அதிர்ந்திருப்பது தெரிந்தது. பாதுகாப்பான இடங்கள் என்று பொதுவாகக் கருதப்படும் அரசாங்கக் காலனிகளில்கூடச் சீக்கியக் குடும்பங்கள் வெளியில் வரப் பயந்து கொண்டு உள்ளே பதுங்கியிருந்தன. கடை கண்ணிக்குக்கூடப் போக இயலாத நிலையில் அக்கம்பக்கத்து ஹிந்துக் குடும்பங்கள் தாமாக வலிய வந்து உதவிய வேகம் மனத்துக்கு நிறைவைத் தந்தது.

இதில் வரிந்து கட்டிக் கொண்டு அப்பா முன் நின்று செயல்பட்டது ரஞ்சனி எதிர்பார்த்திராத ஒரு திருப்பம்.

"எவன் இந்தக் காலனிக்குள் நுழைந்து கலாட்டா செய்கிறான், பார்த்துவிடுவோம்!" என்று நேற்று இந்தக் காலனியின் அஸோஸியேஷன் அங்கத்தினர்கள் அவர்கள் வீட்டில் கூட்டம் போட்டபோது தீர்க்கமாகச் சவால் விட்டார்.

"இங்கே எந்த அசம்பாவிதமும் நடக்க நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் எல்லா ஆண்களும் காலேஜுக்குப் போகும் பிள்ளைகள் உள்படக் கையில் தடியை வைத்துக் கொண்டு அவரவர்கள் தெருக்களை ஷிஃப்ட் முறைப்படி காவல் காப்போம்!"

அங்கத்தினர்கள் எல்லாரும் உடனடியாக ஒப்புக் கொண்டதோடு செயல்படவும் ஆரம்பித்ததில் காலனிப் பக்கம் எந்தப் போக்கிரிக் கும்பலும் நுழையவில்லை. அப்பாவின் அரசியல் கொள்கைகளுடன் காரசாரமான விவாதத்தில் ஈடுபடும் ரமேஷ், உற்சாகமாக அப்பாவுடன் கையில் தடியை ஏந்திக் கொண்டு தெருவைக் காப்பதை அம்மாவே அவளுக்குச் சுட்டிக் காட்டினாள் பெருமையுடன்.

"அப்பாவோட இணங்கி இவன் செய்கிற முதல் காரியம்டி இது!" என்று அதிசயப்பட்டாள்.

அவன் அப்பாவுடன் மோதுவது அரசியல் கொள்கைகளில்; அடிப்படைக் கொள்கைகளில் அல்ல என்று சொல்ல நினைத்து இது அம்மாவுக்கே தெரியும் என்கிற நினைப்புடன் ரஞ்சனி பேசாமல் இருந்தாள். பல பகுதிகளிலிருந்து வந்த செய்திகள் நம்பக்கூட முடியாத அளவுக்குப் பயங்கரமானதாக இருந்தன. ஆரம்பத்தில் ஜனங்கள் காட்டிய கோபம் இயல்பானதாகத் தோன்றிற்று. சில சீக்கியர்களின் அசட்டுப் பேச்சினாலும் பொறுப்பற்ற நடத்தையினாலும் கோபம் தூண்டப்பட்டதாக நினைக்கத் தோன்றிற்று. ஆனால் இந்த இரண்டு நாட்களாக நடந்து கொண்டிருக்கும் அடாவடித்தனமும் மிருகத்தனமும் இதுவரை கேள்விப்படாதது. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் அரசாங்கம் செயலிழந்து நின்றுவிட்ட நிலையை, ஜனங்களின் பொதுவான கோப உணர்வைப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்த மகா நீசத்தனமான போக்கிரிக் கூட்டத்தின் தாக்குதல் இது. அதன் நீசச் செயலைக் கண்டும் காணாத மாதிரி போலீஸ் நிற்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. நேரில் கண்டவர்கள் டெலிபோனில் சொன்னார்கள்.

அப்பாவின் சிரம் இரண்டு நாட்களாக நிமிரவேயில்லை என்று ரஞ்சனி கவனித்தாள்.

"பத்திரிகைக்காரர்களுக்கு வேறே வேலையில்லை. எல்லாத்தையும் பெரிசு பண்ணித்தான் எழுதுவான்கள்" என்று மற்ற நாட்களில் சொல்பவர் வாயைமூடிக்கொண்டிருக்கிறார் இப்பொழுது.

ரஞ்சனி யோசனையுடன் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள். தெருவில் ச

வாஸந்தி

காக்கை இல்லை. எல்லோரும் வீட்டுக்குள் பதுங்கியிருந்தார்கள். டீ.வி.யின் முன் உட்கார்ந்திருந்தார்கள். அவள் சோர்வுடன் டெலிபோனுக்குச் சென்று மன்மோஹன் ஸிங்கின் நம்பரை இன்று பத்தாவது முறையாகச் சுழற்றினாள்.

மறுமுனையில் மணி அடித்த வண்ணம் இருந்தது. அடி வயிற்றில் ஒரு கலவரம் ஏற்பட்டது.

எங்கே போய்விட்டிருப்பார்கள் எல்லோரும்?

சில குடும்பங்கள் பூண்டோடு அழிக்கப் பட்டதாகச் செய்திகள் காதில் விழுந்திருந்தன. மூன்று பேர்கள் கொண்ட குடும்பத்தை அழிக்க எத்தனை நேரமாகும்?

'ரஞ்சனி!'

அவள் சட்டென்று தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். வீணாகப் பயந்து ஆகப் போவது ஏதுமில்லை. அவன் இருக்கும் இடத்தில் அதிகக் கலவரம் என்று தகவல் தெரிந்திருந்தது. நேரில் சென்று பார்க்கலாம் என்றால் வீட்டில் நிச்சயம் விடமாட்டார்கள். அதோடு தெருவில் ஒரு பஸ்ஸோ, ஆட்டோ ரிக்ஷாவோ கிடையாது. சொந்த வாகனங்களைக்கூட யாரும் வெளியில் எடுக்கவில்லை.

எத்தனை நாட்களுக்கு இந்தப் பைத்தியக்காரத்தன நிலைமை நீடித்திருக்கும்? எப்பொழுது மன்மோஹனுடன் தொடர்பு கொள்ள இயலும்?

இயலுமா?

அவளுக்கு நாபியிலிருந்து ஒரு துக்கம் சுருண்டு நெஞ்சை அடைத்தது. இதுவரை உணர்ந்தறியாத ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பு நாடி நரம்பையெல்லாம் ஆக்ரமித்தது.

'உனக்கும் மன்மோஹனுக்கும் இடையே இருக்கும் உறவு, ஹௌ ஸீரியஸ் இஸ் இட்?'

'கொய்ட் ஸீரியஸ்' என்று ரஞ்சனி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

இல்லாவிட்டால் உடம்பும் மனசும் இப்படிப் பதறாது. ஏதோ ஒரு துர்ச் செய்தியை எதிர்பார்த்துநின்றாற்போல்நெஞ்சுபடபடத்துக் கொண்டு விழிகள் அகன்று செவி தீட்சண்யமாய் நிற்காது. எதிர்பாராத தருணத்தில் பலவீனப்பட்டுக் கண்கள் நீரை விரிக்காது.

மன்மோஹனுக்கு ஏதாவது ஆகிவிட்டிருந்தால் அதைத் தாங்கிக் கொள்ள எனக்குத் தென்பிருக்குமா? கண்களை மறுபடியும் நீர் நிறைத்தது. சொல்லத் தெரியாத ஓர் ஆக்ரோஷம் நாசியின் நுனிக்கு வந்துவிட்டது. இப்படிப்பட்ட வெறியாட்டம் நடப்பதும் அதைத் தடுக்க முடியாமல் பலவீனப் பார்வையாளராய் அரசு நிற்பதும் எத்தனை பெரிய அவமானம்! அநியாயம்! ராணுவத்தை முழுமையாகச் செயல்பட ஏன் இன்னும் விடவில்லை! யாரிடம் சென்று முறையிடுவது? முறையீட்டைக் கேட்க யார் இருக்கிறார்கள்? சொந்தத் துக்கத்தில் அதிர்ந்திருக்கும் புதிய பிரதமரிடம் விவரங்களைச் சொல்ல யாருக்குத் துணிவிருக்கும்? ஒவ்வொன்றுக்கும் பிரதமரின் ஆக்ஞையை எதிர்பார்த்தே பழக்கப் பட்டுப் போன மந்திரிகளும் உயர் அதிகாரிகளும் தீன்மூர்த்தி பவனிலும், சவ ஊர்வலத்துக்கு வரும் வெளிநாட்டுப் பிரமுகர்களை வரவேற்க விமான நிலையத்திலும் நிற்கிறார்கள் என்று அவள் ஆயாசத்துடன் நினைத்துக் கொண்டாள்.



இந்த மாதிரி தருணத்தில் யாருக்கும் பொறுப்பை ஏற்கத் துணிவில்லாமல் போனது எத்தனை கேவலம் என்று ஆத்திரம் மறுபடி ஏற்பட்டது.

''ரஞ்சனி!''

அவள் விருக்கென்று எழுந்தாள்.

கூடத்தில்டீ.வி.பார்த்துக் கொண்டிருந்த அம்மா.அவளைக் கண்டு நிமிர்ந்ததும் முகத்தில் யோசனை நிழலாடிற்று.

''ருமா வீட்டுக்குப் போகல்லே?'' என்றார் அப்பா.

''இதோ போறேன்!'' என்றாள் அவள் நேரடியாக அவர்களைப் பார்க்காமல். அப்பா தயாராய் வைத்திருந்த கறிகாய்ப் பையை எடுத்துக் கொண்டு அவள் கிளம்புகையில் ''துணைக்கு நான் வரட்டுமாடி?'' என்றாள் அம்மா.

''வேண்டாம்!''

அவள் கதவை சாத்திக் கொண்டு வெளியில் கால் வைக்கும்போது ''அந்த ஸர்தார் பையனைப் பத்தி அவளுக்குக் கவலே'' என்று அம்மா சொல்வது மெலிதாகக் கேட்டது.

மன்மோஹனுக்கு ஏதாவது ஆகியிருந்தால் அம்மா அதை எப்படி எடுத்துக் கொள்வாள்?



'ஒழிந்தான்' என்று சமாதானப்பட்டுக் கொள்வாளா?

ரஞ்சனி திடுக்கிட்டுச் சுய நினைவுக்கு வந்தாள். என்னைச் சேர்ந்தவர்களைப் பற்றி இத்தனை இழிவாக நினைக்கும் அளவுக்கு ஏன் என் புத்தி பேதலித்துப் போய்விட்டது!

'அந்தச் சர்தார்ஜிப் பையனோட சிநேகத்தை நீ குறைச்சுக்கணும். எந்த சீக்கியனையும் இப்ப நம்பக் கூடாது!'

எல்லாச் சீக்கியர்களையும் இப்படிப் பாமரத்தனமாய் எடை போடும் பழக்கம் படித்தவர்களிடையேவந்துபலமாதங்களாகி விட்டன. அந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்துவது போல் இந்தப் பகல் நேரத்துக் கொலை — வேலியே பயிரை மேய்ந்த கதையாய்!

எப்படிப்பட்ட வெறித்தனம் இது! எதைச் சாதிக்க? அல்லது எதை நிரூபிக்க?

உங்கள் இனத்தையே எத்தனை பலவீனப் படுத்திவிட்டீர்கள் பாருங்கள்! நீங்கள் துவேஷத்தைக் கக்கினால் உங்களை விட அதிக துவேஷத்தைக் கக்க இங்கு மனிதர்களா இல்லை? வயலன்ஸ் ப்ரீட்ஸ் வயலன்ஸ்.

ஒரு நண்பனைப் பற்றின விவரம் தெரியாத ஒரு காரணத்துக்கே நான் துடித்துப் போகிறேன். சோகத்தையும் மரணத்தையும் நேரடியாகக் கண்டவர்கள் எப்படித் துடிப்பார்கள்!

அவள் பலவந்தமாகத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு ருமாவின் வீட்டிற்கு விரைந்தாள். நேற்றும் முந்தா நாளும் ருமாவின் வீட்டிற்குச் சென்றபோது குடும்பம் மொத்தமும் அதிர்ந்திருப்பது தெரிந்தது. ருமாவின் அப்பா வெகு ஜாக்கிரதையாய் வாயே திறக்காமல் இருந்தார். எந்த அபிப்ராயத்தையும் சொல்லவில்லை. ருமாவின் தாத்தாவைக்கூடவாயைத்திறக்கவிடவில்லை. பயம்என்கிறசுவர்நடுவேஎழும்பியிருந்ததை உணர முடிந்தது. வருத்தமேற்பட்டது.

ருமாவின் வீடு வெளியிலிருந்து பார்க்க ''கும்''மென்றிருந்தது. அவள் தோட்டத்தைக்கடந்துமெல்லக்கதவைத்தட்டினாள்.

கண்ணாடிக் கதவை மறைத்த திரைச்சீலை மிகக் கொஞ்சமாக விலகிற்று. ''நான்தான்'' என்றாள் ரஞ்சனி சின்னப் புன்னகையுடன். மறுபக்கம் தெரிந்த ருமாவின் தம்பி பப்லுவைப் பார்த்து.

அவன் உள் பக்கம் ஒருமுறை பார்த்து விட்டு, ''ரஞ்சனி தீதி!'' என்று அறிவித்து ஓசைப்படுத்தாமல் கதவைத் திறந்தான். அவனுடைய இளசான முகத்தில் பீதியும் துயரமும் பொருந்தாத பாரமாய்த் தெரிந்தன. வழக்கமாக உடனே வெளியில் வரும் ருமாவைக் காணோம்.

''எல்லோரும் எங்கே?'' என்றாள் அவள்.

''உள்ளே'' என்று அவன் காட்டிய சைகையில் கலவரம் தெரிந்தது.

ரஞ்சனி கவாதனத்துடன் உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டதும் ருமா முகத்தை மூடிக் கொண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவள்போல் அழ ஆரம்பித்தாள். அவளுடைய பெற்றோர்களும், தாத்தாவும் துயரத்துடன் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தார்கள்.

''என்ன ருமா?'' என்று ரஞ்சனி பதற்றத்துடன் அவள் அருகில் அமர்ந்து அணைத்துக் கொண்டாள்.

''அர்ஜுனனைக் கொன்று விட்டார்கள்'' என்றார் ருமாவின் அப்பா சுருக்கமாக.

ரஞ்சனியின் விழிகள் பிதுங்கின.

''அது பொய்!'' என்றாள் அதிர்ந்து.

''இல்லை. நிஜம். அவனுடைய தொழிற்சாலையைக் கொளுத்திவிட்டார்கள். அவன் தப்பிக்க முயன்றபோது காரில் அவனை உட்கார்த்தி கெரஸினைக் கொட்டி......!''

''போதும், போதும்! சொல்லாதீர்கள்!''

காதைப் பொத்திக் கொண்டு அலறியது பப்லு. ஆப்பிள் கன்னங்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. ரஞ்சனியின் தேகம் நடுங்கிற்று. அவள் —

நாளையப்பிரஜை.விசுவாசமுள்ளபிரஜையாக இருக்க இந்த நினைவு இடங் கொடுக்குமா?

குலுங்கக் குலுங்க அழும் ருமாவை எப்படிச் சமாதானப் படுத்துவது என்று அவள் திகைத்தாள்.

இவளுடையதுக்கம்சத்தியமானது. அதன் ஆழத்தை ஏதோ ஒரு விநோதமான உள் நோக்கினால் ஆத்மார்த்தமாகப் புரிந்து கொள்ள முடிந்தது. மன்மோஹனைப் பற்றிய கவலை மீண்டும் எட்டிப் பார்த்தது. அவனைப் பற்றிய எந்தவிதமான செய்திக்கும் இப்போது மனசு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு நின்றது.

ருமா நிமிர்ந்தாள். சிவந்த கண்களில் கோபம் பளபளத்தது.

''ரஞ்சனி! நான் என்ன தப்பு செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் தண்டனை?''

ரஞ்சனி வாயே திறக்காமல் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

''எவனோ ஒரு முட்டாள் செஞ்ச தப்புக்கு நான் ஏன் கஷ்டப்படணும்?''

இதற்கெல்லாம் என்ன பதில் என்று ரஞ்சனி திகைத்தாள்.

''நீயேன் வாயை திறக்கறே!'' என்றாள் ருமா நிஷ்டூரத்துடன்.

''ஹிந்துக்களைச் சுவபத்தில் விட்டுக் கொடுப்பியா?''

அரண்டு போய் ரஞ்சனி நிமிர்ந்தாள்.

ருமாவின் அப்பா விருக்கென்று எழுந்தார். ருமாவின் கன்னத்தில் சுளீரென்று அறைந்தார்.

''வாயைமூடிக்கொண்டு இருக்கமாட்டே? இப்படி உளறிக் கொட்டி நம் எல்லோருக்கும் ஆபத்தைக் கொண்டு வரப் போறியா?'' என்றார் ஆக்ரோஷத்துடன்.

ரஞ்சனி இப்பொழுது அதிகமாக அதிர்ந்தாள்.

(தொடரும்)

மிஸ்டர் பெங்களூர்த் தமிழர்

"ஹலோ இன்னாபே(ய்) சாப்ட்டியா? இன்னா குழம்பு?"

"சாப்ட்டம்பே(ய்) அவரைக்காய்க் குழம்பு. உங்க வீட்ல?"

"பருப்புடால். என்ன ரெண்டு மூணு நாளாக் காணோம்?"

"கேஜிஎஃப் போயிருந்தம்பே(ய்)."

"இன்னா விஷயம்?"

"தங்காச்சியப் பொண்ணு பார்க்க வந்திருந்தாங்க."

"ஆமாவா? எப்ப கல்யாணம்?"

"பதினைந்தாம் தேதி."

"நல்லவேளை. மாசக்கடைசில வைக்காம நடுசெண்டர்ல வச்சிருக்கியே அதுவரைக்கும் நல்லது. பையன் எப்படி?"

"மைன்ஸ்ல வேலை பார்க்கிறான். நல்ல குடும்பம். ஆனால் வீடுதான் சரியாயில்லை. ஒரு அடகடாவுல இருக்கு. சீக்கிரம் மாத்திர்றேன்னு சொல்லியிருக்கான்."

"சரி வர்றியா? ஒரு பேபி போட்டுட்டு வருவோம்."

"போலாம்பே(ய்)."

கரெக்ட். நீங்கள் பெங்களூரில் இருக்கிறீர்கள். இரண்டு தங்கவயல் தமிழர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சென்னை 'இன்னா வாத்யாரே' என்ற செல்ல வார்த்தை இங்கே பே(ய்). (கடைசியில் காலே அரைக்கால் 'ய்' யுடன் bay என்று உச்சரிப்பு.) 'அவரைக்காய்' என்பது நீங்கள் நினைக்கிற அவரைக்காய் இல்லை. மொச்சைக்காய் தான் இங்கே அவரைக்காய். பருப்புடன் ஆங்கிலம் கலந்து 'பருப்புடால்'. தமிழ்நாட்டுத் தங்கச்சி இங்கே 'தங்காச்சி'. 'அப்படியா?' என்ற கேள்வி இங்கே 'ஆமாவா?' 'மத்தியில் என்பது இங்கே 'நடுசெண்டரில்.' ஒரு போர்ஷனுக்குள் நிறைய வீடுகள் இருந்தால் அதற்குப் பெயர் 'அடகடா'. கிச்சன். இங்கே குசினி. பேபி போடுவோம் என்பது சின்னதாகக் கொஞ்சம் சாராயம்!

வேட்டி சுற்றிக் கொண்டு மின்விசிறியைச் சுழலவிட்டு வெற்றுடம்புடன் கட்டாந்தரையில் ஹாய்யாகக் கொஞ்சம் நேரம் படுத்துக் கிடக்கலாம் என்ற பிஸினஸ் இங்கே செல்லுபடியாகாது. சீதோஷ்ணத்தில் இடமில்லை. அதனால் பேண்ட் சட்டைதான். வேட்டி பெரும்பாலும் ஹோசூருடனும் கிருஷ்ணகிரியுடனும் சுழன்று கொள்கிறது. வேஷ்டி சட்டை போட்டுக் கொண்டு கையில் 'எல். ஜி பெருங்காயம்' அச்சடித்த மஞ்சள் சீட்டிப் பையுடன் சேலத்திலிருந்து கிளம்பி வந்து பெங்களூரில் வேலைக்குச் சேரும் தமிழரசன் ஒரு வாரத்தில் தோற்றம் மாறிப் போய்விடுவான். பேண்ட் சட்டை. அமிதாப் கிராப. உதட்டில் சிகரெட். பெயர்: எஸ். டி. அரசன். தமிழ்நாட்டில் அரசியல் தலைவரால் பொதுக் கூட்டத்தில் கைத்தட்டலுடன் பெயர் சூட்டப்பட்ட தமிழ்மணிகள் இங்கே பெரும்பாலும் டி. மணி. தமிழரசன் டி. அரசன். தமிழ்ச்செல்வி வெறும் செல்வி. தலைவர்கள் தமிழ்ப்பற்றைக் கொஞ்சம் தள்ளி வைத்துப் பெயர் வைத்தால் நல்லது.

எதிரில் வரும் ஒருவரை 'எங்கே சார் புறப்பட்டுட்டீங்க?' என்கிறீர்கள்.

"அடையாறு வரை போகணும் சார். சித்தப்பா வீட்டுக்கு."

மிஸ்டர் பெங்களூர்த் தமிழரை 'எங்கே சார் புறப்பட்டுட்டீங்க?' என்று கேட்டுப் பாருங்கள்.

'எங்கியோ போகணும் சார். யாரையோ பார்க்க வேண்டியிருக்கு" என்று இலக்கில்லாமல் பதில் வரும்.

சில விநோத மனப்பான்மைகள் மிஸ்டர் பெங். தமிழருக்கு உண்டு. தமிழ்நாட்டுத் தமிழர்களைவிட நாகரிகத்தில் ரொம்பவும் உயர்ந்தவர்கள். மிகவும் முன்னேறியவர்கள் என்ற கர்வம் அடிநாதமாய் எல்லோரிடமும் உண்டு. ரசனையில் அங்கிருப்பவர்களை மிஞ்சியவர்கள் என்ற மமதையும் உண்டு. சாவு வீட்டிற்குப் போய் வரும்போது குளித்துவிட்டுத்தான் வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்ற சம்பிரதாயமெல்லாம் கிடையாது. அப்படியே நுழைய வேண்டியதுதான்.

இங்குள்ள தமிழர்களுக்குக் கன்னடக்காரர்கள் வைத்திருக்கும் பெயர் 'கொங்கரு'. இதை ஒரு கெட்ட வார்த்தையாகவே இரு சாராரும் கருதினாலும் 'தமிழ்க்கங்கர்கள்' அந்தக் காலத்தில் மைசூருக்கடுத்த தலைக்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்ததன் காரணமாய்த்தான் 'கொங்கரு' என்ற கேலிப் பெயர்.

ஒரு இருபது வருடங்கள் முன்பு பெங்களூர் முழுக்கத் தமிழர்கள்தாம். எல்லாத் தொழிற்சாலைகளிலும் தமிழர்கள். இன்றைய நிலைமை வேறு. நிறைய வாட்டாள் நாகராஜ்களும், நாராயணகுமார்களும், ராஜ்குமார்களும் எதிராய்க் கிளம்பிவிட்டார்கள். எங்கும் எதிலும் 'தமிழனுக்கு இடமில்லை' என்ற நிலைமை வந்துவிட்டது. புதிய அப்பாயின்ட்மெண்டுகள் கிடையாது. பள்ளிகளில் கல்லூரிகளில் தமிழ் கிடையாது. அரசாங்க மனைகள் வீடுகள் அலாட்மெண்ட் கிடையாது. முப்பது லட்சம் தமிழர்கள் இருந்தும் அமைச்சரவையில் ஒரு தமிழ் அமைச்சர் கிடையாது. (முஸ்லிம் –தெலுங்கு. மராத்திய மொழிக்காரர்



களெல்லாம் அமைச்சராயிருக்கிறார்கள்.) ஆக... மெல்லத் தமிழ் இனிச் சாகும்...?

பெங்களூர்க் கரகம் புகழ் பெற்றது. பல் வேறு ஊர்களிலிருந்தும் மக்கள் சமுத்திரம் சேரும். இங்குள்ள தமிழர்கள் அனைவரும் கரகம் பார்க்கக் காட்பாடியிலிருந்து வந்து விட்டு அப்படியே இங்கேயே தங்கிவிட்ட வர்கள் என்பது கன்னடக்காரர்களின் அபிப் பிராயம். அதற்காகத் தமிழன் மீது இளக் காரம். தமிழ்நாட்டின் எந்தக் கோடியிலி ருந்து வந்த தமிழனென்றாலும் இந்த ஊர் மக்களின் பார்வையில் 'காட்பாடியிந்தா பந்த வனு'தான். (காட்பாடியிலிருந்து வந்தவன்.) இவர்கள் பார்வையில் காட்பாடிதான் முழுத் தமிழ்நாடு.

சரி... தமிழன் இங்கே எப்படிக் குடியேறி னான்? கொஞ்சம் சரித்திரம் பார்க்கலாமா?

பதினேழாம் நூற்றாண்டில் பெங்களூர் வெங்காஜி என்னும் தஞ்சை மராட்டியமன்ன னுக்குச் சொந்தமாக இருந்தது. மைசூர் உடையார் அரசகுலத்தினராகிய சிக்கதேவ ராயர் அப்பெங்களூரைப் போர் செய்து பிடிக்காமல் தஞ்சை மன்னனுக்குச் சொந்த மாக இருந்த பெங்களூரை 1687–ம் ஆண்டில் 3 லட்சம் ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கினார். அவ்வாறுதான் பெங்க ளூர் மைசூரின் ஆட்சிக்குள் வந்தது.

ஆக. பெங்களூரில் தமிழர்கள் வந்து குடி யேறவில்லையென்றும். கன்னடர்கள்தாம் பெங்களூரில் வந்து குடியேறியவர்கள் என் றும் கோபத்துடன் சொல்கிறது கருநாடகத் தமிழர் முன்னணியின் பிரசுரம்: 1876–78–ம் ஆண்டுகளின் போது பழைய மைசூ ரில் மிகப் பெரிய பஞ்சம் தோன்றியது. அந்தப் பஞ்சத்தில் 10,11,115 பேர்கள் செத்து மடிந்ததாகப் பஞ்ச உதவி ஆணையம் (famine Commission) கணக்கிட்டது. அப்போது பட்டினியின் காரணமாக மைசூரி லிருந்த மக்கட் தொகையில் 13 விழுக்காட்டு மக்கள் பிழைப்புத் தேடி மலைநாடு பகுதிக் கும் பெங்களூர். கோலார். ஆசன். துமக்கூர். அத்திக்குப்பம். நாகமங்கலம். சித் திரதுர்க்கா. மண்டியா போன்ற இடங்களுக் கும் பெயர்ந்து போய் அங்கெல்லாம் குடியே றினர். இந்தக் கொடிய பஞ்சம் மூன்று ஆண்டு களுக்கு நீடித்தது. பெங்களூர் கோலார் பகுதி களில் அப்போதுதான் கன்னடர்கள் கூடுத லாக வந்து குடிபுகுந்தனர்.

இந்தச் சர்ச்சைகளை வரலாற்று ஆசிரியர் களிடம் விட்டுவிட்டுப் பார்த்தாலும் தற் காலப் பெருமைகள் நிறைய இருக்கிறது 'விதான சௌதாவைக் கட்டியவன் தமிழன் ('விதான சௌதாவின் ஒவ்வொரு கல்லும் தமிழன் பெருமையைப் பேசும்' — என்றார் ஹனுமந்தையா). டெலிபோன் தொழிற் சாலையை ஆரம்பித்தவன் தமிழன். பாதாளம் சென்று சுரங்கம் தோண்டி தங்கம் எடுப்பவன் தமிழன்' என்றெல்லாம் 'ரிகார்டு கள்' இருந்தாலும், கன்னடச் சகோதரர்கள் இதையெல்லாம் மதிக்கத் தயாரில்லை. தமிழர் கொஞ்சம் பின் தள்ளப்பட்டுப் பயத்துடன் தான் வாழ வேண்டியிருக்கிறது. தற்சமய ஹெக்டே ஆட்சியில் கொஞ்சம் பரவா யில்லையென்றாலும் சர்ச்சுகளில் தமிழ் வழி பாடு கூடாது; பொது இடங்களில் 'தமிழ் பேசக் கூடாது' போன்ற கத்திகள் மிஸ்டர் தமிழனின் தலைக்குமேல் தொங்கிக் கொண்டேதான் இருக்கின்றன.

பஸ்ஸிலோ வேறு பொது இடத்திலோ இரண்டு தமிழர்களுக்குச் சண்டை வந்து விட்டால் 'யாக்கோ நன்மகனே' — என்று யாராவது ஒருவர் கன்னடத்தில் கிளப்பிவிடு வார். கன்னடத்தைப் பார்த்ததும் இன்னொரு தமிழ் நண்பர் நிச்சயம் பயந்து அடங்குவார் என்பது பெங். தமிழரின் சைக்காலஜி.

ஒன்று சொல்ல வேண்டும். தமிழர் நலன் பேணும்படியான வலிமை கொண்ட அமைப்போ இயக்கமோ தலைவரோ இங் கில்லை. அதுபற்றிய உணர்வும் பெரும்பான் மையாய் இல்லை. அவ்வப்போது கலவரங் கள் கிளம்ப ஏதாவது ஓர் இடத்தில் கூட்டம் போட்டுத் தமிழர் ஒற்றுமை பற்றிப் பேசு வார்கள். அடுத்த நாள் 'தினச்சுடரில்' செய்தி படித்துவிட்டு ஆனந்தபாபுவின் டிஸ்கோ டான்ஸ் பார்க்கத் தியேட்டருக்குக் கிளம்பி விடுவார்கள்.

— அமுதவன்



தீராத விளையாட்டு ஸாயி

ரா. கணபதி

3. காவியத்திலும் ஓவியத்திலும்!

தந்தக் களிறுபோல் தானே விளை
யாடும்
நந்தன் மதலை.
—பெரியாழ்வார்.

புகைப்படம், வரைப்படம் ஆகியன குறித்து ஸ்வாமியின் அற்புதங்கள் பல உண்டு. அவற்றில் ஸாம்பிள் காட்டுமுன், புத்தகத்தில் இல்லாத வாசகத்தைப் படிக்கச் செய்தார் என்றாரே, அதைப் பார்த்துவிடலாம்!

******

* சென்ற ஆண்டு காலமான கல்கத்தா தொழிலதிபரும், ஸ்வாமியின் பரம பக்தருமான டி. டி. சோப்ராவின் உறவினர் அந்த இளைஞர். அற்புதம் மூலமே ஸ்வாமி எப்படி நவநாகரீகத்தின் சில அலங்கோலங்களிலிருந்து தனி மனிதர்களையும் குடும்பங்களையும் மீட்டு நல்வழியில் செலுத்துகிறார் என்பதற்குத் தமது இல்லத்தையே எடுத்துக்காட்டாகச் சொல்லிக் கையெடுத்துக் கும்பிடுவார் சோப்ரா. அதிலேயும் வேடிக்கை உண்டு. பிற்பாடு பார்ப்போம்.

அப்போது இந்த இளைஞருக்கு நல்வழியில் நாட்டமில்லை. உல்லாஸப் போக்குக் கொண்ட நண்பர் குழாத்துடன் 'நைட் ஷோ'வுக்குப் போவதற்காகக் காத்துக் கொண்டிருந்தார். எட்டு மணிக்கு வருவதாகச் சொன்ன 'தோஸ்த்'கள் எட்டரை, எட்டே முக்கால், ஒன்பது என்று மணி ஓடிக் கொண்டிருந்த போதிலும் ஏனோ வரவில்லை. "ஏனோ" தானா? அல்லது 'இளைஞரைத் தம் அன்புவலையில் சுருக்கிக் கொள்ள ப்ரேமாவதாரிக்கு வேளை வந்து, அவர் ஸூத்திரத்தை ஆட்டியதில்தான் 'தோஸ்த்'கள் வராமலிருந்தார்களா?

இளைஞர் தவிப்பாய்த் தவித்துக் கொண்டிருக்க, கருணையற்ற கடிகாரமோ ஒன்பதரையையும் அளந்து போட்டுவிட்டுப் பத்தை நெருங்கி விட்டது. 'இண்டர்வெல் கூட வந்துவிடுமே, இனிமேலே எங்கே போவது? தூங்கலாமென்றால், இந்த ஏக்கத் துடிப்பில் தூக்கமா வரும்? ஸரி, மனத்தைத் திருப்ப ஏதாவது புத்தகத்தில் கண்ணை ஓட்டுவோம்' என்று இளைஞர் நினைத்தார்.

அந்த அயனான ஸந்தர்ப்பத்தில் அவர் கண்ணில் பட்டது ஐயனின் வாழ்க்கை வரலாறாகிய "ஸத்யம் சிவம் ஸுந்தர"த்தின் ஒரு வால்யூமாகும்.

'என்னதானிருக்கிறது இதில்? பார்ப்போமே!' என்றெண்ணி அதை எடுத்தார்; பிரித்தார் ஏதோ பக்கத்தை; படித்தார்.

'படிக்கிறோமா? கேட்கிறோமா?' எதிரே இருப்பது புஸ்தகத்திலுள்ள எழுத்துக்களா? அல்லது பாபாவின் வாயிலிருந்தே வரும் சொற்களா?

கேளிக்கைப் ப்ரியர்களுக்காகக் காத்திருந்து ஏங்கித் துடித்தவரைக் காத்தருளவே ஸ்வாமி நேரில் வந்து உபதேசிப்பது போலத்தானிருந்தது வாசகம். இளைஞரது அப்போதைய நிலையை அப்படியே சித்திரித்து, அந்த நிலையிலிருந்து அவரைக் கத்தரிக்க எந்த அறிவுரை தேவையோ அதுவே அப்பக்கத்தில் ஆணித்தரமாக அளிக்கப்பட்டிருந்தது.

வேளை வந்து விட்டதே! பாறை மனம் பசுமரமாக, அதில் ஆணியாகப் பதிந்தது அறிவுரை.

அதோடு கேளிக்கை நண்பர்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, ஸத்ய ஸாயி கங்



கையில் தீர்த்தமாடத் தொடங்கினார் இளைஞர்! (அந்தக் குடும்பமே 'தீர்த்தத்தில்' திளைத்திருந்ததை ஐயனார் எப்படித் தீர்த்து வைத்தார் என்ற லீலையைப் பிறகு பார்ப்போம்.)

தமது வாழ்வையே உய்நெறிக்குத் திருப்பிய வாசகத்தைக் கொடுத்திருந்த நூலாசிரியர் கஸ்தூரியவர்களுக்கு நன்றிப் பெருக்குடன் தகவல் தெரிவித்தார் இளைஞர்.

ஆசிரியர் ஆச்சரியித்தார்! இளைஞர் குறிப்பிட்ட அறிவுரை அந்தப் பகுதியின் அந்தப் பக்கத்திலோ, அல்லது நூல் முழுதிலுமே எந்த ஓரிடத்திலுமோ கிடையாதே! ஆச்சர்யப்படாமல் எப்படி இருக்க முடியும்?

''கேட்டிலையோ, கேள்வன் மோனச்சே
வடிவைப்பு?
வருகிறானவன், வருகிறானவன், வந்திடு
கின்றான் ஸந்ததமும்.''

என்றார் டாகூர். ''ஸ்வாமி எப்படியெப்படியோ உட்புகுந்து மக்களை பக்தராக்கிவிடுவார். ஒரு புகைப்படம், புத்தகம், விபூதிப் பொட்டலம், யாரோ ஒரு நண்பர் — என்றிப்படி ஒன்றின் மூலம் உள்ளே நுழைந்துவிடுவார்'' என்பார் வி. ஸ்ரீநிவாஸ். புத்தகத்தில் இல்லாத வாசகத்தின் மூலமும் கூடப் புகும் சதுர் அவருக்கு உண்டுதான்!

ஸமீபத்தில் நடந்த ஒரு 'சொந்த' நிகழ்ச்சியைச் சொல்லத் தோன்றுகிறது: புத்தகம் ஒன்றின் வாசகத்திலிருந்து ஸ்வாமியின் பதிலைப் பெற்றேன். உடனே ஐயமெழுந்தது. ''முன்னமே இந்நூலை நாம் ஆழ்ந்து படித்திருந்தும் இதில் இப்படியொரு விஷயம் இருப்பதாக அடியோடு நினைவில்லையே! நூலிலோ, சரியாக நமக்கு விடையுள்ள வரிகளில் நாமே பேனாவினால் மார்ஜினில் ஸைட்—லைன் செய்ததாகக் காண்கிறது! இதுவும் சோப்ராவின் உறவினருக்குச் செய்த விளையாட்டின் நகல்தானோ?' என்று எண்ணினேன். பிற்பாடு வாஸ்தவமாகவே புத்தகத்தில் அச்சான விஷயம்தான் அது என்று தெரிந்தது. என்ன விஷயம் என்று சொல்லிவிடுகிறேன்.

இடுப்புப் பிடிப்பு ஏற்பட்டு ஒரு வாரத்துக்குமேல் ச்ரமப்பட்டேன். இடுப்புப் பிடிப்பை விட ச்ரமப்படுத்தியது என்னவென்றால், 'இம்'மெனும் முன்னே இதம் தர ஓடி வரும் இந்த 'சாமி' ஏன் சும்மாப் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ற...என்ற... ஆமாம், கோபம்தான்!

'புத்தகத்தின் மூலம் பதில் சொல்லும் சாமியின் சதுர் அவரது பக்தர்கள் பலருக்குக் கண் கண்ட உண்மையாதலால், கைபோகிற போக்கில், அவரைக் குறித்த நூல் ஏதாவதொன்றை எடுத்து, அதில் ஏதாவதொரு பக்கத்தில் பிரித்துப் பார்ப்போம்; ஸமாதானம் சொல்லுவாரா, பார்ப்போம்' என்று நினைத்தேன். கையில் அகப்பட்ட புத்தகம் வி. பாலுவின் "The Glory of Puttaparthi" பிரிபட்ட பக்கம் 254. அதில் கடைசி வரியில் கண்பதிந்தது. தொடர்ந்து படித்துக்கொண்டு போனேன் — அல்லது ஸ்வாமி (இனியும் 'சாமி' என்பார்களா?) பேசக் கேட்டேன். இப்படி இருந்தது:

''அந்த நபரைக் கவலைப்பட வேண்டாமென்றார் ஸ்வாமி. ஸ்வாமியின் காலில் யாரோ ஒரு கனமான வஸ்துவைத் தவற விட்டுவிட்டார்களென்றும், இதனால் அவரது விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாகவும், பிறகு தெரிந்து கொண்டேன். அங்கிருந்தவர்களில் ஒரு டாக்டர், 'ஸ்வாமி, உடனே ஈர ஒத்தடம் கொடுக்க வேண்டும்' என்றார் (எனக்கும் ஒத்தட சிகிச்சைதான் கூறப்பட்டிருந்தது!)

''இன்னொருவர் கவலை தோய்ந்த முகத்துடன், 'ஸ்வாமீ...! தாங்களே தங்களை குணப்படுத்திக் கொள்ளுங்கள்' என்றார்.''

''ஸ்ரீ பாபாவின் பதில் அவருக்கே உரித்தானதாக இருந்தது. (எனக்கே சொன்னதாகவும் இருந்தது!) 'இதுபோன்ற ஒன்று என் பக்தர்களுக்கு ஸம்பவிக்கும் போது நான் என்ன, எப்போதுமே உடனடியாக அவர்களை குணப்படுத்திவிடுகிறேனா என்ன? இல்லை! மனுஷ்ய சரீரமென்றால் இப்படி ஏதாவது ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கும். நாளாவட்டத்தில் எல்லாம் ஸரியாய்ப் போகும்' என்றார்.''

இதில் வாசகர் கவனிக்க வேண்டியவை பல. தம்மையும் பக்தர்களின் நிலையிலேயே தான் ஸ்வாமி வைத்துக் கொள்ளும் எளிமை ஒன்று. சரீர தர்மமென்று சில விஷயங்களைப் பொருட்படுத்தாமல் பொறுத்துக் கொள்ளத்


" அப்பவே சொன்னேன்
மடையன் கிட்டே
அலகிட்டே வைச்சக்காதே
பழி வாங்கிடுவான்னு
இன்னிக்கு ராகமாலிகா
சேலைக்கு பதிலா வேற
எதோ சேலையை
போட்டுட்டா இனிமே
ரோமியோ எறும்பு
என்ன வேண்டியது
யதுதான் "

தான் வேண்டுமென்பதொன்று. எதற்கெடுத்தாலும் அவர் உடனடித் தீர்வு தந்துதாளுக வேண்டுமென எதிர்பார்த்துக் கோபிக்க எவருக்கும் உரிமை இல்லை என்பது ஒன்று. நமது கர்மத்தையும் அவரது கருணையையும் அவரே அறிந்த ஒரு விதத்தில் அவர் பங்கிட்டு செய்துதான் தீர்வு தருகிறார். அல்லது தராமலிருக்கிறாரென்பது ஒன்று.

நான் முக்யமாகக் கவனித்து ஆறுதல்பெற்றது, 'நாளாவட்டத்தில் ஸரியாய்ப் போகும்' என்ற மங்கள மொழியைத்தான். 'நோய் ஸரியாகலாம்; அல்லது நோயுடன் இருப்பதே ஸரிதான் என்றாகலாம்' எனப் பொருள் கொண்டேன்.

('பாவம்! கொஞ்சம் நறுக்கென்று பதில் கொடுத்துவிட்டோமே' என்று அவருக்கே மனசு கேட்கவில்லை போலும்! சில நாளிலேயே பிடிப்பு விட்டது, விடக் கூடாத பிடிப்பின் விசேஷத்திலே!)

* 26.4.81. ஒயிட்ஃபீல்ட் ப்ருந்தாவனத்தை விட்டு சென்னை கிளம்பிக் கொண்டிருக்கிறேன். நெஞ்சில் துளஸி மணக்கவில்லை. நெருஞ்சிதான் நெருடுகிறது. ஸ்வாமியின் அறிவுரையைச் சென்னையில் ஒருவருக்குத் தெரிவிக்க வேண்டுமே என்ற விசாரம் தான். இது முள்ளாகக் குத்துவானேன் என்றால் அவர் அறிவுரையை ஏற்காமல் என்னிடம்தான் பாய்வார் என்று நிச்சயமாகத் தோன்றியதால்தான். 'ஸ்வாமி! இம்மாதிரிப் பணி எனக்கு வேண்டாமென ரத்து செய்து விடுங்களேன்! உங்களைக் கண்டு ஊர் திரும்பியவுடன் ப்ரியமாக, சாந்தமாக, ஒன்றைச் செய்யாமல்சண்டைக்குப்புறப்பட்டேனானால் அது மெய்யாலுமே திருவுளச் சம்மதந்தானா? என வேண்டினேன். 'இது அசட்டு வேண்டுதல்; ஸ்வாமியோ தர்சனம் முடித்து உள்ளே போயாயிற்று; நானோ இதோ புறப்பட்டாக வேண்டும்; மறுபடி எப்படி அவரைப் பார்த்துப் பணியை ரத்துப் பெற?' என்றும் அறிவுக்குப் புரிந்தது.

வேதனையோடு புக்-ஸ்டாலுக்குள் நுழைந்தேன். "ஸத்யம் சிவம் ஸுந்தரம்" நாலாம் பகுதி வாங்கினேன். "அப்பனே! இதன் வழியாய் பேசித் தெளிவு தா" என வேண்டிப் பிரித்தேன்.

பளீரென நூலின் லக்ஷ்ய வாசகம் தெரிந்தது. கீதாசார்யன் ஸாயிக் கண்ணனாகத் தட்டிக் கொடுத்து எழுப்பினான்:

"மாம அநுஸ்மர, யுத்ய ச."

"என் உள் நினைவோடு போடு சண்டை!"

அபாரத் தெம்பு, தெளிவு பெற்றேன். ஒருவருக்கு நலமே செய்யும் முயற்சியில் அவச்யமேற்பட்டால் அவருடன் சண்டையும் செய்வதுதான் உத்தம ப்ரேமை என்று முன்னரே மன்னவர் கூறியிருப்பது மீண்டும் மனத்தில் உறுதிப்பட்டது.

* சித்ர ஜாலம் சில. கோலாலம்பூர் விநோத விநாயகரின் புதிர் இப்போதே "ஓவர்-ட்யூ" ஆயிற்றே! எனவே கதாநாயகரைப் போலவே கதாசிரியரும் அதைச் சொல்லாமல்கொஞ்சம்விளையாட்டுக்காட்டுவாராம்! வேறு சில விந்தைகள் சொல்வாராம்!

ஸ்வாமியின் பொன் விழா. டர்பனில் தென் ஆப்ரிக்க ஃபெடரேஷனில் பஜனை நடக்கிறது.

படத்திலுள்ள பகவான் இரு கரம் கொட்டித் தாளமிட்டு ரஸிக்கிறார்!

நம் வழிபாட்டை அதற்குரிய மூர்த்தி உவந்தேற்கிறது என்பதில் அந்த அடியார் பெற்ற பேரின்ப நிறைவை நினைத்தால், 'எதற்காக மிரகிள்?' என்று கேட்கத் தோன்றுமா?

* ஸ்வாமியின்பெரியபெரியகட்டுமானத் திட்டங்களை மேற் பார்க்கும் 'பெரிய்ய்ய' மனிதர் ஜோகாராவ் ஒரு நாள் – கண்ணனிடம் தனஞ்ஜயன் போல் – ஸ்வாமியிடம் அவரது திவ்ய ரூபத்தை காட்டுமாறு கோரினார். ஸ்வாமி புன்னகைத்தார். அதில் ஒப்புதல் தெரிந்தது.

7.3.79 நண்பகல். முதுமலைக்காடு. வரதனுடனேயே. அடியார் 'வனம் வனம் திரிந்து அமுத தர்சனம்' பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஸாயிக் கல்லூரி மாணவன் ஒருவன் புகைப்படம் எடுத்தான். கோஷ்டியில் ஒவ்வொருவர் பக்கத்திலும் நின்று படமெடுத்துக் கொண்டார் 'படம்பக்க நாதர்.'

முடிவாய் அவர் மட்டும் ஒரு ஸ்நாப்புக்கு நின்றார். எப்போதும் அவர் பாங்காக அணியும் கஃப்னி (அங்கி) இன்று சற்று கலைந்து காணப்பட்டது. அதை ஸரி செய்ய, அவருக்கு ஒரு தாய் போலுள்ள, ஸ்ரீமதி தென்லால் விரைந்து வந்தார்.

"வராதே முன்னே!" என்று பிளிறியது— முதுமலையின் தந்தக் களிறல்ல; தன்குரல் ஸாயிதான்! குதித்துப் பின் வாங்கினார் அம்மை.

போலராய்ட் காமிரா படத்தைச் கடச் கடக் கக்க, ஸ்வாமி அதை ஜோகாராவிடம் கொடுக்கப் பணித்தார். திவ்ய ரூபம் கோரியவர் திக்குமுக்காடிப் போனார்! புகைப்படத்தில் மும்மூர்த்தியும் ஒன்றிய தத்தாத்ரேயர் தர்சனம் தந்தார்!

உள்ளாற்றல் வெளிப்படுகையில் தம் அன்னையின் சக்தியைத் தாங்க முடியாதென்பதால் பிளிறிய தந்தக் களிறே தங்க நிறலியாகி அற்புதத்தை எளிய விளையாட்டில் முழுக்கலாயிற்று! படத்தைப் பார்த்து, 'எங்கே என் முடி? போச்சு எல்லாம்!' என்று ஜோகாராவிடம் ஜோக் அடித்தது! பம்பை முடியார் படத்திலோ முத்தலைகளிலும் சின்னச் சின்ன சிகை முடிச்சுக்களுடனேயே காட்சி தந்தார்.

"பார்த்தீர்களா, கன்னத்து மறு!" என்று குழந்தை ஸ்வாமி ஆர்த்தது. அநஸூயையின் குழந்தையாக ஒன்று சேர்ந்த தத்தரின் வலது புறத்து ப்ரம்மன் தனது இடது பக்கவாட்டத்தைக் காட்டிக் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு முகத்திலும் கன்னப்பொட்டு பளிச்சிட்டது!

(தொடரும்)



வட்டமேஜை

* 'அய்க்கண்' எழுதிய பரிசுக் கதையும் நடுவர்களில் ஒருவரான கோபுலு அதற்கு வரைந்திருக்கும் ஓவியமும் அருமை!

எம். தியாகராஜன், சென்னை—28.

அரசு அல்ல அராஜகம்!

* திருநின்றவூரில் அரசு அதிகாரிகள் நடத்திய அக்கிரம நிகழ்ச்சி பற்றிய கட்டுரை கல்நெஞ்சக்காரர்களையும் கலங்க வைக்கும் நிகழ்ச்சி. அரசு என்றால் அரைகுறை மட்டுமல்ல; அராஜகம் என்றும் தீர்மானிக்க வைக்கிறது.

சாஸ்திரி வெங்கடேஷ், கருங்குளம்.

* கண்ணு மண்ணு தெரியாமல் இடிக்கும் ஹைவேஸ்காரர்கள் காந்தி சிலையிலும் அடையாளம் இட்டிருப்பதைப் பார்க்கும் போது 'கோட்சே' கூடத் தேவலாம் போல் இருக்கிறதே!

குமரி ஜெய், சென்னை—5.

ஏன் இந்த ஓரவஞ்சனை?

* இதை 37—வது கடிதமாக எழுதுகிறேன். என் எந்தக் கருத்தையும் தாங்கள் பிரசுரிப்பதே இல்லை. தாங்கள் ஒருதலைப்பட்சமாக இருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். உமது வழக்கமான ஆஸ்தான விமர்சகர்களை வைத்துக் கொண்டே வட்டமேஜை பகுதியை நீர் நடத்திக் கொள்ளும்.

மூணாறு பி. எம். ஜெயா, கோவை.

இலவசச் சாராயம்!

* அண்மையில் திருச்சி ஜங்ஷன் அருகில் உள்ள ஒரு சாராயக் கடையில் எழுதப்பட்டிருந்த ஒரு வாசகம் என் மனத்தை மிகவும் வேதனைப்படச் செய்தது. அங்கு, 'சாராயப் பிரியர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. வருகிற ஆடிப் பதினெட்டை முன்னிட்டு 200 மி. லி. சாராயம் மொத்தமாக வாங்குபவர்களுக்கு 50 மி. லி. சாராயம் இலவசமாக வழங்கப்படும்!' என்று எழுதப்பட்டிருந்தது. அதன் கீழ் 'குடி குடியைக் கெடுக்கும்; எனவே அளவோடு குடித்து வளமோடு வாழ்க!' என்றும் எழுதப்பட்டிருந்தது. தமிழக அரசின் அபத்தமான 'மதுவிலக்கு'க் கொள்கையின் விளைவாக ஏற்படும் விபரீதங்களுள் இதுவும் ஒன்று. இதை யார் தடுப்பது?

ச. ரமேஷ்பாபு, லால்குடி.

(* கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது.)

படித்தோம்; பத்திரப்படுத்தினோம்!

* இம்மாதம் எங்கள் கல்விச் சுற்றுலாவாகக் கோவா செல்கிறோம். நீங்கள் வெளியிட்டிருக்கும் கோவா சிறப்பிதழ் எங்கள் வழிகாட்டியாக அமைந்து விட்டது. அதற்காக எங்கள் தலைமைப் பேராசிரியர் கூறியபடி கோவா சிறப்பிதழாக வெளிவந்த சில கல்கி இதழ்களை வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். கல்கிக்கு எங்கள் அனைவர் சார்பிலும் நன்றி.

ச. புகழேந்தி, A.V.V.M.S.P. College, பூண்டி

* கோவா பத்திரிகை ஆசிரியர் 'அந்நியர் ஊடுருவல் அதிகமாகி விட்டது' என்று கூற, 'நீர் மட்டுமென்ன?' என உமது நிருபர் கேட்க... உமது கேலியும் கிண்டலும் தமிழ் நாட்டில் மட்டும்தான் என்றிருந்தோம். கோவாவையும் விட்டு வைக்கவில்லையே!

ஆர். விஜி, அரகண்டநல்லூர்.

* எல்லாரும் சொல்வதுபோல் எங்கள் அனைவரையும் கோவாவுக்கு அழைத்துச் சென்றீர்கள் என்றால் அது சம்பிரதாயமான வார்த்தை. ரூ. 1.50 செலவில் நாங்கள் இருக்குமிடத்துக்குக் கோவாவைக் கொண்டு வந்தீர்கள் என்பதே உண்மை!

எம். ஜேம்ஸ் மைக்கேல், திருச்சி—1.

இரண்டுமே அற்புதம்!

* திருமண நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடவிருந்த ஒரு பெண், வியாதியஸ்தரான அப்பாவையும், விதவைக் கோலத்தில் நிற்கும் இளவயதுத் தங்கையையும் அவள் குழந்தையையும் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் எதிர்கொள்ளும் விதத்தை—மீண்டும் இரவில் கணவனையும் திருப்திப்படுத்துகிற அவளின் பரிணாமத்தை அய்க்கண் அவர்கள் வெகு அற்புதமாய்ச் சித்திரித்திருக்கிறார்.

பாரதி தேவராஜன், கோவை—41.

கோவாவிலும் உமக்குக் கிண்டல் தானா?

கன்னடச் சிறுகதை

வேர்விட்ட ஒரு மனிதன்

"மரங்களைக் கண்டால் எனக்குப் பொறாமை உண்டாகிறது. ஏனென்றால் அவற்றுக்கு வேர்கள் உண்டு. ஊர் ஊராக அலைந்து கொண்டிருக்கும் நான் எந்த ஊரிலும் வேர் விட்டு நிற்கவில்லை."

மகா கவிஞன் சந்திரசேகரன் இப்படி நினைத்துச் சஞ்சலப்பட்டான். அவனது கவிதைகள் நிராசை கொண்டிருந்ததற்கும், அவனது நாவல்கள் மன நோயாளிகளின் சிந்தனைகளைப் பற்றியே கூறி, வாசகர்களை போரடித்ததற்கும், அவனது நாடகங்கள் குழறுபடியான மேல்நாட்டுப் பாணியில் அமைவதற்கும், அவன் கல்யாணம் செய்ததற்கும் அவன் சொன்ன ஒரே காரணம் அவன் வேரில்லாதவனாய் ஸ்திரத்தன்மையற்று இருந்தான் என்பதுதான். இத்தகைய அவனது மனநிலையை, அந்நியமாகிப் போதல், ஏகாந்த நிலை போன்ற சொற்களால் விவரித்தான்.

அமெரிக்காவிலிருந்து பெங்களூருக்கு வந்த பிறகு ஒவ்வொரு நாளும் மாலை அவன் லால்பாக்கிற்கு சென்று கொண்டிருந்தான். லால்பாக் என்றால், தன் நண்பன் பஷீருடன் லால்பாக்கில் போட்டிக் கவிதைகள் பாடிய பழைய நாட்கள் நினைவுக்கு வந்தன. அன்றைய கவிதைப் போட்டிகளில் பஷீரின் கவிதைகளே நன்றாக இருந்தன. லால்பாக் போனால் கிளாஸ்ஹௌஸின் பக்கத்தில் நிற்கும் அத்தி மரத்தினடியில் சூரியன் மறையும் வரை அமர்ந்திருப்பது அவன் வழக்கம். அந்த இடத்தில் அமர்ந்தால் பல மரங்கள் அவன் கண்களில் படும். ஆஸ்திரேலியா, பர்மா, பிரேஸில், வெஸ்ட் – இண்டீஸ் முதலிய அனேக நாடுகளின் மரங்கள் இங்கு சுகமாக வேர்விட்டு வளர்ந்து நிற்பதைக் கண்டான். தனக்கு மட்டும் தான் பிறந்த சொந்த தேசத்தில் அந்நியனைப் போல் வாழ்வது விதி ஆகிவிட்டதே என்று வருத்தப் பட்டான்.

சந்திரசேகரன் அமெரிக்காவிலிருந்து வந்து நான்கைந்து மாதங்கள் ஆகிவிட்டன. ஒருநாள் மாலை வழக்கம்போல் அத்தி மரத்தினடியில் அமர்ந்து அதன் கிளைகளை நோட்



டம் விட்டபடி இருந்தான். அதிக இலைகளில்லாத அம்மரக் கிளைகளைப் பார்த்தபோது ஒரு கவிதை எழுதத் தோன்றியது.

ஏ மரமே
நீ வேர்விட்டிருக்கிறாய்
நான் பரதேசி
அலைந்தபடியிருக்கிறேன்
ஒரு ஊரில்
ஒரு வீட்டில்
ஒரு பெண்ணோடு
நான் வாழவில்லை.
ஊர் ஊராய் அலைந்தேன்
வீடு வீடாய் மாறுகிறேன்.
நானின்று வேரில்லாதவன்
மரமே நீ மகிழ்கிறாய்;
நான் துயரத்தில்.

அப்போது 'சந்துரு' என்ற குரல் கேட்டது சந்திரசேகரனுக்கு பூதமோ, பேய்யோ, மோகினியோ என்ற பயம் உண்டாயிற்று. உஷாராக அமர்ந்தான். சிறு சப்தம்கூட கேட்கு

சுமதீந்திர நாடிக்
தமிழில்: கார்லோஸ்

மாறு உன்னிப்பானான். இன்னுமொருமுறை 'சந்துரு' என்று குரல் கேட்டதாய் உணர்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்தில் லால்பாக்கிற்கு வந்த ஜனங்கள் நடமாடியது தெரிந்தது. குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் யாரையாவது அழைக்க வேண்டுமென்று தோன்றியது. ''யார்?'' என்றான்.

''நான் உன் பின்பக்கம் நிற்கும் மரம்!'' என்று பதில் வந்தது.

அம்மரத்திற்கு கண், மூக்கு, செவி எதுவும் இல்லை. ''பயப்பட வேண்டாம்'' என்றது மரம்.

சந்திரசேகரன் எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொண்டான். மரத்தைப் பார்த்து, ''பேசத் தெரியுமா, மரத்திற்கு?'' என்று கேட்டான்.





''தெரியாமல் என்ன? மரங்கள் ஆயிரமாயிரம் மொழிகளில் பேசுகின்றன. மனிதர்கள் பேசும் மொழிகளே மனிதர்களுக்குப் புரியாதபோது, மரங்களின் மொழிகள் எங்கே மனிதர்களுக்குப் புரியும்?'' என்றது மரம்.

''அப்படியானால் எவ்வாறு உனக்கு மனிதர்களின் மொழி புரிகிறது?'' என்று கேட்டான் சந்திரசேகரன்.

''நான் கன்னடம் கற்றிருக்கிறேன்! விஜய நகர ஆட்சிக்காலத்தில் ஆந்திராவிலிருந்து என் தாத்தாவின் தாத்தா இங்கு வந்து வளர ஆரம்பித்தது. தெலுங்கானா பகுதியில் ஆவல் மற்றும் இந்திரகண்டி என்று இரு ஊர்கள் இருக்கின்றன. உனக்குத் தெரியுமா? அங்கிருந்துதான் எங்கள் வம்சத்தவர்கள் தோன்றியது. எங்கள் வம்சத் தோற்றத்துக்குக் காரணமானவருடைய பெயர் நரசிங்க பட்டர்.'' பேசிய மரம் மௌனமாயிற்று.

''உனக்குத் தெலுங்கு தெரியுமா?'' என்று சந்திரசேகர் கேட்டான்.

''இல்லை. எங்கள் வீட்டில் யாருக்கும் தெரியாது!'' என்றது மரம்.

''நீ எந்த ஜாதி?'' என்றான் சந்திரசேகரன்.

அதற்கு அந்த மரம் விழுந்து விழுந்து சிரித்து,

''அத்தி ஜாதி'' என்றது.

''உங்கள் அத்தி மர ஜாதிக்குள் இன்னும் உள் பிரிவுகள் உண்டா?''

அந்த மரம், ''உன் கேள்வி எனக்குப் புரிந்து விட்டது. ஜாதி மனிதனுக்கு மட்டும் உள்ளதா, அல்லது உலக இயற்கையிலேயே உள்ளதா என்பதுதானே உன் கேள்வியின் அர்த்தம்'' என்றது.

சந்திரசேகரனுக்கு 'என்ன அரட்டை இந்த மரம்!' என்று தோன்றியது. அதோடு எம்.ஏ. படித்த தன்னைக்கூட இந்த மரம் காலை வாரி விட்டுவிடக்கூடிய திறமையுடன் இருக்கிறது என்றுபட்டது. இம்மரம் ஏதோவொரு சாபத்திற்கான ரிஷியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான். மரத்திடம், ''நீ நினைத்தது சரிதான். அதுதான் நான் கேட்க விரும்பியது'' என்றான்.

அந்நேரம் பக்கத்து மரம் அவனிடம் பேசிய அத்தி மரத்தைப் பார்த்து, ''ஏ மூதி, எனக்குத் தூக்கம் வருகிறது. போதும் உன் அரட்டை'' என்றது.

இப்போது பேசியதும் மரம்தான் என்று கண்டு சந்திரசேகரனுக்குப் பயம் அதிகரிக்கலாயிற்று. இருள் பரவ ஆரம்பித்தது.

உடனே அத்தி மரம், ''வாயை மூடு'' என்று கத்தியது. பின் சந்திரசேகரனிடம் சொல்லிற்று.

''ஏ, அப்பா சந்துரு, நீ எதுவும் யோசனை செய்ய வேண்டாம். அந்த மரம் அந்த இடத்திலிருந்து எழுந்து வர முடியாது. சும்மாவுக்கும் வாயால் பேசும் அவ்வளவுதான்.''

சந்திரசேகரன் கடிகாரம் பார்த்தான். மாலை ஏழு மணியாயிற்று. இருள் ஏறிவிட்டது. விளக்குகள் ஏற்றப்பட்டுவிட்டன.

''நீ இங்கு எத்தனை வருஷங்களாக இருக்கிறாய்?'' என்றான் சந்திரசேகரன்.

''நீ பிறப்பதற்கும் முன்பிருந்தே.''

''எனக்கு இன்று சரியாக நாற்பது வயது முடிகிறது'' என்றான் சந்துரு.

''எனக்கு எண்பது'' என்றது மரம்.

''நீ இவ்வளவு குஷியாக இருக்கிறாயே!'' என்றான் அவன்.

''என் பாட்டிற்கு நான் இருக்கிறேன். ஆனாலும் சில சிறுவர்கள் என்மேல் அவர்களது பெயரைச் செதுக்குகிறார்கள். சில காதலர்கள் அவர்களின் காதலிகளின் பெயர்களைச் செதுக்குகிறார்கள். நாசிமா, மும்தாஜ், சரோஜா, ஹேமா — இந்தப் பெயர்கள் எல்லாம் தெரிகிறதல்லவா? அவர்கள் செதுக்கும்போது கொஞ்சம் வேதனை ஏற்படும்.''

''ஏ, அத்தி மரமே! எனக்கும் மரமாக வேண்டுமென்று ஆசை'' என்றான் திடீரென சந்திரசேகரன்.

''உன் ஆசை நிறைவேறும். இப்போதிருந்தே பார்'' என்றது மரம்.

சந்திரசேகரன் நின்றபடியே வேர்விட ஆரம்பித்தான். முதலில் இரு கால்களும் வேர் விட்டன. இரு கால்களிலிருந்தும் புறப்பட்ட இரு வேர்கள் ஒன்று சேர்ந்து ஆணி வேராக மாறிற்று. ஆணி வேரிலிருந்து ஆயிரமாயிரம் வேர்கள் புறப்பட்டு நிலத்தில் இறங்கின. சந்திரசேகரனின் சந்தோஷத்திற்கு அளவில்லை. உடல் புல்லரித்தது. சுகமாக இருந்தது. 'ஆ ஹா ஹா', 'ஓஹோ ஹோ' என்று ஆனந்த ஒலி எழுப்பினான். அமெரிக்காவிலிருந்து வந்தபோது தாய் நாடு நெருங்குகிறது என்று உணர்ந்தவுடன் ஏற்பட்ட சுகம் இப்போதும் ஏற்பட்டது. வேர்கள் இறங்கும்போது ஏற்பட்ட குளிர்ச்சியால் ஏற்பட்ட உண்டான உணர்வுகளின் சுகானுபவத்தால் மெல்ல 'அம்மா' என்றான். மூன்று ஆண்டுகள் கேட்காத கன்னடத்தைக் கேட்டது போலவும், சரோஜாவின் துணையுடன் புதிய ஆனந்தம் மெய்யெல்லாம் பரவியதை அறிந்தான். இத்தகைய அனுபவத்தில் மூழ்கியவனுக்கு மீண்டும் தாயின் கர்ப்பப் பைக்குள் அடைக்கலம் கிடைத்தது போலவும், தாய்க் கோழி

யின், அரவணைப்பில் சுகம் அடையும் கோழிக் குஞ்சுகள் போலும் உணர்வுகள் எழுந்தன. இத்தகைய இன்ப அனுபவங்களில் மாய்ந்து கொண்டிருந்தவனுக்குத் திடீரென்று குடும்ப நினைவு வந்தது.

அவனுடைய குழந்தைகளின் ஷூஸ் அறுந்து போய்விட்டது. நான்கைந்து முறை ஸ்கூலுக்குச் சமாதானம் சொல்லியாயிற்று. அமெரிக்காவிலிருந்து வந்ததிலிருந்து சரியான வேலை கிடைக்காமல் அன்றாடச் சாப்பாடு மற்றும் செலவுகளுக்கே கஷ்டமாகிவிட்டது. குழந்தைகளுக்கு ஷூஸ் வாங்காவிட்டால் வகுப்பிலிருந்து வெளியில் அனுப்புவது நிச்சயம். இன்று, ஏதாவது செய்து, யாரிடமாவது கடன் வாங்கி குழந்தைகளுக்கு ஷூஸ்வாங்கிக் கொடுக்க வேண்டும். செட்டியார் கடை பாக்கியை மூன்று மாதங்களாக அடைக்கவில்லை. தான் அமெரிக்காவில் இருந்தபோது தன் மனைவி வசம் கடைச் சாமான் வாங்கும் பொறுப்பு இருந்ததால், செட்டியார் தன்னிடம் கேட்காமல், அவளிடமே கடனைத் தீர்க்கக் கேட்கிறான். ரேஷனுக்கும், தினம் பாலுக்கும் பணமில்லாமல், மனைவியைத் திட்டுவது அன்றாட நடப்பாயிற்று. இதெல்லாம் நினைப்புக்கு வந்தாலும், குழந்தைகளுக்கு ஷூஸ் ஏற்பாடு செய்யும் நினைவு வந்தவுடன், நடக்க விரும்பியவனை வேர்கள் தடுத்தன. அவ்வளவு நேரத்தில் அவன் வேர்களும் அத்தி மரத்தின் வேர்களும் பின்னிக் கொண்டன. சுமார் பத்து பதினைந்தடி அவன் வேர்கள் இறங்கியிருக்க வேண்டும். சந்திரசேகரன் அங்கும் இங்கும் அசைந்து பார்த்தான். கால்களை எடுக்க முயன்றான்.

மரத்தைப் பார்த்து, ''ஏ, மரமே! நான் வீட்டுக்குப் போகாவிடில், குழந்தைகளுக்குத் தொந்தரவு. என்னை வீட்டுக்குப் போக விடு'' என்று வேண்டிக் கொண்டான்.

அதற்கு மரம், ''என்ன மனுஷனய்யா நீ? நேரத்துக்கு ஒரு பேச்சு பேசுகிறாய். எது இருக்கிறதோ அது வேண்டாம் என்றும், எது இல்லையோ அது வேண்டுமென்றும் தோன்றுகிறது உனக்கு. நீ கேட்பதெல்லாம் கிடைக்கும் என்று நினைக்கிறாயா என்ன? உன்னிடம் பேசிப் பயன் இல்லை. இனிமேல் உன் பேச்சு எனக்குப் புரியாது. என் பேச்சு உனக்குப் புரியாது!'' என்று கூறி மௌனமாயிற்று.

சந்திரசேகரன் வேண்டிப் பார்த்தான். அங்கலாய்த்தான். கெஞ்சிப் பார்த்தான். அழுதான். ஏதும் பிரயோஜனமில்லை.

நான் மரமாகிவிட்டேன். இனி மனிதனாக முடியாது என்று பயந்து நடுநடுங்கினான். ''ஹோ ...... யாரய்யா அங்கிருப்பது, நான் செத்தேன், செத்தேன்'' என்று கதறினான்.

லால்பாக் வாசலை மூடும் நேரமாயிற்று. இவனது கூக்குரல் கேட்டு அங்கு வந்த லால்பாக் தோட்டக்காரன், கண்ணீர் சொரிந்தபடி காட்சி தந்த சந்திரசேகரனைப் பார்த்து, ''என்னய்யா, என்ன ஆயிற்று? புழுகிழு கடித்துவிட்டதா?'' என்றான்.

சந்திரசேகரன் வாட்சை கழற்றித் தோட்டக்காரனிடம் கொடுத்து, ''இந்தாப்பா, என்னிடம் வேறு பணம் ஏதும் இல்லை. நான் மரமாகிக் கொண்டிருக்கிறேன். இந்தக் கடிகாரத்தை உன்னிடம் கொடுக்கிறேன். காந்திப்ஜார் என்ற இடத்துக்குப் போய் கனரா பாங்குக்கு அடுத்த வீட்டிலிருக்கும் என் நண்பன் மகேஷைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி உடனே அழைத்து வா'' என்றான்.

அதற்குத் தோட்டக்காரன், ''என்ன இப்படி தமாஷ் பண்ணுகிறீர்கள். வீட்டுக்குப் போங்கள். நான் வாசல் மூட வேண்டும்!'' என்றான்.

''என் கால்வேர் விட்டிருக்கிறது. என்னைச் சற்று அசைத்துப் பார்!'' என்றான் சந்திரசேகரன்.

தோட்டக்காரன் அசைத்தான். சந்திரசேகரனின் வேர் அசையவில்லை. ''நான் இப்படிப்பட்ட ஆச்சர்யத்தைப் பார்த்ததே இல்லை. உங்கள் சிநேகிதனை அழைத்து வருகிறேன்'' என்று தோட்டக்காரன் ஓடினான்.

மனித நடமாட்டமற்ற லால்பாக்கின், கிளாஸ்ஹௌஸ் பக்கத்தில் வேர்விட்ட சந்திரசேகரன் அத்தி மரத்தை நோக்கி மீண்டும் வேண்டிக் கொண்டான். அத்தி மரம் அதன்பின் பேசவே இல்லை. சந்திரசேகரன் தன்னை சபித்துக் கொண்டான். எல்லா தெய்வங்களையும் நினைத்து வேண்டினான். தன் மீது புதிய முளைகள் தோன்றுகின்றன. நான் மரமாகிக் கொண்டிருக்கிறேன். இனி மேல் தன் பேச்சு யாருக்கும் பொருள் விளங்காது. ஏகாந்தத்திலிருந்து தப்பிக் கொள்ளப் போய் இன்னொரு ஏகாந்தத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டி வந்துவிட்டது. இனி குழந்தைகள் பரதேசிகளாகிவிடுவார்கள். அவர்கள் எப்படி ஸ்கூலிற்கு போவார்கள் என்று எண்ணிப் பரிதவித்து நடுங்கினான். தோட்டக்காரன் வரும் முன்பு வேர்கள் இன்னும் ஆழத்தில்போய்விடுமே. தான் இன்னும் கொப்பும் கிளையும் விடுவது மட்டும் பாக்கி. இனி தன் பேச்சு சக்தியும் போய்விடலாம். நாற்பது வருஷம் வாழ்ந்த காலத்தில் தான் சாதித்தது என்ன என்று யோசித்து அதிர்ந்து. அழுதான் சந்திரசேகரன்.

அரசியல்வாதி: டூ வீலரில் போகிறவர்கள் மட்டுமல்ல, சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது 'எம்.எல்.ஏ'க்களும் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று சட்டம் போட வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன்.

— கே. எஸ். வேலுச்சாமி.

அவன் எவ்வளவுநேரம் அப்படியே இருந்தானோ, ஒரு யுகம் கழிந்ததுபோல் உணர்ந்தான். அதற்குள் நண்பன் மகேஷ் வர, சந்திரசேகரன் தனக்கு சம்பவித்ததை எல்லாம் சொன்னான். மகேஷ் நம்பவில்லை. மகேஷும், தோட்டக்காரனும் சேர்ந்து, சந்திரசேகரனை மேலே இழுத்தார்கள். இப்போது மகேஷ் நம்ப வேண்டியவனானான். மகேஷுக்கு அத்தி மரத்திற்கருகில் நிற்பதற்கும் பயமாக இருந்தது. ''என்ன பண்ணுவது?'' என்று கேட்டான் மகேஷ்.

''நீங்கள் இருவரும் சேர்ந்து என் கால்களை வெட்டி எடுங்கள்!'' என்றான் சந்திரசேகரன்.

''அது முடியாது. அப்படிச் செய்தால் ரத்தம் வெளியேறி நீ இறந்து போவாய்'' என்றான் மகேஷ்.

''ஏதாவது செய்ய வேண்டுமே! ஓடிப் போய் எம். எல். ஏ. சங்கப்பனை பார்த்து எல்லா இன்புளுயன்சும் செய்து மிக நல்லதொரு சர்ஜனை வேகமாக இங்கு அழைத்து வா. போ. தயவு செய்து....'' என்று சந்திரசேகரன் அங்கலாய்த்தான்.

மகேஷ் தன் பால்ய காலத்திலிருந்தே நண்பனாக இருப்பவனுக்கு ஏதாவது செய்து காப்பாற்ற வேண்டுமென்று, தோட்டக்காரனை அங்கேயே இருக்கச் சொல்லி வேகமாய்ப் புறப்பட்டான்.

நம்புவதற்குச் சாத்தியமற்ற இவ்விஷயத்தை ஒவ்வொருவருக்காய்ச் சொல்லி, டாக்டரை அழைத்து வரும்போது மத்திய ராத்திரியாகிவிட்டது. விக்டோரியா ஆஸ்பத்திரியின் மிகப் பெரிய சர்ஜன்கள், அனஸ்தீஸியா கொடுப்பவர்கள், நர்ஸுகள் போன்றோர் மொபைல் வானில், ஆபரேஷனுக்கு வேண்டிய எல்லாக் கருவிகளையும் கொண்டு வந்தனர். சந்திரசேகரனுக்கு மேல் ஒரு டென்ட் எழுப்பி அவனைச் சோதனை செய்து ரத்த டிரான்ஸ்ப்யூஷனுக்கும் ஏற்பாடு செய்து அவனுக்கு அனஸ்தீஸியா கொடுத்து அவன் கால்களை வெட்டி எடுத்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் எல்லாம் அவனைப் பற்றியே செய்தி. அவனுக்கு பிரக்ஞை வந்தபோது அனஸ்தீஸியா கொடுத்து என்ன செய்திருந்தார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை. பிறகு கால்வலி மற்றும் பாண்டேஜ் போன்றவற்றால் அவனுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்தான். அவன் மக்களும் மனைவியும் அவனைப் பார்க்க தினம் தினம் வந்தார்கள். ஒருமாதம் கழித்து அவன் ஊன்று கோல்கள் துணையுடன் நொண்டி நொண்டி வீட்டுக்கு வந்தபோது அவன் மனைவி அவனைப் பார்த்து, ''இன்னும் இரண்டு தினம் லால்பாக்கில் அப்படியே நின்றிருக்கக்கூடாதா? லட்சம்பேர் உங்களைப் பார்க்க டிக்கெட் எடுத்து வந்திருப்பார்களே. உங்களுக்கும் சம்பாதிக்க ஒரு தொழில் கிடைத்த மாதிரி இருந்திருக்கும். இப்போது பாரும் கடன்தான் மிச்சம். சாப்பாட்டுக்கும் வழியில்லை. காலும் இல்லை!'' என்றாள்.

அவன் கண்களிலிருந்து பொலபொல வெனக் கண்ணீர் வடிந்தது.

சந்திரசேகரனுக்கு 'மரமாகவே நின்றிருந்தால்.....' என்று தோன்றியது.

அடுத்த இதழில்...

பலூன் மருத்துவம்



* இருதய நோய் சஸ்திர சிகிச்சையில் அதிசயமான புதிய திருப்பம்!

* பாரதத்தில் நடந்த முதல் பலூன் சிகிச்சை!

கர்நாடகா சிறப்பிதழ் — 2

கௌரவ ஆலோசகர்: **சுஜாதா**

* எஸ். ராஜகோபால், கும்பகோணம்.

? இன்னும் பன்னிரண்டு வருடங்களுக்குள் தமிழகத்திலுள்ள அனைவருக்கும் வீடு கட்டித் தரப் போகிறார்களாமே! மக்கள் தொகை ராக்கெட் வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்நாளில் இது எப்படிச் சாத்தியமாகும்?

! ஏதோ ஒரு பேச்சுக்குச் சொன்னதைப் போய் இத்தனை சீரியஸாக எடுத்துக் கொள்கிறீர்களே? இதுபோல் எவ்வளவோ சொல்கிறார்கள்! குறை சொல்லாமல், கொடுத்த தொகைக்காக நன்றி பாராட்டுகிறார்களே ..... அங்கேதான் நான் கடவுளைக் காண்கிறேன்!

* எஸ். ஆரோன்பாபு, திருச்சி—17.

? படித்தவர்களைவிட பாமரர்களுக்குத்தான் அரசியல் உணர்வு அதிகம்!' என்று அமைச்சர் ஆர். எம். வீ. கூறியிருப்பது குறித்து?

! நூற்றுக்கு நூறு உண்மை. அரசியல் விஷயத்தில் பாமரர்கள் சமயத்தில் ஏமாந்து போனாலும் போவார்களே தவிர, ஒருபோதும் விலை போக மாட்டார்கள். ஆனால் படித்தவர்கள், எப்போதும் ஏமாந்து போக மாட்டார்கள் என்பது உண்மைதான் என்றாலும் பெரும்பாலும் விலை போகத் தயங்காதவர்கள். அதனால்தான் தாயுமான சுவாமிகள் கூட 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று பாடியிருக்கிறார்.

அமைச்சர்கள் கலைஞரை தரக்குறைவாகத் தாக்குவது ஏன்?

* தாமல் கண்ணன், சென்னை—54 *

? சமீபத்தில் ஒரிஸாவில் பெற்ற மகனை விற்ற அன்னையைப் பற்றிப் படித்திருப்பீர்கள் — அதுவும் ஏழு ரூபாய்க்கு! காரணம்? ஏழு நாள் பட்டினியைத் தவிர்க்க! இதனை அதிகாரிகள் அறியார்களா? பிரதமர் நேரில் பார்த்துத்தான் நிவாரணம் அளிக்க வேண்டுமா? நாம் இந்தியாவில்தான் வசிக்கிறோமா? அல்லது எத்தியோப்பியாவில் வசிக்கிறோமா?

! ஒரிஸா மாநிலத்திலுள்ள கைரா, தோபி போன்ற பல கிராமங்களில் நிலவும் கடுமையான பஞ்சத்தை முன்னிட்டு அவர்களுக்கு உதவித் தொகை வழங்க ஒரிஸா அரசு உத்தரவிட்டது. தங்களுக்காக அரசு கொடுக்கும் உதவித் தொகை எவ்வளவு என்பதுகூட அந்தமக்களுக்குத்தெரியாது. அந்த அளவுக்கு அறியாமை மிகுந்த மக்கள் அவர்கள். அது கொடுமை! அப்படிப்பட்ட அப்பாவி மக்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவித் தொகையையும் முழுமையாகக் கொடுக்காமல் பாதிக்குமேல் தங்கள் பாக்கெட்டுகளில் போட்டுக் கொண்டார்களே அதிகாரிகள், கேட்கும்போதே ரத்தம் கொதிக்கிறது. அது கொடுமையிலும் கொடுமை. இந்த நிலையிலும் அந்த மக்கள், அந்த அதிகாரிகளைக் குறை சொல்லாமல், கொடுத்த தொகைக்காக நன்றி பாராட்டுகிறார்களே ..... அங்கேதான் நான் கடவுளைக் காண்கிறேன்!



* எதியோப்பியா விசிட்?



* சொன்னதைச் செய்யாதவர்

* உமார்த்தி, கோவை—43.

? பரதன் பிரஸ்ஸில் உமது கேள்வி பதில்கள் அச்சாகின்றனவே; பரதனைப் போல் தியாகமும், அன்பும் உம்மிடம் உள்ளதா?

! ஸாரி, எனக்கு இராமன் இல்லை!

* க. தியாகராசன், நெய்வேலி.

? செப்டம்பரில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவில்லை என்றால் தம் பதவியை ராஜிநாமா செய்துவிடுவதாகப் ப. உ. ச. கூறினாரே, இப்போது செய்வாரா?

! முன்பு, கருணாநிதி நிலம் வாங்கியதாகக் கூறி அது நிரூபிக்கப்படாவிட்டால் தான் ராஜிநாமா செய்யத் தயார் என்றும் சவால் விட்ட முன்னாள் அமைச்சர் குழந்தைவேலு காட்டிய பத்திரங்களெல்லாம் போலியானவை என்று சபாநாயகரே தீர்ப்பு வழங்கிய பின்னரும் அவர் ராஜிநாமா செய்யவில்லையே! அதுபோல்தான் ப. உ. ச. வின் அறிவிப்பும்!

* எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? குழந்தையின் சிரிப்பு, குமரியின் சிரிப்பு — எதில் கிளுகிளுப்பு அதிகம்?

! குழந்தையின் சிரிப்பில்தான்! 'இதோ பூவாய்ச் சிரிக்கும் இந்தக் குழந்தை என் குழந்தை' என்று ஆண் மனம் கம்பீரப்படும்

போது ஏற்படும் கிளுகிளுப்புக்கு வேறு எந்தக் கிளுகிளுப்பும் இணையாகாது.

* த. சதாசிவம், கவுந்தப்பாடி.

? சார், 'பிராமணர்கள் தமிழர்கள் இல்லை; ஆரியர்கள்' என்று என் மாமா முத்துசாமி சொல்கிறார். அவர் சொல்வது சரியானதா? உங்களிடம் ஒரு தெளிவான விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

! ஒருத்தனை பிராமணன், தமிழன் என்று பார்ப்பதை விட அவன் மனிதனா என்று பார்க்கும் பார்வைதான் சிறந்தது. அந்த வகையில் பார்த்தால் எல்லா ஜாதிகளிலும் மனிதனில்லாத ஜென்மங்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அதுதான் அவமானத்திற்குரிய விஷயம்.

* திருமதி உமா லட்சுமணன், அருப்புக்கோட்டை.

? 'நீங்கள் கேட்டவை' பகுதியில் பெண் வாசகர்களுக்கென்று குறிப்பிட்ட இட ஒதுக்கீடு ஏதும் கிடையாதா?

! இங்கு கேள்விகளுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறதே தவிர, கேட்பவர்களுக்கு அல்ல; மன்னியுங்கள்!

*. எம். கல்யாணசுந்தரம், நாச்சியார் கோவில்

? அமைச்சர்கள் தங்கள் தகுதியை உணராமல் கலைஞரைத் தரக் குறைவாகப் பேசுகிறார்களே, ஏன்?

! பூனை கொஞ்சம் இளைத்துப் போனால் எலி 'வாங்க மச்சான்' என்று கூப்பிடுமாம். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

* சா. ரமேஷ்பாபு, லால்குடி.

? ஜப்பானிலிருந்து தமிழக அரசு புதிதாக வாங்கியுள்ள கப்பலுக்குத் 'தமிழ் அண்ணா' என்று எம். ஜி. ஆர். பெயர் சூட்டியிருப்பது எதைக் காட்டுகிறது?

! 'அண்ணா' என்ற பெயர் சரி. அது என்ன 'தமிழ் அண்ணா'? அதுதான் எம். ஜி. ஆரின் அண்ணாயிஸத்தைப் போலவே தலையைப் பிய்த்துக் கொள்ள வைக்கிறது.

* எல். ஜெயசேகர், சென்னை—5.

? தனியார்கள் மருத்துவ, எஞ்ஜினியரிங் கல்லூரிகள் துவக்குவதை ஆதரிக்கலாமா?

! நாம் ஆதரிப்பதும் எதிர்ப்பதும் ஒரு பக்கம் கிடக்கட்டும். தனியார் ஆரம்பிக்கிறார்கள். அரசும் ஆதரிக்கிறது. லாபமில்லாவிட்டால் செய்வார்களா?

* எம். இராசன், மோரன உள்ளி.

? நகைக்கடைத் தராசு, காப்பித் தூள் கடைத் தராசு, ரேஷன் கடைத் தராசு, பௌதிகத் தராசு.... இவற்றில் எதுவாக இருக்க உங்களுக்கு விருப்பம்?

! என்றென்றும் உங்கள் தராசாக!

* வே. பதி, சென்னை—5.

? 'பீர்' குடிப்பவராக காந்தியடிகளைச் சித்திரித்துக் காட்டிய அமெரிக்கத் திரைப்படத்தைப் பற்றி.... ஒரு சிறு கண்டனத்தைக் கூடத் தெரிவிக்கவில்லையே இந்தியா? இது எதைக் காட்டுகிறது?

! 'பிளேபாய்' பத்திரிகைக்காரர் தயாரித்த விளம்பரப்படம் அது. நாம் கண்டனம் தெரிவிக்கும் நபருக்கும் ஒரு தகுதி வேண்டாமா? அது அந்த 'பிளேபாய்'க்காரருக்கு இல்லை. அதனால்தான் இந்தியா மௌனம் சாதிக்கிறது!

* திருமதி அஞ்சலை மாரியப்பன், பிளாய்.

? ஐஸ் வைப்பது, காக்காய் பிடிப்பது, அரசியலில் அதிகமா? திரையுலகில் அதிகமா?

! ஐஸ் வைப்பதென்பது சாதாரண அலுவலகங்களில்கூட சகஜமாயிற்றே!



* குழந்தைவேலு வழியில்...."



* மறுபடி குழப்புகிறார்



* "பாமரரே மேல்...."



* இளைத்த பூனை

ரூ 10 பரிசு பெறுபவர்

தாமல் கண்ணன்
E 14/1, HVF Estate,
ஆவடி, சென்னை—54.

நீங்கள் கேட்டவை

தராசு

விடியா விடுதலை விடிவதெந்நாள்?

பாரதிதாசன்

(இந்தக் கவிதையை 1947-ஆம் ஆண்டு 'பொதுநலம்' என்ற பத்திரிகையில் பாவேந்தர் பாரதிதாசன் எழுதியுள்ளார். அவர் அன்று எழுதியது இன்றும் அப்படியே பொருந்துகிறதல்லவா!)



இனி இந் நாட்டில் இங்கிலாந்தின்
கொடி பறக்காது கோலோச்சாது.
எண்ணிலா வீரர்கள் எண்ணிலாத் தீரர்கள்
கண்ணீர் செந்நீர் கலங்கண்டதன்பின்
வந்தது விடுதலை, உரிமை பெற்றது.

உடல் பொருள் ஆவி உவந்தீந்தவரின்
ஈகத்தினுல்தான் எய்தினோம் விடுதலை.


ஈவதும் பெறுவதும் இல்லை விடுதலை.
சாவு ஆயிரத்தைத் தந்து பெற்றது.



வ. உ. சி, வாஞ்சி, வ. வே. சு, பாரதி
போன்ற கிளர்ச்சியின் புரட்சியாளர்கள்,
மானம் மிகுந்த வாழ்வினர், திலகர்
காந்தி, பகத்சிங், சரோஜினி குடும்பம்
ஈ.வெ.ரா, சிங்கார வேலனார், ஜீவா
இன்னும் உயிரை எண்ணாக் கடமையர்
ஆயிரம் ஆயிரம் பேரை அளித்துப்
பெற்ற விடுதலை பித்தர்தம் கையில்
சிக்கிக் கொண்டது! திராவிடம் அழியும்!
சாதிமதத்தின் சழக்குகள் மிகுந்திடும்!
இனவெறியாட்டம் பிணந்தின்னி யாகும்!
மொழிப்போர் மூளலாம், சமதருமத்தின்
விழிதிறவாது. வேற்றுமைச் சிக்கல்
மாநிலந்தோறும் வெறுப்பும் பகையும்
கால்கொள்ளும்; ஏழை எளியவர் கடுந்துயர்
உள்நாட்டவரால் கொள்ளைநோய் ஆகும்.




இவற்றை எப்படி இப்பொழுதேதீர்
செப்பலாம் என்று சினப்பின், ஆட்சி
ஒப்பினவரையும் உட்கார்ந்தவரையும்
நாற்பதாண்டாய் நான் நன்கறிவேன்.
அறியாமையும் செருக்கும் கைகோத்து
அரியணை அமர்கையில் அண்ணலே ஒதுங்கினர்.
உழுதவன் இல்லை விதைத்தவன் இல்லை
மக்களுக்குள்ள சிக்கலறுக்காமல்
எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை
சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார்
இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே.



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


Coorg in
KARNATAKA
Only once-in-a-while you come across a virgin hill resort that's fresh, unspoilt, uncrowded.
Coorg in Karnataka
Stay at KSTDC's Hotel Mayura Valley View at Mercara. For just Rs. 50 to Rs. 70 a day (For students, excellent dormitory accommodation at Rs. 10 per day. For business, conference facilities also available)
Take in the wooded valleys, orange groves, coffee, cardamom plantations. And the picturesque Abbe Falls.
At Talakavery, catch the distant shimmer of the Arabian Sea. From here, travel to Nagarhole for wild life. On your way, discover the historic and architectural wonders at Mysore, Belur and Halebid.
For more details
* 10/4, Kasturba Road, Bangalore- 560 001. Phone: 578901 (4 lines) * No. 9, St. Mark's Road, Bangalore-560 001. Phone: 579139; * Karnataka Pavilion, World Trade Centre, Bombay. Phone: 215151 Extn. 252; * Cauvery Karnataka Upahar, No. 7, Metropolitan Building, Jawaharlal Nehru Road, Calcutta-700 01
Karnataka Tourism